
2014, March 16 - 31

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014








# ஜெனீவாவில் இந்தியா எவ்வாறு நடந்துகொள்ளும்?

இலங்கை உடன்பாடுகளை மீறுதல் - ஒரு தொடர்கதை

வெளியிலிருந்து விரைவான தீர்வுகளை எதிர்பார்த்தோருக்கு ஏமாற்றம்

அமெரிக்காவின் எதிர்காலப்போக்கு குறித்து கிளம்பும் சந்தேகங்கள்

உக்ரெயின் நெருக்கடியை முடிவுக்குக்கொண்டு வருவது எவ்வாறு?

தமிழகத்தில் மாறிவீசும் கூட்டணிக்காற்று

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIRAKESARI ONLINE
வீரகேசரி
www.virakesari.lk

வீரகேசரியின் அப்பிள் மற்றும்
அண்ட்ரோயிட் டெப்லட்டுக்கான பிரத்தியேக அப்ளிகேசன்





Feedback and Comments:
onlinenews@virakesari.lk | +94-11-7322744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் நாம் நினைவில்
வைத்திருக்கப்போவது
எமது எதிரிகளின்
வார்த்தைகளை அல்ல.
எமது நண்பர்களின்
மௌனத்தையே


- மார்ட்டின் லூதர் கிங்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமகாலம்
2014, மார்ச் 16 - 31
பக்கங்கள் - 68









12 கடும் நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்ட காரணம் என்ன?
18 உடன்பாட்டை மீறுதல் - தொடர்கதை
24 மீண்டும் ஒரு சுற்று ஜெனீவா
29 விரைவான தீர்வுகளை எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம்
32 சர்வதேச விசாரணையை ஆதரிப்பதில் இந்தியாவுக்குள்ள சிக்கல்
34 உக்ரெயின் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவது எவ்வாறு?
40 இத்தடவை ஜெனீவாவில் இந்தியா எவ்வாறு நடந்து கொள்ளும்?
45 தமிழகத்தில் மாறி வீசும் கூட்டணிக்காற்று
54 மீறப்படும் கடற் சட்டங்களும் கடற்தொழில் கட்டளைகளும்
59 காதல் தோல்வியின் குறியீடு தேவதாஸ் நாகேஸ்வரராவ்
66 மலையகத்தேசியம்







*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# ஜெனீவாவும் தமிழர்களின் நலன்களும்

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. சிங்களவர்கள் மாத்திரமல்ல தமிழர்களும் இதனைக்கடுமையாக எதிர்க்கின்றார்கள். பிரேரணையைப் பலவீனப்படுத்த அல்லது அதனைத் தோற்கடிக்க அரசாங்கம் ஆவேசமாகக்களத்தில் இறங்கியுள்ளது. இதற்காக முழு அளவில் இராஜதந்திர நகர்வுகளை அது முன்னெடுக்கின்றது. பிரேரணையை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரமாக இராஜதந்திரச் சந்திப்புகளை நடத்தி வருகின்றது. இந்தப் பலப்பரீட்சையின் முடிவு எவ்வாறு அமையப்போகின்றது என்ற கேள்விக்குறியுடன் மக்கள் உள்ளார்கள்.

ஜெனீவா பிரேரணையைப் பொறுத்தவரையில், அதனை முன்வைத்தவர்களோ அல்லது அதற்கு எதிராக வாதாடப் போகிறவர்களோ தமிழர்கள் அல்ல. அதாவது ஜெனீவாவில் தமிழர்கள் ஒரு தரப்பல்ல. ஆனால், பிரேரணை தமிழர்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டது என்பதால் இதிலிருந்து தமிழர்கள் ஒதுங்கியிருந்துவிட முடியாது. தமிழர்களின் பாதுகாப்பை, அவர்களுடைய இருப்பை உறுதிசெய்யும் வகையில் பிரேரணை அமைய வேண்டும் என்பதில் தமிழர் தரப்பு அக்கறை காட்டுவது இயல்பானதே. இந்த அக்கறையுடன் தமிழர்கள் பிரேரணையை அணுகும் நிலையில், இலங்கை அரசின் அணுகுமுறை முரண்பாடானதாக அமைகின்றது. தமிழர் தரப்பு நியாயங்களை ஏற்றுக்கொள்வதற்கு அரச தரப்பு தயாராயில்லை. இரு தரப்பினருக்கும் இடையில் காணப்படும் இந்த முரண்பாடு ஜெனீவாவில் இன்று சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

ஜெனீவாவில் முன்வைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் பிரேரணையை அரசாங்கத் தரப்பும் நிராகரித்திருக்கின்றது. தமிழர் தரப்பும் நிராகரித்திருக்கின்றது. ஆனால், இரு தரப்பினரும் இதனை நிராகரித்திருப்பதற்கான காரணங்கள் முரண்பாடானவை. அமெரிக்காவின் பிரேரணை உள்நாட்டு விவகாரங்களின் அதிகளவில் அத்துமீறித் தலையை நுழைப்பதாக உள்ளது என்பதுதான் அரசாங்கத் தரப்பின் குற்றச்சாட்டு. மறுபுறத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாக பிரேரணை அமையவில்லை என்பதும் அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசத்தைக் கொடுப்பதாக பிரேரணை அமைந்திருக்கின்றது என்பதும்தான் தமிழர் தரப்பின் குற்றச்சாட்டு. இரண்டு தரப்பினரும் துருவமயப்பட்ட நிலையில் இருந்துகொண்டுதான் பிரேரணையை விமர்க்கின்றார்கள்.

உள்நாட்டு செயன்முறையின் மூலமாக பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்ற நிலையில்தான் சர்வதேசத்தை நம்பவேண்டிய அவலம் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. பிரேரணை கடுமையானதாக இல்லை என்ற ஆதங்கம் தமிழர்களுக்கு ஏற்பட்டமையும் இதனால்தான். இந்த நிலையில்தான் தமிழ் மக்களின் நியாயப்பூர்வமான பிரதிநிதிகளாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. சர்வதேச மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளிலிருந்து படையினர் வெளியேறி, அவற்றின் உரிமையாளர்களிடம் நிலம் வளங்கப்படவேண்டும் என்பன பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை கூட்டமைப்பு வலியுறுத்திவருகின்றது. ஜெனீவா பிரேரணை தமிழர்களுக்கு எதையாவது கொடுப்பதாக அமைய வேண்டுமானால், இந்த இரு விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று ஜெனீவாவில் கொண்டுவரப்படுவது இதுதான் முதன்முறையல்ல. இது மூன்றாவது பிரேரணை. முதலிரண்டு பிரேரணைகளும் தமிழர்களுக்கு எதனையும் கொடுத்துவிடவில்லை. காலஅவகாசத்தைக் கொடுத்ததன் மூலம் அரசாங்கத்தைப் பாதுகாத்ததாகவே அந்தப் பிரேரணைகள் அமைந்திருந்தன. அதாவது பிரேரணைகள் கொண்டுவரப்படுவதும் காலஅவகாசத்தைக் கொடுப்பதும் வெறுமனே சம்பிரதாயபூர்வமான சடங்காகிவிட்டதா என்ற கேள்விதான் இங்கு எழுகின்றது. களநிலையில் சொல்லக்கூடியளவுக்கு எந்த மாற்றத்தையும் இது ஏற்படுத்தவில்லை. அதேவேளையில், தென்னிலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் தமது செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஜெனீவா களம்தான் அரசுக்குக் கைகொடுக்கின்றது. போர், பின்னர் போர் வெற்றி, இப்போது ஜெனீவா சமர்என்பன அரசின் தேர்தல் வெற்றிக்கு கைகொடுக்கும் ஒன்றாகிவிட்டது.

இந்தப்பின்னணியில் தமிழர்களுடைய நிலை என்ன? யார்என்னதான் சொன்னாலும் ஜெனீவா இராஜதந்திர நகர்வுகளில் வல்லாதிக்க நாடுகளின் நலன்கள் தங்கியுள்ளன. ஈழத் தமிழர்களுக்காக அமெரிக்காவோ அல்லது மற்றைய நாடுகளோ ஜெனீவாவில் இறங்கவில்லை. தமது நலன்களுக்காக ஈழத் தமிழர்களின் விவகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது. இதில் தமிழரின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் நுணுக்கமாக செயற்படவேண்டியவர்களாகவே தமிழர் தரப்பினர் உள்ளனர்.

போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவடையவிருக்கும் நிலையிலும் இலங்கையின் இரு இனங்களும் அரசியலில் துருவமயப்பட்ட நிலையில்தான் உள்ளன என்பதை ஜெனீவா களம் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையை ஜெனீவா முடிவுக்குக் கொண்டுவருமா? ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## 'இதெல்லாம் சகஜமப்பா'

கடந்த சமகாலம் ஆசிரியர் தலையங்கம் படித்தேன். ஜெயலலிதாவின் தமிழீழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் ஆசிரியர் ஆழமாகவும் பல்வேறுபட்ட அனுபவங்களோடும் அலசியிருந்தார். தேர்தல்களுக்காக ஈழத்தமிழர்களை, அவர்களின் போராட்டத்தை இந்தியா குறிப்பாக தமிழக அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் காலத்துக்குக்காலம் பயன்படுத்துவது அவர்களின் வீர முழக்கங்கள், அதிரடி அறிக்கைகளைப் பார்த்து பாவப்பட்ட ஈழத் தமிழர்களாகிய நாம் மெய்மறப்பதும் வழக்கமானதே.

இந்திய-தமிழக அரசியல்வாதிகள் எம்மை காலத்துக்குக் காலம் ஏமாற்றுவதும் நாமும் அவர்களிடம் ஏமாறுவதும் ஒன்றும் புதுமையல்லவே. இதனை ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் கவுண்டமணி சொன்னதுபோல் சொல்வதானால் 'அரசியலிலும் ஈழத்தமிழர் வாழ்விலும் இதெல்லாம் சகஜமப்பா' இதுதான் இப்போது ஜெயலலிதாவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடம்பெற்றுள்ளது. .

எஸ்.வேல்முருகன்,
பண்டாரிக்குளம், வவுனியா.

## பாகிஸ்தான் யதார்த்த நிலை

'பாகிஸ்தானின் எதிர்காலமும் தலிபான்களும்' எனும் தலைப்பில் சமகாலத்தின் கடந்த இதழில் வெளியாகியிருந்த கட்டுரையில் பாகிஸ்தானின் தற்போதைய இக்கட்டான அரசியல் சார்ந்த வன்முறை நிலைமைகள் பற்றி சர்வதேச புகழ்பெற்ற ஆய்வாளர் தாரிக் அலி தெளிவாக எடுத்துரைத்துரைத்திருக்கிறார். உலகின் மிக ஆபத்தான நாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் யதார்த்த நிலைமையை உணர்த்துவதாக இந்தக் கட்டுரையின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. அத்துடன், அரசினதும் பாதுகாப்புத் தரப்பினதும் அசமந்தமான போக்கு பாகிஸ்தானில் மதம் என்ற போர்வையில் தீவிரவாதக் குழுக்களின் இயக்கத்துக்கு எவ்வாறு வலுச் சேர்க்கிறது என்பதையும் இந்தக்கட்டுரையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கணேசன் குருபரன்,
பொகவந்தலாவ.

## பாலுமகேந்திரா

சமகாலத்தின் கடந்த இதழில் வெளியாகியிருந்த 'பாலுமகேந்திரா அழியாத கோலம்' என்ற கட்டுரை பாலுமகேந்திரா எனும் ஒப்பற்ற (சினிமா) படைப்பாளியின் சினிமாத்

## சென்னை மெயில்

கடந்த சமகாலம் இதழின் அட்டைப்படக் கட்டுரையாக வெளியிடப்பட்ட 'தமிழக அரசியலை புரட்டிப்போட்டிருக்கும் ஒரு தீர்ப்பு' என்ற சென்னை மெயில் கட்டுரை ரஜீவ் காந்தி கொலை வழக்கின் தண்டனை அனுபவித்துவரும் ஏழு பேர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை மிகவும் விரிவான முறையில் தமிழக அரசியல் பின்புலத்தில் ஆராய்ந்திருந்தது. முத்தையா காசிநாதன் அனுப்பிவரும் சென்னை மெயில் தமிழக அரசியலை சிறப்பான முறையில் இலங்கை வாசகர்களுக்கு தந்துக்கொண்டிருக்கிறது. அவரின் பங்களிப்பு இடையறாது தொடர வேண்டும்

தம்பிமுத்து சரவணன்,
தம்பிலுவில்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைப் பிரவேசம் தொடக்கம் நிறைவு வரை விரிவாக சித்திரித்துள்ளது. அதில் உள்வாங்கப்பட்டிருக்கும் பல்வேறு விடயங்கள் நான் படிக்க புதுமையானவை யாகவே இருந்தன. குறிப்பாக, இந்தியாவின் யதார்த்த சினிமாவில் மலையாள திரைப்படத்துறையின் ஆரம்பகாலப் பங்களிப்புகள் பற்றிய தகவல்களை இதற்கு உதாரணமாக குறிப்பிட முடியும். பாலுமகேந்திரா பற்றிய சிறந்த பதிவாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

சிவலிங்கம் இராகவன், மட்டக்களப்பு.

## சத்தியமூர்த்தியின் கருத்துக்கள்

கடந்த சமகாலம் இதழில் வெளியான என்.சத்தியமூர்த்தியின் கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கும். கருத்துக்களுடன் உடன்பட முடியாதுள்ளது. அவரின் கருத்துக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை குற்றம் சாட்டுவதையும் குறைபிடிப் பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றதே தவிர, யதார்த்தத்தை உணர்ந்து கொண்டவராகத் தெரியவில்லை. தமிழ்க் கூட்டமைப்பு சர்வதேசத்திடம் முன் வைக்கும் கோரிக்கையினை உள்நாட்டிலிருக்கும் பிற சமூகத்தவர்களிடமும் அர சியல் தலைமைகளிடமும் முன்வைக்க வேண்டுமெனக் கூறுவது இவர் எந்தள வுக்கும் எமது நாட்டையும் அரசியல் தலைமைகளையும் புரிந்து வைத்துள்ளார் என்ற கேள்வியை எழுப்புகிறது.

தன் நாட்டின் குடிமக்களாகிய ஒரு சிறுபான்மையினத்தை அடக்கி, ஒடுக்கி அழித்து விட்டு, அதனை ஒவ்வொரு வருடமும் வெற்றி விழாவாகக் கொண்டா டிவரும் அரச தலைமையிடமும் வாய் திறந்தாலே இனவாதத்தைக் கக்கும் ஏனைய சிங்கள அரசியல் தலைமைகளிடமும் அரசுக்கு அடங்கி, ஒடுங்கி நடுங் கும் தலைமைகளிடமும் எமது கோரிக்கைகளை முன்வைப்பதால் என்ன பலன் கிடைத்து விடுமென சத்தியமூர்த்தி எண்ணுகின்றார்? தமிழனுக்காகப் பரிதாபப் பட்டு, குரல் கொடுக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்களத் தலைமைக ளையே சிங்களப் புலியெனக் கூறி சிறையிலடைக்கும், நாட்டை விட்டு விரட்டும் இந்நாட்டு அரசியல் தலைமைகளிடம் எந்த நீதியான செயற்பாட்டைக் கண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன் கோரிக்கைகளை இவர்களிடம் முன்வைக்க வில்லையென சத்தியமூர்த்தி கவலைப்படுகின்றார்?

தமிழரின் இன்றைய அவலநிலைக்கு, அகதி வாழ்க்கைக்கு, அழிவுகளுக்கு பங்காளியாகவிருக்கும் இந்தியா மனதுவைத்தால் தமிழனோ, தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ பிச்சைக்காரர்களைப் போல் சர்வதேசத்திடம் கையேந்த வேண் டிய தேவையில்லையென்பது சத்தியமூர்த்திக்கு தெரிந்திருந்தும் அவர் தெரியாம லிருப்பது போல் காட்டிக் கொண்டு தமிழர் தரப்பை குறை கூறுவதும் குற்றம் கண்டுபிடிப்பதும் ஒரு நாகரிகமான செயல் அல்ல.

சஞ்சயன் இராமலிங்கம், கொழும்பு-4.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 18
2014, மார்ச் 16-31

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



சகல மாற்றங்களும் வளர்ச்சியல்ல,
அதேபோன்றே சகல நகர்வுகளும்
முன்னோக்கியவையல்ல.


- எலன் கிளாஸ்கோ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



தினச் சம்பளமாக 1200 ரூபாவும் சாப்பாடும் கொடுத்தாலும் கூட எனது வயல்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர்களைப் பிடிக்க முடியாமல் இருக்கிறது. கம்பளையில் இருந்து தொழிலாளர்களைப் பிடித்துத் தாருங்கள் என்று அரசியல்வாதிகள் உட்பட பலரிடம் கேட்டேன். அவர்களால் முடியவில்லை.

சகல வெளிநாட்டு இறக்குமதிகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தான் அவற்றுக்கு மாற்றீடானவற்றை நமது நாட்டுக்குள்ளேயே தேடிக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பிரதமர் டி.எம்.ஜெயரத்ன



இலங்கைக்கு எதிராக எத்தனை தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டாலும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் சரியான பாதையில் செல்கின்றோம் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் உறுதியானதாகவே இருக்கும்.

பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க



நான் ஒரு உறுதியான ஐக்கிய தேசியக் கட்சிக்காரன். கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காகப் போராடுவேன்.

கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில்



போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தால், அவற்றுக்காக எவராவது மின்சாரக் கதிரைக்குப் போக வேண்டுமாக இருந்தால், அது நானாகவே இருப்பேன். ஏனென்றால், போருக்குத் தலைமை தாங்கியவன் நான், போரைத் திட்டமிட்டவன் நான். அதை வழிநடத்தியவன் நான், அதைக் கண்காணித்தவன் நான்.

சரத்பொன்சேகா



சில உறுப்பினர்களின் நடவடிக்கைகளுக்காக ஒரு கட்சியைப் பொறுப்பாக்க முடியாது. ஆளுங்கட்சியையும் எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த சில உறுப்பினர்கள் கூட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய சம்பவங்களுக்காக, சில உறுப்பினர்களின் செயல்களுக்காக ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சியையும் பொறுப்பாக்க முடியுமா? இந்தக் கட்சிகள் ஆயுதங்களுடன் திரிகின்றன என்று குற்றஞ்சாட்ட முடியுமா?

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



வடக்கில் இளம் பெண்கள் பலவந்தமாக இராணுவத்தில் சேர்க்கப்படுகிறார்கள். வீடு வீடாகச் சென்று இராணுவத்தினர் படையில் இணையுமாறு பெண்களை நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஏன் அவர்கள் பெண்களை மாத்திரம் திரட்டுகிறார்கள். ஏன் ஆண்களையும் திரட்டக் கூடாது?

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# உக்ரெயின் நெருக்கடியில் மொழிகளின் பங்கு

தீவிரமடையும் உக்ரெயின் நெருக்கடி மொழியின் முக்கியத்துவத்தை முன்னரங்கத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. கிறிமியாவில் உள்ள ரஷ்யமொழி பேசுப வர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை மாஸ்கோவுக்கு இருக்கிறதென்று கூறியே அங்கு தனது துருப்புக்களை அனுப்பியதை ரஷ்ய ஜனாதிபதி விளாமிடிர்புட்டின் நியா யப்படுத்தினார்.

பாரம்பரியமாக உக்ரெயினில் மேற்குப் பகுதியில் வாழ் பவர்களும் தலைநகர் கீவில் வாழ்பவர்களும் உக்ரேனி யன் மொழி பேசுபவர்களாக இருக்கின்ற அதேவேளை, (ரஷ்யாவுக்கு நெருக்கமாக) கிழக்குப் பகுதியிலும் தெற் குப் பகுதியிலும் வாழ்பவர்களும் சர்ச்சைக்குரியதாகியிருக் கும் கிறிமியன் குடாவில் வாழ்பவர்களும் ரஷ்யமொ ழியைப் பேசுபவர்கள்.

ஆனால், பெரும்பாலான உக்ரேனியர்கள் இருமொழிக ளையும் பேசக் கூடியவர்கள். நிலைமைகளைப் பொறுத்து அவர்கள் மொழிகளை மாற்றிக் கொள்கிறார்கள். தற்போது கிறிமியாவுக்குள் ரஷ்யத் துருப்புக்கள் படையெடுத்திருப் பதையடுத்தும் கீவில் ஐரோப்பிய ஆதரவு அரசாங்க மொன்று பதவியில் இருப்பதையடுத்தும் முன்னரைவிட அங்கு மொழி சம்பந்தப்பட்ட விவகாரம் அரசியல் மயப் படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கி றது.

''அரசியலைப் பொறுத்தவரை மொழிப்பயன்பாடு இப் போது ஒரு சமிக்ஞையாக மாறிவிட்டது. 'நீங்கள் எங்களு டனான அல்லது எங்களுக்கு எதிராகவா' என்பதே அந்த சமிக்ஞை'' என்று உக்ரெயின் சமூகவியலாளரான இறி யானா பெகேஷ் கினா ஏ.எவ்.பி. செய்தியாளரிடம் கூறி னார்.

உக்ரெயினுக்குள் படைகளை அனுப்புவதற்கு ரஷ்யப் பாராளுமன்றம் பச்சைக்கொடி காட்டிய பிறகு கீவ் நகரவா சிகளில் பெரும்பாலானவர்கள் உக்ரேனியன் மொழியை மாத்திரம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இது கிரெம்ளி னின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஒரு ஆட்சேபனை அறிகுறியாகும்.

பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி விக்டர் யானுகோ விச்சின் Regions Partyஐச் சேர்ந்த உறுப்பினர்கள் வழ மையாக ரஷ்ய, மொழியையே பேசுபவர்கள். அதே வேளை, முன்னாள் பிரதமரும் பிரபலமான முன்னாள் எதிரணி தலைவியுமான யூலியா ரிமோஷென் கோ ரஷ்ய மொழியைச் சரளமாகப் பேசக் கூடியவர். ஆனால், ரஷ்ய ஊடகவியலாளர்களுக்கு வழங்கும் நேர்காணல்களில்கூட ரஷ்ய மொழியைப் பேசுவதற்கு அவர் மறுக்கிறார்.

தேசியவாத சுவோபோடா (சுதந்திர) கட்சியின் தலைவ ரான ஒலெக் ரியாக்னிபொக் கீவில் கடந்த மாதம் அரசியல் கிளர்ச்சி உச்சநிலையில் இருந்த வேளையில் ரஷ்ய




தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்கான நேர்காண லின் போது உரைபெயர்ப்பாளரின் உதவியைக் கோரி னார்.

ஆனால், பேசுபவருக்கு வசதியாக வரும்போது மொழி களை மாற்றிப் பேசுகிறார்கள். யானுகோவிச் ரஷ்யமொழி பேசும் கிழக்குப் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் பகுதி யைச்சேர்ந்தவர். ஆனால், உக்ரேனியன் மொழியில் சரள மாகப் பேசுவதற்கு முயற்சிகளை எடுத்தார். 2010 ஆம் ஆண்டு தேர்தலில் யானுகோவிச் பதவிக்குவந்த பிற்பாடு உக்ரேயினின் ஒரே உத்தியோகபூர்வமொழி உக்ரேனிய னேயாகும்.

தீவிரதேசியவாதக் கட்சியான 'பிராவி செக்டர்' இயக்கத் தின் (Right Sector) தலைவரான டிமிட்ரி யாரோஷ் ரஷ்ய மொழியைப் பேசுவதற்குதான் மறுப்பதாக ஏ.எவ்.பி.யிடம் கூறினார். ஆனால், மே 25 நடைபெறவிருக்கும் தேர்தலுக் கான தனது வேட்புமனுவை அவர் ஆங்கிலம், ரஷ்யன், உக்ரேனியன் ஆகியமொழிகளிலேயே அறிவித்தார்.

ரஷ்யாவும் உக்ரேனியனும் கிழக்கு ஸ்லாவிக் மொழி கள். ஆனால், இலக்கணத்திலும் சொற்தொகுதியிலும் ஒற் றுமைகளைக் கொண்டவை மாத்திரமல்ல, அகரச் சுவடி யும் அனேகமாக ஒரேமாதிரியானவையாக இருக்கின்ற போதிலும் கூட, இருமொழிகளும் பலவழிகளில் கடுமை யாக வேறுபடவும் செய்கின்றன.

பெரும்பாலான உக்ரேனியர்கள் தங்களது மொழியை ரஷ்யமொழியை விட போலிஷ் மொழிக்கு நெருக்கமான தாகவே கருதுகிறார்கள்.

சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ மொழியாக ரஷ்யமொழி இருந்த அதேவேளை, உக்ரெயினில் பாடசா லைகளில் உக்ரேனியன் மொழியும் கற்பிக்கப்பட்டது. உக் ரேனியன் மொழியை அவர்கள் வீடுகளில் பேசவில்லை யென்ற போதிலும் ஒவ்வொரு உக்ரேனியருக்கும் அந்த மொழியில் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருக்க வேண்டு மென்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையில் ஒரு சதவீதத்தினர் மாத்திரமே உக்ரேனியன் மொழியை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள். அதேவேளை, 30 சதவீதமானவர்கள் அந்தமொழியைச் சரளமாகப் பேச முடியாதவர்கள். ரஷ்யர்களைப் பொறுத்த வரையிலும் கூட, இதேமாதிரித்தான் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

2001 ஆம் ஆண்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் போது கிழக்குப் பிராந்தியத்தையும் தெற்குப் பிராந்தியத்தையும் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் (67 சதவீதம்) தங்கள் தாய்மொழியாக உக்ரேனியனையே குறிப்பிட்டிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

அன்றாட வாழ்வில் பெரும்பாலான உக்ரேயனிர்கள் ரஷ்யமொழியையும் உக்ரேனியன் மொழியையும் மாறி மாறிப் பேசுகிறார்கள். (குறிப்பாக, சூப்பர் மார்க்கெட்டில், வங்கிகளில் அல்லது நண்பர்களுடன் குடும்பத்தவர்களுடன் பேசும்போது) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துபவர்களும் அவற்றில் பங்கேற்பவர்களும் அடிக்கடி ஏககாலத்தில் இருமொழிகளிலும் பேசி வாதாடுகிறார்கள்.

உக்ரெயினின் சில பகுதிகளில் ரஷ்ய மொழியை இரண்டாவது உத்தியோகபூர்வ மொழியாக்குவதற்கான சட்டம் 2010 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. யானுகோவிச்சின் ஆதரவுடனேயே அது நிறைவேற்றப்பட்டது. யானுகோவிச் பதவி கவிழ்க்கப்பட்ட பிறகு கடந்த மாதம் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் அந்தச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கு மேற்கொண்ட தீர்மானமே மொழி தொடர்பான அண்மைய விவாதத்தை முடுக்கிவிட்டது.

ரஷ்யர்களின் மனிதாபிமான உரிமைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை இது என்று மாஸ்கோ கண்டனம் செய்தது. உக்ரெயினில் உள்ள ரஷ்யமொழி பேசுபவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான உரிமை ரஷ்யாவுக்கு உண்டு என்று கூறிக்கொண்டு தான் தனது இராணுவ நடவடிக்கையை புட்டின் நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார். ■

# பாதுகாப்பு செலவினத்தை கடுமையாக அதிகரிக்கும் சீனா

சீனா அண்மையில் அதன் பாதுகாப்பு செலவினங்களில் செய்திருக்கும் அதிகரிப்பு மூன்று வருடங்களில் செய்யப்பட்டிரு க்கக்கூடிய அதிகரிப்புகளில் மிகவும் பெரியதாகும். வருகின்ற வருடத்தில் சீனாவின் பாதுகாப்பு பட்ஜெட் 13 ஆயிரம் கோடி டொலர்களைத் தாண்டும்.

சீனாவின் வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் பருமனையும் ஏனைய நாடுகள் அவற்றின் உள்நாட்டு நிகர உற்பத்தியில் பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கீடு செய்கின்ற வீதத்தையும் கருத்திற்கொண்டே இத்தகையதொரு அதிகரிப்புச் செய்யப்பட்டதாக சீன அதிகாரிகள் கூறுகிறார்கள்.. என்ன இருந்தாலும், உள்நாட்டு நிகர உற்பத்தியில் பாதுகாப்பு செலவினத்துக்கு 12.2 சதவீத அதிகரிப்பைச் செய்வதென்பது மிகப்பெரியதாகும்.

சீனாவின் தற்போதைய பாதுகாப்புச் செலவினம் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளின் பாதுகாப்புச் செலவினத்தை விட பிரமாண்டமானதாகும். உலகில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக பாதுகாப்பு செலவினம் கூடுதலாகவுள்ள நாடு சீனாவேயாகும். அமெரிக்கா 60 ஆயிரம் கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியைப் பாதுகாப்புக்கு செலவு செய்கிறது.

கிழக்கு சீனக் கடலில் உள்ள தீவுகளின் உரிமை தொடர்பாக ஜப்பானுடன் சீனாவுக்கு இருக்கின்ற தகராறு மற்றும் தென் சீனக் கடலில் உள்ள தகராறுகள் கடுமையான சவால்களைத் தோற்றுவிப்பதாகவும் அவற்றைச் சமாளிக்கும் நோக்கிலேயே இவ்வாறாக பாதுகாப்பு செலவினம் அதிகரிக்கப்படுவதாகவும் சீன இராணுவ நிபுணர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள்.



சீனாவின் இந்தப் போக்கு குறித்து பிராந்தியத்தில் உள்ள நாடுகள் குறிப்பாக இந்தியா கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டுமென்று அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். கடந்தமாதம் இந்தியாவில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பட்ஜெட்டில் பாதுகாப்புச் செலவினத்தில் 10 சதவீத அதிகரிப்பைச் செய்திருந்தாலும், டொலர் கணக்கில் அதன் பாதுகாப்பு செலவினத்தை நோக்கினால் கடந்த வருடத்தை விடவும் குறைவானதாகவே இருக்கிறது என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்திய ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டிருப்பதன் விளைவாக பாதுகாப்புச் செலவினம் 3750 கோடி டொலர்களில் இருந்து 3620 கோடி டொலர்களாகக் குறைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# அமெரிக்க பாதுகாப்பு செலவினக் குறைப்பு யோசனை

புவிசார் அரசியல் மற்றும் உலகளாவிய பாதுகாப்பு விவகாரங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நடவடிக்கையாக, அமெரிக்க அரசாங்கம் அதன் பாதுகாப்புச் செலவினங்களில் கடுமையான குறைப்பைச் செய்ய உத்தேசித்திருக்கிறது. இந்த உத்தேசக் குறைப்பு அமெரிக்க இராணுவத்தை இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னரான மட்டங்களுக்கு குறைக்கக் கூடியதாகும் என்று பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கும் இந்த யோசனை அமெரிக்கக் காங்கிரஸின் அங்கீகாரத்தை பெறவேண்டியது அவசியம் என்றாலும், அது எதிர்கால அமெரிக்க இராணுவ முன்னுரிமைகள் குறித்து உலகிற்கு ஒரு செய்தியைக் கொடுக்கிறது.

இந்தக் குறைப்பு யோசனை நடைமுறைப்படுத்தப்படுமேயானால் அமெரிக்க இராணுவத்தின் பருமன் 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு சுமார் 4,40, 000 ஆகக் குறைக்கப்பட்டுவிடும். 9/11க்குப் பிறகு அமெரிக்க இராணுவத்தின் பருமன் 5,70,000 ஆக இருந்தது. தாக்குதல் ஜெட் விமானங்கள் போன்ற விசேட இராணுவத்தளவாடங்களிலும் குறைப்புச் செய்யப்படுவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டிருக்கிறது.


இந்தச் சிக்கன நடவடிக்கைகள் ஏக காலத்தில் இரு நீண்ட போர்களை நடத்துவதற்கான ஆற்றலைக் கொண்டதாக இனிமேலும் அமெரிக்கா விளங்கப் போவதில்லை என்பதையே உணர்த்துகின்றன.

இவ்வருட இறுதியுடன் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப்படைகள் விலகவிருக்கின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உத்தேச இராணுவக் குறைப்புகள் வெளிநாடுகளுக்கு படைகளை அனுப்புகின்ற கோட்பாட்டில் இருந்து விலகுவதென்ற ஒபாமா நிருவாகத்தின் உறுதிப்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

சிரிய நெருக்கடி கடந்த வருடம் அங்கு ஒரு இராணுவத் தலையீட்டைச் செய்ய வேண்டுமென்ற மருட்சியை அமெரிக்காவுக்குக் கொடுத்தது என்பது உண்மையே. ஆனால், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான படைவீரர்களை இழந்த நிலையில், பொருளாதார யதார்த்தங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்த சூழ்நிலையில் அந்தப் பாதையில் மீண்டும் செல்வதை வாஷிங்டன் தவிர்த்துக்கொண்டது.

தற்போது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைப்பதற்கு முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய யோசனை வெளிநாடுகளில் இராணுவத் தலையீட்டில் அமெரிக்கா நாட்டம் காட்டாது என்பதை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்திருக்கிறது.

ஆனால், பயங்கரவாதம் என்பது உலகளாவிய பிரதான அக்கறையாக இருக்கும் நிலையில், சீனாவின் இராணுவ ரீதியான வளர்ச்சிக்கு மத்தியில், ரஷ்யாவும் தன்னை இப்போது இராணுவ ரீதியாக முனைப்புறுத்துவதில் அக்கறை காட்டுகின்ற நிலையில் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்க நலன்களை பாதுகாப்பதில் வாஷிங்டன் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கப்போகிறது என்று சர்வதேச அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்ட காரணம் என்ன?

பாலன்

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவை மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலுள்ள குழுக்கள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் ஆகியவற்றின் எதிர்பார்ப்புகளுக்கு பெரும் பின்னடைவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு எதிராக ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படுகின்ற தீர்மானத்தில் (உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக) சர்வதேச விசாரணையொன்றுக்கான கோரிக்கை முன்வைக்கப்படுமென்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த இருவருடங்களிலும் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலமாக சர்வதேச சமூகம் எதிர்பார்த்த நடவடிக்கைகளை குறிப்பாக- சுயாதீனமானதும் நம்பகத்தன்மை கொண்டதுமான ஒரு உள்நாட்டு விசாரணைச் செயன்முறையை- அரசாங்கம் முன்னெடுப்பதில் அக்கறை காட்டவில்லையென்பதால் இத்தடவை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் என்ற நம்பிக்கையே தமிழர் தரப்பிலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மத்தியிலும் பரவலாகக் காணப்பட்டது.

உள்நாட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாகவே சர்வதேச விசாரணையொன்றுக்கான வலியுறுத்தலை தொடர்ச்சியாக முன்வைத்துடன், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியிலும் அதற்கான ஆதரவைத்தேடும் பிரசாரங்களையும் முன்னெடுத்தது. புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய அமைப்புகள் இது விடயத்தில் தீவிரமான பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தையே அமெரிக்கா இத்தடவை மனித உரிமைகள் பேரவையில் நிச்சயம் கொண்டு வருமென்ற நம்பிக்கையும் வெளிப்படுத்திய வண்ணமிருந்தன.

கடந்தவருட பிற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையும் பொதுநலவாய உச்சிமகாநாட்டுக்காக இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனும் வெளிப்படுத்திய கடும்தொனியிலான கருத்துகளும் இந்த நம்பிக்கை ஏற்படுவதற்கு பிரதான காரணமாயமைந்தன என்பதிற் சந்தேகமில்லை. இடைக்கிடை அமெரிக்க இராஜதந்திரிகள் வெளிப்படுத்திய கருத்துகளும் கூட அவ்வாறே அமைந்திருந்தன.




**நவிபிள்ளையின் 74 அம்ச அறிக்கை அமெரிக்கத் தீர்மானத்திற்கு வழிகாட்டியாக அமையும் என்றே நம்பப்பட்டது. ஆனால் இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு உள்நாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்கிறது. இந்த விசாரணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பது யார்? ஜனாதிபதி ராஜபக்ஷவே அதைச்செய்வதாக இருந்தால் பெரும் பகிடிதான்**

ஆனால், இறுதியில் தற்போது ஜெனீவாவில் பிரிட்டன், மொன்ரிநீக்ரோ, மசெடோனியா, மொரீசியஸ் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் அறிக்கையில் சர்வதேச விசாரணை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆரம்பத்தில் நவநீதம்பிள்ளையின் நிலைப்பாட்டுடன் இணங்கிக் கொண்ட அமெரிக்கா பிறகு தனது போக்கை மாற்றிக் கொண்டுவிட்டது. இது குறித்து பலதரப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட வண்ணமிருக்கின்றன.

இத்தகைய பின்புலத்தில் அரசியல் ஆய்வாளர் குமார் டேவிட்டிடம் நிலைவரங்கள் தொடர்பில் சமகாலம் சார்பில் கருத்துகளை அறிய அவரை அணுகினோம். அவருடனான எமது கலந்துரையாடலை கேள்வி, பதில் வடிவில் தருகிறோம்.

**ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவர உத்தேசித்திருக்கும் தீர்மானத்துக்கு என்ன நேரும் என்பதை எமது வாசகர்களுக்குக் கூறுவீர்களா?**

முதலில் நாம் ஒன்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். தீர்மானம் இலங்கைக்கு எதிரானதல்ல, ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு மாத்திரம் எதிரானது. தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பதே பொதுவான அபிப்பிராயம். ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையின் கடும் தொனியிலான 74 அம்ச அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கத்துக்கு வழிகாட்டியாக அமையும் என்றே நம்பப்பட்டது. ஆனால், கடும் நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்டுவிட்டது என்பதையே அண்மையில் கசிய விடப்பட்ட தகவல்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் கீழிறங்கி வந்து இரு முக்கியமான விடயங்களை இணங்கி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஒன்று சர்வதேச விசாரணை. மற்றையது அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது.

**எனவே, விசாரணைக்குழு எமது அரசாங்கத்தினால் நியமிக்கப்படப்போவதில்லை என்கிறீர்கள்...?**

ஆம் இது நவிபிள்ளைக்கும் எமது அரசாங்கத்துக்கும் இடையேயான பெரிய ஒரு மோதலாகும். உள்நாட்டுச் செயன்முறைகளை அவர் நிராகரித்துவிட்டார். ஏனென்றால், 'தேசியப் பொறிமுறைகள் உண்மையையும் நீதியையும் நிலை நாட்டுவதற்கு தொடர்ச்சியாகத் தவறிவிட்டன'. இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், விசாரணைச் செயன்முறைகள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் அன்றி சர்வதேசத்தின் தலைமையிலானதாகவே அமைந்திருக்கும். நவிபிள்ளையின் நிலைப்பாட்டை அமெரிக்கா முதலில் ஏற்றுக்கொண்டது. ஆனால், இப்போது அது தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு உள்நாட்டு விசாரணையை ஏற்றுக் கொள்கிறது. ஆனால், இந்த விசாரணைக்கான குழுவின் உறுப்பினர்களை நியமிப்பது யார்? ஜனாதிபதி ராஜபக்ஷவே அதைச் செய்வதாக இருந்தால் பெரும் பகிடிதான்.

**ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அத்தகைய தீர்மானமொன்று ஏற்றுக்கொள்ளப்படுமா?**

ஏற்றுக்கொள்ளப்படுமென்றே தோன்றுகிறது. 2012ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற வாக்கெடுப்புகள் குறித்து மிகவும் கச்சிதமாக எதிர்வு கூறிய உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) யின் தகவல்களின் படி அமெரிக்காவின் கடுமையான தீர்மானமொன்றுக்கு ஆதரவாக சுமார் 25 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் கிடைக்கும். 7 உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருக்கும். மனித உரிமைகள் பேரவையில் மொத்தம் 47 உறுப்பு நாடுகள். இப்போது உள்நாட்டு விசாரணைக்கு அமெரிக்கா இணங்கியிருப்பதால், இலங்கை அதை இணங்கிக்கொள்ளும் பட்சத்தில் தீர்மானம் ஏகமனதாகவும் நிறைவேற்றப்படக்கூடும்.

**நவநீதம்பிள்ளையின் அறிக்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுவீர்களா?**

அவரின் அறிக்கை மிகவும் கடும் தொனியிலானது. 74 அம்சங்களைக் கொண்ட அந்த அறிக்கையைச் சிலர் வெடி குண்டு என்று வர்ணித்திருக்கிறார்கள். அதன் முக்கியமான அம்சங்கள் வருமாறு;

1. இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களை விசாரிப்பதற்கும் பொறுப்புக் கூறும் உள்நாட்டுச் செயன்முறைகளைக் கண்காணிப்பதற்கும் ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை.
2. வெறுப்புணர்வைத் தூண்டுவதற்கு எதிரான சட்டம், சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம், ஆட்களைக் காணாமல் போகச் செய்வதைக் குற்றச்செயலாக்கும் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுதல்.
3. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்தல். அடாத்தான தடுப்புக் காவலை அனுமதிக்கும் ஒழுங்கு விதிகளை நீக்குதல்.
4. சிறுபான்மையினத்தவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்து வழக்குத் தொடுத்துத் தண்டித்தல்.
5. வடக்கு, கிழக்கில் இராணுவமய நீக்கம் செய்தல், தேசிய ரீதியில் இராணுவமயத்தைக் குறைத்தல்.

**இந்தக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏன் இணங்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

நவிபிள்ளையின் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் என்று நான் மேலே குறிப்பிட்டவற்றில் முதலாவது அம்சமே, அதாவது சர்வதேச விசாரணையே அரசாங்கத்தின் மிகப்பெரிய கவலை, சர்வதேச விசாரணையொன்றைத் தங்களுக்குச் சாதகமான முறையில் ஜனாதிபதியாலோ அல்லது பாதுகாப்புச் செயலாளரினாலோ சூழ்ச்சித்தனமாக திசை திருப்ப முடியாமற் போகும். அத்தகையதொரு சர்வதேச விசாரணையின் இறுதியில் கண்டுபிடிக்கப்படக் கூடியவை என்னவாக இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால், அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்மட்டத்தில் இருப்பவர்கள் போர்க் குற்றங்களை இழைத்ததாகக் கண்டுபிடிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் அரசாங்கத்தைப் பொறுத்தவரை மிகவும் பாரதூரமான விடயமாக இருக்கும். சகல உண்மைகளுமே வெளியே வரும். போர்க்குற்றங்கள் மாத்திரமல்ல அளவுக்கு அதிகமாக, முரட்டுத்தனமாக படைபலத்தைப் பிரயோகித்தது போன்ற செயல்களுக்காகவும் ஆட்கள் குற்றவாளிகளாகக் காணப்படலாம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, தப்பியோடிய குடிமக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் வரலாம். இதுவும் ஒரு போர்க்குற்றமே. இதன் காரணத்தினால் தான் சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்று குறித்து அரசாங்கம் முன்னெச்சரிக்கையுடையதாக இருக்கிறது. இது முதற் காரணம். இரண்டாவது காரணம், அரசாங்கத்தின் வாக்குப் பலம் சிங்கள பௌத்தர்களைக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக இருப்பது. இது ஒரு உணர்ச்சி பூர்வமான வாக்குப்பலம் ஆகும். அரசாங்கத்துக்கு இருக்கின்ற இந்த ஆதரவுத்தளம் முக்கியமான நிபந்த னைகள் தொடர்பில் கீழிறங்கி வருவ தற்கு அல்லது விட்டுக்கொடுப்பைச் செய்வதற்கு அனுமதிக்கப்போவ தில்லை. இழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற குற்றங்களுக்காக இராணுவத்தின் மீது எந்தவிசாரணை யையும் நடத்த அனுமதிக்கப்போவ தில்லை என்ற ஜனாதிபதி ராஜபக்ஷ வின் திடசங்கற்பமும் மின்சாரக் கதிரைக்குப் போவதற்கும் கூடத் தயாராயிருப்பதாக அவர் மார்தட்டிச் செய்கிற பிரகடனங்களும் கடும் போக்கையே குறித்து நிற்கின்றன.



உண்மையான அரசியல் தீர்வொன்று இருக்குமானால் பொறுப்புக்கூறுதலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஏற்படும். ஜனாதிபதி ராஜபக்ஷ முன்கூட்டியே உருப்படியான உறுதிப்பாடுகளை வெளிக்காட்டாத பட்சத்தில் கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்கப்போவதில்லை

**சர்வதேச ஆணைக்குழு யோச னை கைவிடப்படக்கூடிய சூழ் நிலையை இந்தியாவின் உதவி யுடன் தானா இலங்கையினால் ஏற்படுத்தக் கூடியதாக இருந் தது?**

ஜெனீவாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து இரகசியமாக வெளிப்படுத்தப்பட்ட பிந்திய வரைவை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சர்வதேச விசாரணைக் கோரிக்கை விடயத்தில் அமெரிக்கா விட்டுக் கொடுத்து சமர சஞ் செய்து இலங்கை அரசாங்கத்தி னால் நடத்தப்படக்கூடிய விசாரணை யொன்றை ஏற்றுக்கொண்டு விட்டது என்றே தெரிகிறது. இந்தியாவின் உத வியுடனேயே இலங்கையினால் இத் தகைய சூழ்நிலையொன்றை உரு வாக்க இயலுமாக இருந்திருக்கும் என்ற சாத்தியப்பாட்டையும் நிராக ரிப்பதற்கில்லை. ராஜபக்ஷ டில் லியை ஏமாற்றிக் கொண்டே வந்தி ருக்கிறார் என்ற போதிலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ராஜபக்ஷ சார்பானவராகவே இருந்துவருகி றார். அதற்கான காரணங்களை என் னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், டில்லி மிக வும் ஜாக்கிரதையாக இருக்க வேண் டும். ஏனென்றால் அது இரட்டை வேடம் போட்டு வஞ்சகத்தனமாக நடந்துகொள்கிறது என்று தமிழ் நாட்டு மக்கள் கண்டுபிடிப்பார்களே யானால், சகல தென்மாநிலங்களிலும் காங்கிரஸின் தேர்தல் வாய்ப்புகள் மேலும் மோசமாகப் பாதிக்கப்படும். இரகசியமாக வெளிப்படுத்தப்பட்ட வரைவின் இரண்டாம் பிரிவை கீழே தருகிறேன். இது இலங்கை அரசாங் கத்துக்கு ஏற்புடையதாக இருக்கு மென்று நான் நினைக்கிறேன். விசார ணைச் செயன்முறைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற் பார்வை செய்வதற்கு வகை செய்யக் கூடியதாக அமைந்திருக்கும் 8 ஆவது பிரிவைவிடவும் இதுவே முக்கியமானதாகும்.

'மனித உரிமைகள் உயர்ஸ்தானிக ரின் அலுவலகத்தின் அறிக்கைகளில் செய்யப்பட்ட விதப்புரைகளை நடை முறைப்படுத்துமாறும் சர்வதேச மனித உரிமைகள் சட்ட மற்றும் சர்வ தேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீனமானதும் நம்பகத் தன்மை கொண்டதுமான விசார ணையை நடத்துமாறும் அத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பானவர் களை பதில் கூறும் கடப்பாட்டுக்கு உட்படுத்துமாறு இலங்கை அரசாங் கத்தைத் தீர்மானம் கோருகிறது. அத் துடன் தொடருகின்ற மனித உரிமை மீறல்களையும் துஷ்பிரயோகங்க ளையும் முடிவுக்குக்கொண்டு வரு மாறும் உயர்ஸ்தானிகரின் அலுவல கத்தின் அறிக்கைகளில் உள்ள விதப்புரைகளை நடைமுறைப்படுத் துமாறும் கோருகிறது.'

**அமெரிக்காவின் நிலைப்பாட் டில் ஏற்பட்ட மாற்றம் காரண மாக நவிபிள்ளையைத் தவிர வேறு யார் யார் பின்னடை வைச் சந்தித்திருக்கிறார்கள்?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உல கத் தமிழர் பேரவை (GTF) மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள குழுக்களும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களும் பின்னடை வைச் சந்தித்திருக்கின்றன. கொண்டு வரப்படக் கூடிய தீர்மானம் சர்வதேச பொறிமுறையொன்றுக்கு கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுக்குமென்றும் இலங்கையின் பொறுப்பிலேயே சகலதையும் விட்டு விடாது என்றுமே இவர்கள் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். மாற்றஞ் செய்யப்படாமல் இதேவரையே தொடருமானால், இவர்களின் எதிர்பார்ப்புகள் எல்லாம் பொய்த்து விடும். தற்போதுள்ள நிலைவரமே தொடரும். இது இனிமேலும் ஒரு வரைவாக இல்லை. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், தீவிர நெருக்குதல்கள் பிரயோகிக்கப்படுகின்றன. சிலவேளை மாற்றங்கள் செய்யப்படவும் கூடும்.

**கடந்த சில மாதங்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன செய்து கொண்டிருந்தது?**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயமேதுமின்றி பகிரங்கமாக மனித உரிமைகள் விவகாரங்களில் அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், உண்மையான ஒரு அரசியல் தீர்வு இருக்குமானால், பொறுப்புக் கூறுதலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்படுத்தும். ஜனாதிபதி ராஜபக்ஷ முன்கூட்டியே உருப்படியான உறுதிப்பாடுகளை வெளிக்காட்டாத பட்சத்தில் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கப் போவதில்லை. அரசியல் தீர்வொன்றுக்கான சாத்தியப்பாடுகள் தென்படுமானால், மனித உரிமைகள் பிரச்சினை இரண்டாம் பட்சமானதாகிவிடும். மறுபுறத்தில், நிலைவரங்கள் தவறாகவே தொடருமானால் பெரும் அனர்த்தம், ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. .

**இலங்கைக்கு எதிராக தடைகள் விதிக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு இணங்குமேயானால், தடைவிதிப்புகளைத் தவிர்க்க முடியும். ஆனால், தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முயன்றால் அரசாங்கத்தின் சிங்கள-பௌத்த ஆதரவுத் தளமும் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ போன்ற வலிமையான சக்திகளும் ஆத்திரமடையலாம். தென்மாகாண சபைக்கும் மேல் மாகாண சபைக்குமான தேர்தல் இம் மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் கூட, விரைவில் நடத்தப்படக்கூடும். அத்தகையதொரு சூழ்நிலையில் அரசாங்கம் அதன் நன்கு பரீட்சித்துப் பார்க்கப்பட்ட தேர்தல் வெற்றித் துருப்புச் சீட்டைப் பயன்படுத்துவதிலிருந்து எவ்வாறு ஒதுங்கிக்கொள்ள முடியும்? அத்துருப்புச் சீட்டை உச்சபட்சத்துக்குப் பயன்படுத்தும்போது சிறுபான்மை இனத்தவர்களுடனும் சர்வதேச ரீதியாகவும் முரண்படுதல் தீவிரமடையும். பிறகு அரசாங்கம் அந்த நிலையில் இருந்து கீழிறங்குவது சிரமமாக இருக்கும்.

அரசியல் நிகழ்வுகளுக்கு இயங்கு விசை இருக்கிறது. ஈரானில் அஹமதீன் ஜாட் ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்தில் இருந்த காலகட்டத்தில் தடைகள் விதிக்கப்பட்ட ஆரம்ப வருடங்களில் தேசியவாத உணர்வுகள் கிளறிவிடப்பட்டு வீதி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அதனால் நெருக்கடி நீடிக்கவே செய்தது.

புத்திசாலித்தனமாக தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கம் சில உள்நாட்டுப் பொறிமுறைகளை ஏற்படுத்தி பிறகு அதன் வழமையான விளையாட்டைக் காட்டி ஏமாற்றுத்தனமான ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் முயற்சிக்கலாம். ராஜபக்ஷவின் வழமையான பாணி எல்லோருக்கும் தெரிந்தது தானே. இந்த இடத்தில் தான் 'ஜெனீவாவுக்குப் பின்னரான' கோட்பாடு (Concept of Post-Geneva) முக்கியமானதாகிறது. அதாவது அடுத்த ஒரு வருடத்தை அல்லது இரண்டு வருடங்களையே நான் மனதிற்கொண்டு இதைக் குறிப்பிடுகிறேன். எனவே, ஆரம்பத்தில் தடைகள் எதுவும் விதிக்கப்படப் போவதில்லை. ஆனால், அடுத்துவரும் வருடங்களில் முரண்நிலை தீவிரமடையுமேயானால் திருகாணி படிப்படியாக இறுக்கப்படும்.

**இந்தியாவின் உண்மையான திட்டமும் நோக்கமும் தான் என்ன?**


வெளிப்படையாகக் கூறுகின்றேன். தற்சமயம் நான் டில்லியைப் பற்றி மிகவும் தாழ்வான அபிப்பிராயத்தையே கொண்டிருக்கிறேன். இந்திய அரசாங்கம் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகிறது. இலங்கை விவகாரத்தில் அதற்குத் தெளிவான ஒரு கொள்கையில்லை. அன்றாடம் காரியங்களை எவ்வாறு பார்த்துக் கொள்வது என்பதிலேயே கவனத்தை இந்தியா செலுத்துகிறது. நீண்ட கால நோக்கில் பார்ப்பதாக இல்லை. அதனால், இலங்கை அரசாங்கம் எளிதாக அங்கும் இங்குமென்று ஏமாற்றக்கூடியதாக இருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சக்திகளைக் கையாளுவதிலும் இந்தியா தடுமாறிக் கொண்டேயிருக்கிறது. இவ்வளவு காலத்திலும் டில்லிக்கு ஒரு தெளிவான நோக்கு இருந்திருக்குமேயானால், நிலைவரங்கள் கட்டுமீறிப்போயிருக்காது. ஒரு பிராந்திய வல்லரசு என்றவகையில் இந்தியாவே (அமெரிக்கா அல்ல) தீர்மானமொன்றை நோக்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவைச் செயன்முறைகளுக்கு முன்னணியில் நின்று செயற்பட்டிருக்க வேண்டும்.

**அதிகாரப் பரவலாக்கத்திலும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திலும் இந்தியா பற்றுறுதி கொண்டதாக இருக்கிறதா?**

இதுமிகவும் முக்கியமானதும் கூருணர்வுடையதுமான ஒரு கேள்வியாகும். அதிகாரப்பரவலாக்கம் மற்றும் 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியாவின் பற்றுறுதி குறித்து எனக்கும் கூட சந்தேகங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13ஆவது திருத்தம் பற்றி இந்தியா வெறுமனே கூறிக்கொண்டேயிருக்கி றதே தவிர, அதுபற்றி அக்கறையு டையதாக, பற்றுறுதி கொண்டதாக இருக்கிறதா? சரித்திர ரீதியாக 13ஆவது திருத்தத்துடன் மாட்டுப் பட்டிருப்பதால் அதைப்பற்றி இந் தியா பேசிக் கொண்டிருக்கிறது என்றே நினைக்கிறேன். 25 வருடங் களுக்குப் பிறகு (1987ஆம் ஆண் டில் இருந்து) இந்தியா இனிமேலும் 13ஆவது திருத்தத்தில் அக்கறை கொண்டதாக இருக்கும் என்ற சந்தே கம் எனக்கு வலுக்கிறது. நரேந்திர மோடி அதிகாரத்துக்கு வருவாரேயா னால், அவர் அதைப்பற்றி பெரிதாக அக்கறை காட்டாமல் விடக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன். எல்லா வற்றுக்கும் மேலாக 13ஆவது திருத் தத்தின் சிற்பி பாரதீய ஜனதா அர சாங்கம் அல்லவே.



**இந்திய அரசாங்கம் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகிறது. இலங்கை விவகாரத்தில் அதற்கு தெளிவான ஒரு கொள்கை இல்லை. அன்றாடம் காரியங்களை எவ்வாறு பார்த்துக் கொள்வது என்பதிலேயே கவனத்தை இந்தியா செலுத்துகிறது. நீண்ட கால நோக்கில் பார்ப்பதாகயில்லை.**

**இறுதியாக ஒரு கேள்வி. உண் மையில் அமெரிக்காவின் நோக் கம் என்ன? தந்திரோபாயம் என்ன?**

இதுமிகவும் அடிப்படையான ஒரு கேள்வி. மிகவும் முக்கியமானது. பல ரும் கூறுகின்ற காரணங்களுடன் எனக்கு இணக்கப்பாடு இல்லை. ஏன் அமெரிக்கா கடுமையான போக் கொன்றைக் கடைப்பிடிக்க ஆரம்பித் தது? வழமையாக நான்கு காரணங் கள் கூறப்படுகின்றன. ஆனால், அக்காரணங்களை தனித்தனியாக நோக்கும்போது போதுமானளவு முக்கியத்துவமுடையவையாகத் தோன்றவில்லை. முதலாவது, நீதி மற்றும் மனித உரிமைகள் தொடர் பில் அமெரிக்க மக்களுக்கும் காங்கி ரஸ் உறுப்பினர்களுக்கும் இருக்கக் கூடிய அபிப்பிராயங்களைச் சாந்தப்படுத்த வேண்டியிருக்கிறது. இரண்டாவது, பிரிட்டன் மற்றும் கன டாவில் உள்ள புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் நெருக்குதல்கள், மூன்றா வது, டில்லியைப் போன்றே அமெரிக் காவுக்கும் கொழும்பின் திமிர்த்தன மான போக்கும் பொய்ப் பிதற்றல் களும் சலிப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்திவிட்டன. அதனால் இந்த தற்குறிகளுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்று வாஷிங்டன் நினைக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால், உலக வல்லரசுகளின் வெளி யுறவுக் கொள்கைத் தீர்மானங்கள் சினமூட்டல்களுக்குப் பிரதிபலிப் பாக மேற்கொள்ளப்படுவது சாத்திய மில்லை.

கூடுதல் கனதியான நான்காவது காரணம் கேந்திர முக்கியத்துவ அம்ச த்தை அடிப்படையாகக் கொண்டது. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம், கடல் வழிகள், இந்தி யாவுக்கு அருகாமை, கேந்திர முக்கி யத்துவ ரீதியிலும் பொருளாதார ரீதி யிலும் அதிகரிக்கும் சீனாவின் அச்சுறுத்தல். ஆனால், இந்து சமுத்தி ரத்தில் சீனாவின் இராணுவப் பிரச ன்னம் இல்லை. இன்னொரு கால் நூற்றாண்டுக்கு அத்தகைய பிரசன் னம் வரப்போவதுமில்லை. (உலகின் பல கடல் பிராந்தியங்களிலும் செயற் படக்கூடிய வல்லமை கொண்ட கடற் படைக்கப்பல்கள் சீனாவிடம் தற் போது இல்லை) இதுவிடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் அமளியும் உதவப் போவதில்லை. இது மேலும் கொழும்பைக் கூடுதலான அளவுக்கு சீனாவின் பிடிக்குள்ளேயே தள்ளிவி டக் கூடியது சாத்தியம்.

சீனாவின் உலகளாவிய பொருளா தாரச்செல்வாக்கு நீட்சியைப் பொறுத் தமட்டிலும் கூட, இலங்கை ஒரு பெரிய காரணி இல்லை. அது விட யத்தில் ஆபிரிக்கா, மத்திய ஆசியா மற்றும் தென்னமெரிக்காவே கூடுதல் முக்கியத்துவமுடையவை. அத னால், இதுகூட ஒரு துணைக்கா ரணியே தவிர அடிப்படை முக்கியத் துவம் வாய்ந்த காரணம் இல்லை.

இந்த நிலைவரங்கள் சகலதையும் தொகுத்துப் பார்க்கும் போது ஒரு வாத ஆதாரமாகக் கொள்ளக்கூடிய ஒரு கருதுகோளுக்கு என்னால் வரக் கூடியதாக இருக்கிறது. ஒரு கட்டத் தில் அமெரிக்கா சில வருடங்களில் பயனைத் தரக்கூடிய 'ஆட்சிமாற்றத் துக்கான' செயன்முறையொன்றில் இறங்கியது போலத் தோன்றியது. ஆனால், தீர்மானம் மென்மையான தாக்கப்பட்டதும் அவர்களது நோக் கம் குறித்து நிச்சயமான ஒரு கருத் துக்கு வரமுடியவில்லை.

*(31ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

தரிஷா பஸ்ரியன்ஸ்



# உடன்பாட்டை மீறுதல் ஒரு தொடர் கதை

சர்வதேச சமூகத்துடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகள், தொடர்புகள் பற்றிய ஏற்றமும் இறக்கமும் மிகுந்த வரலாறு ஒரு நாள் எழுதப்படும். அப்போது இலங்கையின் ஜெனீவா நோக்கிய பயணம், அது சென்ற பாதை எங்கணும் கிழித்தெறியப்பட்ட மீறப்பட்ட உடன்படிக்கைகள் குப்பையாக வீசிக் கிடப்பதை வரலாற்றாசிரியர்கள் கண்டு பிடிக்கத் தவற மாட்டார்கள்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்த கல்விமான். டில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான இருபக்க உறவுகளின் தற்காலச் சிக்கல்களை விளக்குவதற்கு அவர் இலக்கியத்தில் இருந்து உதாரணம் ஒன்றை எடுத்துக் காட்டி அண்மையில் விளக்கம் கொடுத்தார்.

'நான் எதைச் சொல்வது? எரிக் செகல் காதல் கதை (ERIC SEGAL'S LOVE STORY) உதாரணத்தைத் தான் சொல்லலாம். காதல் என்றால் ஒருவர் ஒருநாளும் மன்னித்துக்கொள் என்று சொல்வதில்லை. எங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவும் இப்படிப்பட்டதுதான். புதுடில்லியில் வைத்து இலங்கைப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது



இலங்கை ஜெனீவாவில் எதிர்கொண்ட சவால்கள் பற்றிய வரலாற்றை எதிர்காலத்தில் எழுதப்போகும் வரலாற்றாசிரியர்கள் ஜெனீவாவுக்கான பாதை பல திருப்பங்களைக்கொண்டது; பல வாய்ப்புகள் அவ்வப்போது கைநழுவவிடப்பட்டன உடன் படிக்கைகள் கிழித்து வீசப்பட்டன; இலங்கை தன்னுடைய தலையிலேயே மண்ணை வாரிப்போட்டது என்றெல்லாம் எழுதுவதற்கு தவற மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மான் குர்ஷித் இவ்வாறு கூறினார். சில வகை நட்புறவுகள் நீண்ட காலத் தொடர்ச்சியுடையவை. பல பத்தாண்டுகளாக நீடிப்பவை, இவை ஏற்றமும் இறக்கமும் கொண்டவை. சவால்களை எதிர்கொண்டு நிலைத்து நிற்பவை என்றார் குர்ஷித்.

இலங்கை- இந்திய உறவுகள் இப்போது பதற்றம் நிறைந்த ஒரு கட்டத்தில் உள்ளன என்று கூறினால் அது உண்மையான கூற்று அல்ல. அது தீவிர பிரச்சினை ஒன்றைக் குறைத்து மதிப்பிடும் கூற்று ஆகும். (An Understatement) பாக்கு நீரிணையின் இரு புறத்தேயும் உள்ளவர்கள் துரோகத்தனத்தின் தாக்கத்தை, அதன் தீவிரத்தை உணர்கிறார்கள். எமக்கிடையே நீண்ட நாகரீக உறவுப்பிணைப்பு உள்ளது. வரலாற்று ரீதியான உறவுகள் உள்ளன என்றெல்லாம் இராஜதந்திரிகள் பேசுவது உண்டென்றாலும் உள்ளத்தின் அடியாழத்தில் இருப்பது வேறொன்று.

## இந்தியா எதிர்நோக்கும் சிக்கல்

இலங்கை அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல் முன்னெடுப்புகளை சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலும் ஆதரித்து பின்னின்று உதவி ராஜபக்ஷ அரசு 2009 இல் விடுதலைப் புலிகளை முறியடிக்க இந்தியா பக்கபலமாக நின்றது. பின்னர் 2009 இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வந்த போதும் இந்தியா தலையிட்டு இலங்கையைப் பாராட்டும் தொனியிலான வரைவு ஒன்றைப் புகுத்தி உதவியது. இத்தனையும் நடந்த பிறகு இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவல் மூலம் நிவாரணம் கொடுப்போம் என்று சொன்ன வாக்குறுதிகளை மீறியதும், அவற்றை உதாசீனம் செய்ததும் இந்தியாவை நட்டாற்றில் கைவிட்டது போன்ற செய்கைதான். அதை விட இந்தியாவைப் பார்த்துச் சிலர் சண்டித்தனமாகப் பேசுவதும் இந்தியாவிற்கு ஆத்திரம் ஊட்டுவதாக அமைந்து விட்டது. இந்தியாவின் எண்ணப் போக்கு இப்படியிருக்க இலங்கைத் தரப்பில் இந்தியாவின் துரோகம் பற்றிய உணர்வு மேலோங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் ஐ.நா.வில் வாஷிங்டன் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்த துரோகச் செயல் இலங்கை எதிர்பாராதது. இந்தியாவின் ஐ.நா.நிரந்தரப் பிரதிநிதி ஐக்கிய அமெரிக்காவிற்குச் சார்பாக எழுந்து கையுயர்த்திய வேளை இந்தியாவுடன் இலங்கை உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

கடந்த ஓராண்டு காலத்தில் சிக்கல்கள் அதிகரித்தன. 1987 இல் இந்திய -இலங்கை உடன்பாட்டின் இரு முக்கிய விடயங்களில் இருந்து வழுவிச் செல்லப்போவதாக இலங்கை பகிரங்கமாக அறிவித்தது. முதலாவது மாகாணங்களுக்கு அறைகுறையான அளவிலேனும் அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கிய 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யப்போவதாக இலங்கை அச்சுறுத்தல் விடுத்தது. இரண்டாவதாக திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியக் கம்பனிக்கு நீண்ட காலக் குத்தகைக்கு கொடுத்திருந்ததை திரும்பப்பெற இலங்கை விரும்பியது.


> சர்வதேச சமூகம் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதையே குறியாகக் கொண்டு செயற்படுகிறது என நம்பும் இலங்கை அரசாங்கம் மேற்குநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வரும்போது அவர்கள்மீது தமக்கு நம்பிக்கையில்லை என்பதையும் குரோத உணர்வையும் வெளிப்படையாகக் காட்டிக்கொள்கிறது

## வாக்குறுதிகளை மீறுதல்

இலங்கைக்கும் மேற்குலகிற்கும் இடையிலான உறவில் பிரச்சினைகள் இருந்த போதும், இந்தியாவுடனான இலங்கையின் உறவில் மனத்தாங்கல் உண்டாக்கும் தனிப்பட்ட அம்சமும் கலந்திருந்தது. இராஜதந்திரம் என்பது தந்திரம், குள்ளத்தனம், அடுத்தவரை ஏமாற்றுதல் என்ற அம்சங்கள் கலந்த ஒன்றுதான். தலைவர்களின் கோபம், துரோகம், ஆற்றாமை போன்ற உணர்வுகளும் பாதிப்பை ஏற்படுத்துவனவே. நாடுகளின் பிரதிநிதிகளும் இவ்விதமான உணர்வுகளுக்கு ஆட்பட்டு நடந்து கொள்கிறார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருதரப்புச் சந்திப்புகளின் போது அதிகாரப்பரவலாக்கல், நல்லிணக்கச் செயற்பாடுகள் என்பன பற்றி நம்பிக்கை ஊட்டும் கருத்துகளைச் சொல்வார். இந்தியாவின் மூத்த அதிகாரிகள், இராஜதந்திரிகள் இவற்றைக்கேட்டு விட்டுப் போன அடுத்த கணமே தான் சொன்ன உறுதிமொழிகளைக் காற்றில் தூக்கி வீசுவார். முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா, எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் ஆகியோருக்கு இவ்விதமாகச் சொன்னதற்கு மாறாக நடந்திருக்கிறார். ஏன் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விடயத்திலேயே, இலங்கையின் அரசு தலைவர் தலைகீழாக குத்துக்கரணம் அடிக்கிற மாதிரிப் பேசியிருக்கிறார். இக்காரணத்தால் இந்திய அரசின் உயர்மட்டங்களில் உள்ளவர்களிடம், இலங்கையின் ஜனாதிபதி கூறும் உறுதிமொழிகளை ஏற்கத் தயாரில்லாத மனநிலை உள்ளதாக உத்தியோகபூர்வத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது. மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வாஹீட் விடயத்திலும் மன்மோகன் சிங்கிற்கு இது போன்ற அனுபவம் உள்ளது. 2012 மேயில் வாஹீட் மன்மோகன் சிங்குடன் நடத்திய உரையாடலில் மாலைதீவுக் கம்பனிகளுடன் இந்திய அரசு முன்னைய ஆட்சித் தலைவர் காலத்தில் செய்து கொண்ட உடன்படிக்கைகள் மீறப்படமாட்டா என்று வாக்குறுதி அளித்தார். பின்னர் அதே ஆண்டில் இந்த வாக்குறுதியை மீறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**ஜனாதிபதி ராஜபக்ஷ இரு தரப்புச்சந்திப்புகளின் போது அதிகாரப் பரவலாக்கல், நல்லிணக்க செயற்பாடுகள் என்பன பற்றி நம்பிக்கையூட்டும் கருத்துகளை சொல்வார். இந்தியாவின் மூத்த அதிகாரிகள், இராஜதந்திரிகள் இவற்றைக் கேட்டு விட்டுப்போன அடுத்த கணமே தான் சொன்ன உறுதிமொழிகளை ஜனாதிபதி காற்றில் தூக்கி வீசுவார். அவர் கூறும் உறுதிமொழிகளை ஏற்கத் தயாரில்லாத மனநிலையே இந்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகளிடம் உள்ளது**

வகையில் நடந்துகொண்டார். மாலைதீவில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்காக இந்தியக் கம்பனி ஒன்றுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மாலைதீவு அரசு ரத்துச் செய்தது. 'அரசுத்தலைவர் ஒருவர் கொடுக்கும் உறுதிமொழி நம்பிக்கையின் அடிப்படையில் அமைவது சாதாரண விடயம் அல்ல. தனிப்பட்ட முறையில் உடன்பட்ட ஒன்றிற்கு மாறாக அடுத்த நாளே பொறுப்பற்றுப் பேசக்கூடாது' என்று குறைப்பட்டனர் உயர்மட்ட அதிகாரிகள். இந்தியப் பிரதமர் கொழும்பு பொதுநலவாய மகாநாட்டில் சென்ற ஆண்டு நவம்பரில் கலந்து கொள்ளாமல் விட்டதற்குரிய காரணம் இதுவே ஆகும். மன்மோகன் சிங் அவர்களை இலங்கைக்கு வரச் செய்வதற்குக் தூண்டுதல் தரும் முறையில் சொல்லப்படும் வாக்குறுதிகள் மகாநாடு முடிந்த பின்னர் நிறைவேற்றப்பட மாட்டா என்பதை இந்தியா உணர்ந்தது. அத்தோடு தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் இலங்கைக்குப் போய் தமிழ் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்த காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. வங்காள விரிகுடா நாடுகளின் (BIMSTEC) மகாநாடு அண்மையில் மியன்மாரில் நடந்த போது இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார். ஆனால், இந்தச் சந்திப்பால் எதுவும் பயன் விளையுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ராஜபக்ஷ அரசின் அதிகாரிகள் சிலர் இந்திய உயர்மட்ட அலுவலர்களையும் தலைவர்களையும் சந்தித்த போது நடந்துகொண்ட விதம் ஆத்திரம் ஊட்டுவதாக அமைந்தது. குர்ஷித் கான் போன்ற சிரேஷ்ட அமைச்சர் ஒருவரோடு நடந்து கொண்ட விதம் உத்தியோகத்தர்களிடையே இருந்த நட்புறவைக் கெடுப்பதற்குக் காரணமாகியது என்று கூறப்படுகிறது.

### இந்தியாவின் உள்நாட்டு அரசியல்

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் தலையீடு அரசியலோடு சம்பந்தப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் இலங்கையின் உள்நாட்டுப்போரில் இந்தியாவுக்கு பங்குண்டு. போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அவற்றுக்குப் பொறுப்புக் கூறுதல் என்பதை விட அடம்பிடிக்கும் ராஜபக்ஷ அரசை அதிகாரப்பரவலாக்கத்திற்கு இணங்க வைப்பதும் இந்தியாவிற்குச் சிரமம் மிக்க பணியாக அமையும் அரசியல் தீர்வுக்குச் சம்மதிக்க வைப்பது இலங்கை தனது சர்வதேசப் படிமத்தை, பிறநாடுகள் அதன் மீது வைத்திருக்கும் அபிப்பிராயத்தைச் சாதகமானதாக ஆக்குவதற்கு இந்தியாவின் நல்லெண்ணத்தை வென்றெடுக்க வேண்டும். இலங்கை சர்வதேச அரங்கில் இரு முக்கிய சவால்களை எதிர்நோக்குகிறது. ஒன்று போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதல். இது மிகக் கடினமான விடயம். கட்டளைச் சங்கிலி (Chain of command) என்றொரு தத்துவம் உள்ளது. செயல்களுக்கான பொறுப்பை மேலுள்ளவர்கள் ஏற்க வேண்டும் என்ற சிக்கல் உள்ளது. இரண்டாவது அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசின் இயலாமை பற்றியது. அரசு ஏன் பிரதான தமிழ்க்கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தொடர்ந்து தூற்றிக்கொண்டும் விலக்கியும் வைக்க வேண்டும் என்பது புரியவில்லை.

பொதுநலவாய மகாநாடு கொடுத்த அழுத்தம், இந்தியாவின் வற்புறுத்தல் என்பனவற்றால் செப்டெம்பர் 2013 இல் வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அமோக ஆதரவுடன் வெற்றிபெற வழியமைத்தது. இந்த அழுத்தங்கள் இருந்திருக்காவிட்டால் தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டிருக்கும். 13ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தை 'முழுமையாக அமுல்படுத்துவதாக' ஐ.நா. செயலாளர் நாயகம் பான்.கீ.மூன் அவர்களு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கே உறுதிமொழி வழங்கப்பட்டது. இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் அவ்வாறே கூறப்பட்டது. இந்த உறுதிமொழிகள் காப்பாற்றப்படவில்லை.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் இன்று மாகாணங்களுக்குக் காணி அதிகாரங்களை வழங்குவதோ (பொலிஸ் அதிகாரங்களை விட்டுவிடுவோம்) 13ஆவது திருத்தப்படியான பிற அதிகாரங்களை வழங்குவதோ ஆபத்தானது என்று இலங்கை அரசு கூறுகிறது.

## அதிகாரப்பரவலாக்கல் – அரசின் பிடிவாதம்

பாராளுமன்றக் குழுக்களின் ஆலோசனைகளைத் தொடர்ந்து அலட்சியம் செய்து வருகிறது. இக்குழுவின் சிபார்சுகள் பல விடயங்களைப் பற்றியும் முழுமையாகப் பரிசீலனை செய்து அந்தக் குழுக்கள் அதிகாரப்பரவலாக்கல் பற்றி ஏற்கனவே கூறியுள்ளன. இதற்குப் பதிலாக இன்னொரு தெரிவுக்குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. இது அரசாங்கக்கட்சியின் பெரும்பான்மையினரையும், சில மிதவாதப் போக்குடையோரையும் கொண்ட தெரிவுக்குழுவாகும். இக்குழுவின் வேலை நத்தை வேகத்தில் செல்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரும் இக்கூட்டங்களில் பங்கு பற்றுவதில்லை. பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் இக்கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தையும் இரண்டு வருடங்களாக நிறுத்தப்பட்டுவிட்டது. இருதரப்பினரும் மீண்டும் கூடிப் பேசவேண்டும் என்று கூறப்படுகின்ற போதும், இதுவரை அரசில் இருந்து அழைப்புக்கான சமிக்ஞை கிடைக்கவில்லை. 2009 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பிறகு, அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவந்து அவ்வெற்றிக்கு அரண்சேர்க்கும் விடயத்தில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்தியா விடுத்த வேண்டுகோள்களாலும் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

'இலங்கையின் நட்பு நாடு என்ற முறையில் இந்தியா இலங்கைக்கு உதவ விரும்புகிறது. இவ்வாறு உதவுவதற்கு நீங்களும் எமக்கு உதவ முன்வரவேண்டும்' என்று டில்லியில் வெளிவிவகார அமைச்சில் இலங்கைப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது குர்ஷித் கூறினார். இலங்கையின் நட்பு நாடுகள் சர்வதேசத்திற்கு முன்னேற்றத்தை எடுத்துக்காட்ட வேண்டிய தேவையையும் குர்ஷித் அப்போது சுட்டிக் காட்டினார். இதே கோரிக்கையை கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளும் கூறியிருந்தனர். பொதுநலவாய மகாநாட்டுக்கு முன்னர் சில நடவடிக்கைகள் பற்றிப் பேசப்பட்ட போதும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இலங்கை அரசாங்கம் தனது சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் உறுதியான முடிவு எதனையும் செய்யப்போவதில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

## தாக்குதலும் பதிலடியும்

சர்வதேச சமூகம் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதையே குறியாகக் கொண்டு செயற்படுகிறது என நம்பும் அரசாங்கம் கொழும்புத் தூதரகங்களில் உள்ள இராஜதந்திரிகளையும், ஜெனீவா இராஜதந்திரிகளையும் தாக்கிப்பேச ஆரம்பித்துள்ளது. இத்தாக்குதல் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத்தொடர் தொடங்கும் தறுவாயில் கடுமையோடு வெளிப்பட்டது. மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வரும் போது இலங்கை அரசு அவர்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் குரோத உணர்வையும் வெளிப்படையாகவே காட்டிக் கொள்கின்றது. பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் வந்து சென்ற போதும், பால்நிலை பிரச்சினைகள் (GENDER ISSUES) விடயங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கத் தூதுவர் கத்தரின் ரஸ்ஸலுக்கு இலங்கை வருவதற்கு விசா மறுக்கப்பட்டதும் இலங்கை அரசின் விரோதப் போக்கை நன்கு எடுத்துக் காட்டுவன. இச்செயல்கள் இலங்கையின் வெளி உறவுகளைப் பாதிப்பன.

2014 ஜெனீவா வந்துவிட்ட நிலையில் இலங்கை ஜனாதிபதி TRC என்னும் வழிமுறையை முன்வைப்பதாகத் தெரிகிறது. TRC என்பது தென்னாபிரிக்காவின் வழியில் உண்மை கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்து யுத்தத்தின்போது நிகழ்ந்ததென்று கூறப்படும் சர்வதேச மனிதாயச் சட்டமீறல்கள் பற்றி விசாரிப்பது ஆகும். சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றின் மூலம் எதனை அடையலாம் என்று கருதப்படுகிறதோ அதனை TRC மூலம் அடையலாம் எனக் கருதப்படுகிறது. இது காலம் கடத்தும் முயற்சிக்கான ஒரு வழி, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உபாயம் என்றே கருதப்படுகிறது. தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கலின் முடிவுக்குப் பின்னரான (POST-APARTHEID) பாதுகாப்பு மீளாய்வு போன்றதொன்றை இலங்கையிலும் தொடக்கலாம் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் போலத்தெரிகிறது. அத்தகையதொரு பாதுகாப்பு மீளாய்வுக்கொள்கை முரண்பாட்டுக்குப் பிந்திய (POST-CONFLICT) கால கட்டத்திற்கே பொருத்தமானது என்று இவ்விடயம் குறித்த அறிவுள்ளவர்கள் கூறுகின்றனர். ஆபிரிக்க தேசிய காங்கிரஸை (ANC) பொறுத்தவரை அது உண்மை கண்டறியும் வேலையுடன் இணைந்ததாகவே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு இணங்கும் என்று கருதப்படுகிறது.

அரசாங்கத்தின் TRC அமைக்கும் ஆலோசனை என்ற வலைக்குள் சர்வதேச சமூகம் இலகுவில் வீழ்ந்து விடப்போவதில்லை என்றே தோன்றுகிறது. ஐ.நா.உயர் ஆணையாளர் நவிபிள்ளை இலங்கையின் மனித உரிமைகள் நிலைபற்றி 74 விடயங்களைக் குறிப்பிட்டு கடும் தொனியிலான அறிக்கையை வெளியிட்டுள்ளார். இலங்கை சில விடயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை அரசு குறுங்கால உபாயங்களை கையாளப்பார்க்கிறதே தவிர, ஜெனீவா என்ற சிக்கலுக்கு அதனிடம் நீண்ட காலத் தந்திரோபாயத்திட்டம் எதுவுமில்லை. ஜெனீவாப்பிரச்சினை இலங்கையின் வெளியுறவுகளை வரையறை செய்யும் ஒன்றாக மாறியுள்ள நிலையில், ஒவ்வொரு ஆண்டும் போர்க்களம் ஒன்றுக்குச் செல்வதான முறையில் ஜெனீவா விவகாரம் அணுகப்படுகிறது**



எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது இலங்கையில் என்ன நடந்தது என்பதை பட்டவர்த்தனமாக வெளிக்காட்டுவதாக உள்ளதென்றும் இது அடிப்படையில் அரசியல் விருப்பம் அல்லது உறுதி (Political will) அரசாங்கத்திற்கு இல்லை என்பதைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார். இது கால அவகாசம் போதாது, தேவையான தொழில்நுட்பத்திறன் பற்றாக்குறை என்பனவற்றால் ஏற்பட்ட குறையல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். ஐந்து வருடங்கள் கடந்தோடிவிட்டன. பொறுப்புக்கூறல் செயல்முறையின் தொடக்க நடவடிக்கைகளுக்கான அடையாளம் கூட இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

### தந்திரோபாயத்திட்டம் இல்லை

இலங்கை அரசு குறுங்கால உபாயங்களை கையாளப் பார்க்கிறதே தவிர, ஜெனீவா என்ற சிக்கலுக்கு அதனிடம் நீண்ட காலத் தந்திரோபாயத்திட்டம் இல்லை என்பதையே காட்டுகிறது. ஜெனீவாப் பிரச்சினை இலங்கையின் வெளியுறவுகளை வரையறை செய்யும் ஒன்றாக ஆகியுள்ள நிலையில் ஒவ்வொரு ஆண்டும் போர்க்களம் ஒன்றுக்குச் செல்வதான முறையில் ஜெனீவா விவகாரம் அணுகப்படுகிறது. ஆதலால் அந்தந்த வேளைக்கு உபயோகிக்கக் கூடிய குறுங்கால உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டின் TRC அத்தகைய ஒரு உபாயம் தான். இவ்வாண்டு தொடரும் ஒரு யுத்தத்தின் ஒரு அத்தியாயமாகவே பார்க்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வருடத்தின் தேவைகளுக்கான உத்திகள் நீண்டகால வெற்றிக்கு உதவவில்லை. சர்வதேச சமூகத்திற்குப் பல உறுதிமொழிகளைக் கொடுப்பதும் பின் ஜெனீவா மகாநாடு முடிந்ததும் அவற்றை அலட்சியப்படுத்துவதுமான தந்திரம் தொடர்ந்து பலிக்கப்போவதில்லை. இந்தத் தந்திரத்தைக்கையாளும் போது முக்கியமான நாடுகள் சிலவற்றை இலங்கை தன்கைக்குள் வைத்திருந்தால் அது பயன் அளித்திருக்கலாம்.

அமெரிக்காவையும், இந்தியாவையும் விடுதலைப் புலிகளின் ஆதரவு நாடுகள், விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களுக்கு இடம்கொடுத்துக் காப்பாற்றுபவர்கள் என்றொரு கருத்துப்பிரசாரம் செய்யப்படுகிறது. போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தவற்றைத் திரும்பிப் பார்த்தால் இப்பிரசாரத்தில் எந்தவித உண்மையும் இல்லை என்பது தெரியவரும். அப்போது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் இலங்கை தோற்கடிப்பதற்கு இந்நாடுகளே உதவின என்பதைக் காணமுடியும்.

### யுத்தகாலத்தின் முக்கிய நட்பு நாடுகள்

யுத்தத்தின்போது தனக்கு மிகப் பெரிய உதவிகளை வழங்கிய நாடுகளாக பாகிஸ்தான், சீனா, ரஷ்யா என்பன விளங்கியதாக ராஜபக்ஷ அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளைப் போர்க்களத்தில் தோற்கடிப்பதற்கு ஆயுதங்களையும், உபகரணங்களையும் தங்குதடையின்றி அந்நாடுகளே வழங்கின என்றும் கூறப்படுகிறது. ரணில்விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அமெரிக்காவின் 'பீஸ்நிக்ஸ்' படைப்பிரிவு இலங்கையின் இராணுவப் பலம் குறித்து மதிப்பீடு ஒன்றைச் செய்து இலங்கைக்கு உதவி புரிந்தது. 'சமுத்திரா' என்ற கடற்படைக்கப்பல் அப்போது அமெரிக்காவால் நன்கொடையாக வழங்கப்பட்டது. கரையோரக்காவல் பலப்படுத்தப்படுவதற்கு அமெரிக்க உதவி பெறப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள ஈழம்வாதிகளின் அடிமையாக உள்ளது என்று கூறப்படும் புதுடில்லி அரசாங்கம் மூன்று கடற்படைக் கப்பல்களைக் கொடுத்து உதவியது. 'சயுர', 'சாகர', 'சயூரால' என்பன இக் கப்பல்களின் பெயர்களாகும். ஈழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் நான்காம் கட்டத்தில் 2006-2009 காலத்தில் இவற்றுள் இரண்டு வழங்கப்பட்டது. அமெரிக்கா கொடுத்த கப்பலோடு சேர்த்து இந்த நான்கு கடற்படைக் கப்பல்களும் தான் விடுதலைப் புலிகளின் 'மிதக்கும் இருப்புக் களஞ்சியங்கள்' என்று கூறப்பட்ட 11 கப்பல்களைக் கடலில் மூழ்கடிப்பதற்கு உதவின. யுத்தத்தின் இறுதி வருடத்தில் இக்கப்பல்களை கடலில் மூழ்கடித்ததன் மூலம் வடக்குக் கிழக்கில் போரிட்ட விடுதலைப் புலிகளுக்கு முக்கியமாகத் தேவைப்பட்ட ஆயுதங்கள் கிடைக்காமல் போயின. எதிரியின் கப்பல்களின் நடமாட்டம் பற்றிய உளவுத் தகவல்களை அமெரிக்காவும், இந்தியாவுமே வழங்கின. இந்தியாவின் இராணுவ விமானங்கள் கடற்பரப்புக்கு மேலாக ரோந்து செய்து கப்பல்களை அடையாளம் காணவும் உதவின.

இவை யாவற்றையும் மறந்து இலங்கை அரசு இந்நாடுகளுக்குச் சவால் விடுவது துரோகத்தனமானது. முன்னாள் கூட்டாளிகளும், பெரும் வல்லரசுமான இவ்விரு நாடுகளுடனும் விரோதமும் பகைமையும் பாராட்டுவது பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயம்.

போரில் இரக்கமற்ற ஒரு பயங்கரவாத அமைப்பைத் தோற்கடித்தது என்று பாராட்டை ஐ.நா.மனித உரிமைச் சபையில் பெற்று ஐந்து ஆண்டுகள் கழிவதற்கு முன்பாகவே இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கை படுமோசமான நிலைக்குத் தாழ்ந்து விட்டது. இதற்குக் காரணம் இலங்கை விவகாரங்களைக் கையாளக்கூடிய தகுதியுடைய இராஜதந்திரிகள் ஜெனீவாவில் இல்லை என்பதல்ல. தற்போது வெளிவிவகாரங்களைக்கையாளும் அதிகாரிகள் எடுத்துக்கொண்டுள்ள விடயத்தின் தன்மை அப்படியானது. மிகவும் புத்திசாலிகளான இராஜதந்திரிகள் இருந்திருந்தாலும் அவர்களின் வாதங்கள் கூட பயனற்றவையாகவே இருக்கும். இந்த ஐந்து வருட காலத்தில் தனது இருபெரும் வர்த்தகப்பங்காளிகளான ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் என்ற இரண்டையும் இலங்கை தன்னில் இருந்து தனிமைப்படுத்திக் கொண்டதோடு, இந்தியாவுடனான உறவுகளையும் தவறாகக் கையாண்டுள்ளது.

நவிபிள்ளையினால் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் ஒவ்வொரு விடயத்திற்கும் இலங்கை தனது பதிலைக் கொடுத்துள்ளது. அப்பதிலில் நவிபிள்ளையை பக்கச் சார்பானவர் என அரசு குற்றம் சாட்டியது. 2009ஆம் ஆண்டில் யுத்தம் முடிந்த வேளையிலேயே அவர் போரில் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று கூறியவர் என்றும் இலங்கை குற்றஞ் சாட்டியுள்ளது. அன்று அந்தக் கோரிக்கையை எதிர்த்த முக்கிய நட்பு நாடுகள் இன்று இலங்கையைக் கைவிட்டுவிட்டுப் பிள்ளையின் பக்கம் நின்று விசாரணைக்கு ஆதரவு தெரிவிக்கின்றனவே. இது எப்படி நிகழ்ந்தது என்று கேட்கத் தோன்றுகிறது. இலங்கை ஜெனீவாவில் எதிர்கொண்ட சவால்கள் பற்றிய வரலாற்றை எதிர்காலத்தில் எழுதப் போகும் வரலாற்றாசிரியர்கள் ஜெனீவாவிற்கான பாதை தவறான திருப்பங்களைக் கொண்டது; பலவாய்ப்புகள் அப்போது கைநழுவ விடப் பட்டன; உடன்படிக்கைகள் கிழித்து வீசப்பட்டன; இலங்கை தன்னுடைய தலையிலேயே மண்ணை வாரிப்போட்டது என்பவற்றை எழுதுவதற்குத் தவறமாட்டார்கள். ■

---

***(28ஆம் பக்கத்தொடர்ச்சி)***

2010-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரித்து அவருக்கு தமிழ் மக்களை வாக்களிக்கச் செய்தார்கள்? தற்போது, இராணுவத் தளபதிகள் மற்றும் போர் வீரர்களான இரண்டு இலட்சம் சிங்களவர்கள், அவர்களது குடும்ப அங்கத்தினர், நண்பர்கள் மற்றும் பொது மக்களை பகைத்துக் கொண்டு, அப்பாவித் தமிழ் மக்கள், இழந்துபோன தங்களது அமைதியான ,வாழ்வை மீண்டும் துவங்கி விட முடியும் என்று இவர்கள் கருதுகிறார்களா?

ஒன்று, 'போர்க் குற்றங்கள்' என்ற தலைப்பை விட்டு, அதிகாரப் பகிர்வு, அதை விட உடனடிப் தேவையாக தமிழ் மக்களின் வாழ்வாதாரம் ஆகிய வற்றைக் குறித்து தமிழர் தலைமைகள் கவலைப்பட வேண்டும். முக்கியமாக, கூட்டமைப்புத் தலைமை, 'போர்க் குற்றங்கள்' குறித்த கோரிக்கை, தாங்கள் எதிர்பார்க்கும் 'ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு' என்ற கருத்திற்கு ஒவ்வியதா என்றும் தங்களைத் தானே வினவி, பதில் கண்டு, செயல்பட வேண்டும். அல்லது, இத்தகைய கோரிக்கைகள், 'தனி நாடு' காணத் துடிக்கும், புலம்பெயர்ந்தோரில் சிலரின் அபிலாஷைகளை கருத்தில் கொண்டு மட்டுமே முன் வைக்கப்பட்டதா என்பதையும் கருதிச் செயல்பட வேண்டும். இந்தியப் பெருங்கடல் குறித்த சர்வதேச அரசியலில் இலங்கை ஒரு பகடைக்காய் மட்டுமே. அதில் தமிழ் மக்கள் ஒரு சிறிய விளையாட்டுப் பொருள் தான். இந்தப் பகடைக்காய்களை எப்போது, எவ்வாறு நகர்த்த வேண்டும் என்று விளையாட்டு வீரனே சிந்தித்து, தனது - தனது மட்டுமான - வெற்றிக்கு வழி வகுத்துக் கொள்வான். அதில், பகடைக்காய்கள் அவனது சொல்படி ஆடுமே தவிர, தனக்கு என்று எந்தத் தகுதியையும் பெற்றுவிட முடியாது.

அந்தப் பகடைக்காய்கள், அதிலும் அந்த சிறிய பகடைக்காய், தானே விளையாட்டு வீரன் என்று கருதிச் செயல்பட்டால், முதலில் 'பொம்மை கூட பேசுகிறதே' என்ற ஆச்சரியம் தோன்றுவது இயற்கையே. ஆனால், 'பொம்மை' மனிதனாகி விடமுடியாது. இது தான், கடந்த காலங்களில் நிகழ்ந்தது. அதுவே தற்போதும், எப்போதும் நிகழும். இதனை உணர்ந்து, புலம்பெயர்ந்தோர் செயல்படுகிறார்களோ, இல்லையோ, உள்நாட்டில் வாழும் தமிழர் தலைமைகள் இனியாவது முடிவுகளை எடுக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்




# மீண்டும் ஒரு சுற்று ஜெனீவா

ஏதோ அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவு கிடைத்துவிட்டால் அடுத்த நாளே இலங்கை அரசும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் தலையை தொங்கப்போட்டுக்கொண்டு தமிழ்ச்சமூகம் எதிர்பார்க்கும் அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்து விடுவர் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது



என்.சத்தியமூர்த்தி

பல்கலைக்கழக மாணவர்கள் வருடத்திற்கு இரண்டு முறை தேர்வுகளைச் சந்திக்கிறார்களோ இல்லையோ, இலங்கை அரசு மார்ச்-செப்டம்பர் என்று வருடத்திற்கு இரு முறை, ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு தன்னைத் தயார்படுத்திக்கொள்ளப் பழகிவிட்டது. ஆனால், அவ்வாறு ஒரே தேர்வுகளைத் தொடர்ந்து எழுதியும் வெற்றி பெறாத மாணவர்களைப் போலவே, இலங்கை அரசும் ஜெனீவாவில் ஒரு கூட்டத்தொடர் முடிந்த பின்னர், அடுத்த 'ரவுண்ட்'டிற்கான முஸ்தீபுகளை மேற்கொள்ளத் தொடங்கிவிடுகிறது.

இனப்போர் காலகட்டத்திலும் சரி, அதற்குப் பிந்தைய மாதங்களிலும் சரி, இலங்கை அரசு இயந்திர வேகமாகச் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்ததில்லை. மாறாக, சில-பல விடயங்களில், எதிர்பார்த்ததை விட வேகமாகச் செயற்பட்டதன் மூலம், பல்வேறு சந்தேகங்களையே எழுப்பியது. அந்த வேகமே 2012-ஆம் ஆண்டு ஜெனீவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடருக்குப் பின்னரும் தொடர்கிறது. ஆனால், அரசு இயந்திரமே ஜெனீவாவை நோக்கி மீண்டும் மீண்டும் பய ணிக்க வேண்டியுள்ள தருணத்தில், இந்த வேகம் இன்னும் எத்தனை மாதங்களுக்கும் வருடங்களுக்கும் தொடரும் என்ற கேள்வியும் உடன் எழுகிறது.

ஆனால், தற்போது இலங்கை அரசின் கவலை என்ன வோ, கடந்த இரண்டு வருடங்களைப் போலவே ஜெனீவா வாக்களிப்பை பெரிய அளவிலான பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் தற்போதும் கடந்து விடலாம் என்பது குறித்து மட்டும் தான். எதிர்காலம் குறித்து அதிக சிந்தனையில் இருந்திருந்தால், இனப்பிரச்சினை இந்த அளவிற்கு வளர்ந் திராது என்பது என்னவோ உண்மை. ஆனால், என்ன தேவை என்பதை தமிழ் அரசியல் தலைமையும் சரியாக உணர்ந்து செயற்படாத காலம் வரையிலும் கடந்த ஐம்பது ஆண்டு பயணம் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக் குமோ என்ற கவலையும் உடன் எழுகிறது.

தற்போது மனித உரிமைகள் பேரவையின் வாக்களிப் பிற்காக அமெரிக்க அரசு முன்வைத்திருக்கும் வரைவு தீர் மானமும் இதனையே குறிக்கிறது. ஏதோ, அமெரிக்கா உட் பட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவு கிடைத்துவிட்டால், அடுத்த நாளே இலங்கை அரசும், ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தலைமையும் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு தமிழ்ச் சமூகம் எதிர்பார்க்கும் அனைத்து உரிமை களையும் விட்டுக்கொடுத்து விடும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது எனலாம். அல்லது இலங்கையில் விடு பட்டு வாழ்ந்து வரும் தமிழர்களும் அவர்களது அரசியல் தலைமையும் புலம்பெயர்ந்தோரின் கூற்றுகளை நம்பி மோசம் போய்விட்டது என்று கூடக் கூறலாம்.

அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. புலம்பெயர்ந் தோரைப் பொறுத்தவரையில் அவர்கள் எதிர்காலத்திற் கான எல்லைக்கற்களை நிறுவி அங்கே சென்றடைவதற் கான சாத்தியக் கூறுகளை மட்டுமே யோசித்துச் செயற்பட்டு வருகிறார்கள். தற்காலமும் தற்போது, இனப்போரின் கோரப்பிடியில் இருந்து தங்களை மெதுவாக விடுவித்துக் கொண்டு வரும் தமிழ்ச் சமுதாயமும் அவர்களது ஆட்டத் தில் வெறும் பகடைக் காய்களே. இருவரையும் பொறுத்த வரை, 'விடிவு காலம்' என்பது வேறுபட்டு நிற்பதே இதற்கு காரணம்.

இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்குத் தலைமை ஏற்று நிற் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொத்தாம் பொதுவாக தங்களது அரசியல் எதிர்பார்ப்புகளைப் பட்டியல் இடு வதை நிறுத்திவிட்டு தற்போதைய இலங்கை அரசியல் சூழ லில் எதனை எதிர்பார்த்தால், என்னென்ன கிடைக்கும் என்று தீவிர ஆலோசனை செய்து மட்டுமே தனது முடிவு களை எடுக்க வேண்டும். அரசியல் யுக்திகளை வகுக்க வேண்டும். எப்போது இனப்பிரச்சினையை 'போர்க் குற் றம்' என்ற போர்வைக்குள் மறைக்க கூட்டமைப்பும் உடன் நிற்கத் தொடங்கியதோ, அப்போதே அந்தக் கட்சி தமிழர்க ளின் எதிர்காலத்தை சர்வதேச சமூகம் என்று அறியப்படும் மேலை நாடுகளிடம் அடகு வைத்துவிட்டது என்பதே உண்மை.

# இந்தியாவின் எதிர்பார்ப்பும் இந்தியாவிடம் எதிர்பார்ப்பும்

'இந்தியா எங்களது தாய்' என்று இலங்கைத் தமிழர்கள் கூறுவதில் அர்த்தம் உள்ளது. தாயிடம் மட்டுமே நாம் அதிக உரிமைகள் எடுத் துக் கொள்வோம். தாயிடம் மட்டுமே, எந்த வித அறிவுரையும் கேட்காமல், அவ்வாறு கேட்காமலே அவர் அறிவுரை கொடுத்தாலும் அதனைச் செவி மடுக்காமல் நாம் செய்ய நினைத்ததை செயல்ப டுத்திவிட்டு, அதன் சாதக-பாதகங்களில் இருந்த தவறைச் சரி செய்வதற்கு மீண்டும் மீண்டும் ஓடு வோம்.

அந்த அசட்டுத் தாயும், தன் பிள்ளை தானே, என்று மீண்டும் அரவணைத்துக் கொண்டு, ஆத ரவு கொள்வார். அப்போதும் கூட. நமது கடந்த காலத் தவறுகளுக்கு நாம் அந்த அப்பாவித் தாயை குறை சொல்வோமே தவிர, நமது தவறை உணர்ந்து கொள்ள மாட்டோம். அப்போதும், அந் தத் தாய், தனது கடமையில் இருந்து தவறுவ தில்லை. தனது அன்பில் குன்றுமணி அளவில் கூட குறை வைத்ததில்லை

இனப்போர் முடிந்த காலகட்டத்தில், இலங்கை அரசும், தமிழர் தலைமையான கூட்டமைப்பும், அதிகாரப் பகிர்வு உட்பட்ட அரசியல் பிரச்சினைக ளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று இந்தியா, இரு சாராரிடம் வலி யுறுத்தி வந்தது. இருபாலரின் தயக்கங்களுக்கும் சந்தேகங்களுக்கும் நடுவே துவங்கப்பட்ட பேச்சு வார்த்தை, எங்கே எப்போதாவது வெற்றி இலக்கை எட்டிவிடுமோ என்று யார் கண்பட் டதோ தெரியவில்லை, 'போர்க் குற்றங்கள்' என்ற போர்வையில் திடீரென்று தடைக்கற்கள் தோன் றின. தற்போது, பேச்சுவார்த்தை குறித்து சிந்திப்ப தற்குக் கூட இருபாலருக்கும் மனமோ, மணித்தி யாலங்களோ இல்லை என்பதே உண்மை.

மனம் இருந்தால் மார்க்கம் இருக்கும் அதுவும் உண்மை. ஆனால், மனம் இருக்காவிட்டால், மார்க்கமும் இருக்காது. அதுவும் இந்தியா, இலங் கைப் பிரச்சினையில் அறிந்துணர்ந்த உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்பட்டு, காலம் கடந்து தான் கண் திறப்போம் என்று தனது மகனே வரிந்து கொண்டு செயல்படும் போது, அந்தத் தாயால், அவன் மனம் திருந்தும் வரை பொறுமை காத்து, அவனுக்காக ஆண்டவனிடம் பிரார்த்திக்க முடியுமே தவிர, வேறொன்றும் செய்ய முடியாது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமை, தமிழ் நாட்டு அரசியல் அழுத்தங்கள் காரணமாக மட்டுமில்லை, தற்போது முறிந்துபட்ட இலங்கைப் பேச்சுவார்த்தைகளில், அரசு தரப்பு முழு மனதுடன் பங்கு பெறவில்லை என்ற இந்திய அரசின் கணிப்பும் கூட அதற்கு காரணமாக அமைந்தது. ஆனால், அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு என்ற கருத்தே இந்திய அரசின் ஆணித்தரமான நிலைப்பாடு என்று கருதலாம்.

கடந்த 2012ஆம் ஆண்டு ஜெனீவா வாக்கெடுப்பிற்குப் பின்னர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், மியான்மார் நாட்டில் நடந்த வங்ககடல் நாடுகளின் உச்சிமகாநாட்டின் போது சந்தித்துப் பேசியுள்ளார்கள். இதுவே, இந்தியப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர், இந்தியப் பிரதமரின் கடைசி வெளிநாட்டு விஜயமாகவும் இருக்கலாம். இலங்கை அரசுத் தலைமையுடனான கடைசிச் சுற்றுப் பேச்சுவார்த்தை என்றும் கருதலாம்.

பத்திரிகைச் செய்திகளின் படி, மியான்மாரில் சந்தித்த இரு நாட்டுத் தலைவர்களும், மீனவர் பிரச்சினைக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினை மற்றும் ஜெனீவா வாக்களிப்பு குறித்தும் பேசியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதற்காக, இந்த முறை ஜெனீவா வாக்கெடுப்பில், இந்தியா இலங்கை அரசை ஆதரித்து வாக்களிக்கும் என்றல்ல பொருள். ஆனால், சர்வதேச அரசியல், இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு நிர்ப்பந்தங்கள் மற்றும் இரு நாட்டு உறவுகள் குறித்த எதிர்கால நிலைப்பாடுகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டே, இந்தியா ஜெனீவா வாக்களிப்பு குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்ற கருத்தும் இந்தியாவில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

## மொரிஷியஸை நோக்கிப் பயணித்து

மியான்மார் பேச்சுவார்த்தைக்கு பின்னர், இந்தியத் தலைநகர் புது டெல்லியில் இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் இந்தியத் பெருங்கடல் பாதுகாப்புக் குறித்த முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இலங்கை அரசு சார்பில் பாதுகாப்புத் துறைச் செயலரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான கோதாபய ராஜபக்ஷ அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்த மூன்று நாடுகளின் அண்டை நாடுகளாகக் கருதப்படும் மொரிஷியஸ் மற்றும் செயிஷல்ஸ் ஆகிய இரு நாடுகளும் இந்த கூட்டத்தில் 'பார்வையாளர்களாக' கலந்து கொண்டன.

இந்தக் கூட்டத்தில், இலங்கை, எதிர்வரும் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை, மொரிஷியஸ் நாடும் முன்மொழிந்துள்ளமைக்கு கவலை தெரிவித்ததாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறின. கடந்த வருடம் நவம்பர் மாதம், இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாட்டை மொரிஷியஸ் திடீரென்று கடைசி நிமிடத்தில் புறக்கணித்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அண்மையில் உள்ள டிகோ கார்ஷியா என்ற குட்டித் தீவில் அமெரிக்கப் படைத்தளம் அமைந்துள்ளது. மொரிஷியஸ் நாட்டிற்குச் சொந்தமானது என்று கருதப்பட்ட அந்தத் தீவை தெற்காசியாவின் பெரும் பகுதிகளை ஆண்டு வந்த இங்கிலாந்து அரசு விலைக்கு வாங்கி, அமெரிக்காவிற்கு தாரை வார்த்தது, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான சரித்திரம். அந்த குத்தகை எதிர்வரும் 2016-ஆம் ஆண்டோடு முடிவிற்கு வருகிறது. அதனை நீடித்துக் கொடுப்பதற்கு, அந்தத் தீவிலிருந்து கட்டாயமாக மொரிஷியஸ் நாட்டில் குடியமர்த்தப்பட்ட 'சக்கன்' (Changgans) மக்களின் எதிர்ப்பு இன்னமும் தொடருகிறது.

பிற நாடுகளில் மனித உரிமை குறித்து உயர்த்திக் குரல் எழுப்பும் அமெரிக்காவும் இங்கிலாந்தும், சக்கன் மக்களின் உணர்வுகளுக்கும், தங்களது மண்ணோடு அவர்களுக்கும் உள்ள ஆழ்ந்த பிணைப்பையும் குறித்து என்ன சொல்லப் போகிறது என்பதையும் உலகமே அமைதியாக எதிர்நோக்கி வருகிறது. அந்த வகையில், டிகோ கார்ஷியாவோ, அல்லது மொரிஷியஸ் தீவுகளோ, இந்தியப் பெருங்கடல் பகுதியில், அமெரிக்க இராணுவத் தளமாகவோ, அல்லது வேறு ஏதாவது வகையிலோ அமெரிக்க இராணுவ முயற்சிகளுக்கு உதவும் நிலைமை தொடருமானால், அது இந்தப் பகுதியில் சலசலப்பையும், நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்தி விடும்.

இது, இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளுக்குமே நல்லதல்ல. காரணம், எங்கெல்லாம், அமெரிக்கப் படைகள் காலூன்றுகிறதோ, அங்கெல்லாம், சீனாவும் பின்தொடர்கிறது என்பது, 'பனிப்போர்' முடிந்த காலகட்டத்தின் சர்வதேச அரசியல் சித்தாந்தமாகவே ஆகிவிட்டது. இவ்வாறான அந்நிய நாடுகளின் தலையீடு இந்தப் பகுதிக்கே நல்லதல்ல.

இந்த வகையில், ஆழ்ந்து சிந்தித்தால், டிகோ கார்ஷியா குறித்த சர்வதேச அரசியலில் இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு பகடைக்காயாக மாற்றப்பட்டு விட்டார்கள் என்பது அவர்களுக்கே புரியும். அதற்கேற்ப சிந்தித்துச் செயல்படாமல், பின்னர் ஒரு நாளில் இந்தியா தங்களை சர்வதேச அரசியல் பகடைக்காயாக ஆக்கி விட்டது என்று அவர்களில் சிலர் குயுக்தியுடன் மீண்டும் கூறத்துவங்கினால், அதனால் பலிக்கடா ஆகப்போவது யார் என்பது மீண்டும் மீண்டும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அந்தத் தவறை அவர்கள் தெரிந்து செய்தார்கள் என்று கூறி விட முடியாது. இனப்பிரச்சினைக்காக அரசியல் தீர்வை புலம்பெயர்ந்தோரும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே நிறைவு கிடைக்கும் என்ற அவர்களது அதீத அபிலாசைகளின் காரணமாகவும் அவர்கள் இவ்வாறு செயல்பட்டார்கள் என்று கூற இடமிருக்கிறது. காரணம் புலம்பெயர்ந்தோரும், இனப்பிரச்சினையின் கடந்த கால விழுதுகளே. அரசியல் போராட்டங்கள் ஆகட்டும், பின்னர் போராளிக் குழுக்கள் ஆகட்டும், முடிவில் முப்பது ஆண்டுகள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையில் நடந்த போராகட்டும் அவை அனைத்திலும் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பை யாரும் மறுத்துவிடவோ, மறந்து விடவோ முடியாது.

**இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணை தேவையென்று தெட்டத்தெளிவாக அமெரிக்காவின் தீர்மானம் எதுவும் கூறிவிடவில்லை. எதிர்வரும் நாட்களில் அமெரிக்கா அவ்வாறு செய்தாலும் அதற்கு மனித உரிமைகள் பேரவையில் தேவையான ஆதரவு கிடைக்குமென்று கருதிவிட முடியாது.**

## வீரம் விலை போகாது

புலம்பெயர்ந்தோரைப் பொறுத்த மட்டில் அவர்கள் சிந்தனைவாதிகள். பெரும்பாலும் அரசியல்வாதிகள் அல்ல. அவர்களது முதல் தலைமுறையினர் விட்டுச்சென்ற இலங்கை அரசியல் தந்திரங்களை மட்டுமே அறிந்தவர்கள். அந்தத் தலைமுறை வழிவந்த சிங்கள அரசியல் தலைமைகள் ஆட்சியில் இருந்தவரை புலம்பெயர்ந்தோரால், ஏட்டிக்குப்போட்டியாக இனப் பிரச்சினையை ஒட்டி அரசியல் உபாயங் களை, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைக்கு விடயதானம் செய்ய முடிந்தது.

புலம்பெயர்ந்தோர், தங்களது கோரிக்கைகளுக்கு வரி வடிவம் கொடுப்பதிலும், அதற்கு சித்தாந்த ரீதியான வியாக்கியானங்களை அளிப்பதிலும், திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதற்கான கருவிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் மட்டுமே ஆளுமை பெற்றவர்கள். அவ்வாறு செய்யும் போது, எதிரி எவ்வாறெல்லாம் யோசிக்க முடியும் என்றோ, செயல்படுவான் என்றோ, புதிய கருத்துகளை ஜீரணித்துச் செயல்பட தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளாதவர்கள். இதுவும் காலத்தின் கோலம் தான். அவர்களது தவறு எதுவும் அதில் இல்லை. இந்த ஒரே காரணத்தினால் தான், முக்கியமாக புலம்பெயர்ந்தோர், விடுதலைப் புலிகள் இயக்கமும் பிரபாகரன் தலைமையும் பிற போராளி இயக்கங்களை அழித்தொழித்த போது கண்டு கொள்ளாமல் இருந்தனர். ஆனால், பின்னர் இந்த ஒரு காரணத்தினால் பிரபாகரன் தலைமை வழிதவறிப் போன போது, அந்த உண்மையை ஏற்றுக்கொள்ளவோ அவ்வாறு ஏற்றுக் கொண்டால் அதனை தட்டிக் கேட்கவோ திராணி இல்லாமல் போனவர்கள்.

இந்த ஒரே காரணத்தினால் தான், கொழும்பு உயர் மட்ட சிங்கள அரசு தலைமைகளை அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக மீண்டும் மீண்டும் தோற்கடித்துப் பழகிப் போன அவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவும் தங்களைப் போலவே 'மண் மணம்' பூத்த அரசியல்வாதி என்பதைக் கண்டு கொள்ள முடியவில்லை. அதற்கான விலையையும் அரசியல் மற்றும் போர்க்களங்களில் கொடுக்க வேண்டியிருந்தது. 'வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்' என்று இந்தியாவில், திராவிட முன்னேற்றக் கழக நிறுவுனர் அண்ணாதுரை இலக்கியச்சுவையுடன் தமிழ்ப் படுத்திய ஆங்கிலப் பழமொழியை, புலம் பெயர்ந்தோர் மறந்தமையும், தாங்கள் விட்டுச்சென்ற ஓர் உலகின் சமகால சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிய அவர்களால் முடியாததற்கான காரணம்.

## போராளிகளின் எதிர்காலம்?

தற்போது, ஜெனீவாவில் அமெரிக்கா உட்பட்ட நாடுகள் முன்வைத்துள்ள தீர்மானம், கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளையின் சில கருத்துகளை வழிமொழிவதாக அமைந்துள்ளது. குறிப்பாக, இனப்போரில் 'இரு தரப்பும்' செய்த 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணை தேவை என்ற அவரது பரிந்துரை, ஏனோ இலங்கை அரசு தரப்பிற்கு மட்டுமே பொருந்தும் என்பது போல தமிழர் தரப்பு எண்ணிச் செயல்படுகிறது. இது அவர்களது அறியாமையைக் காட்டுகிறது.

இலங்கை 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று தெள்ளத் தெளிவாக அமெரிக்காவின் தீர்மான வரைவு எதுவும் கூறி விடவில்லை. எதிர்வரும் நாட்களில் அமெரிக்கா அவ்வாறு செய்தாலும், அதற்கு மனித உரிமைகள் பேரவையில் தேவையான ஆதரவு கிடைக்கும் என்று கருதிவிடமுடியாது. ஆனால், அவ்வாறு ஒரு சர்வதேச விசாரணை நடைபெற்றால், அதில் சந்தேக நபர்களாக முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் உட்படுத்தப் படுவர் என்பது, தமிழர் தலைமைகளுக்கு ஏனோ புரியவில்லை.

'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணை நடைபெற்றால், அதில் அரசு இராணுவத்தினரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவர். அவர்களில், இராணுவத்தினருக்கெதிரான குற்றச்சாட்டுகள் தெளிவாக பதிவு செய்யப்பட்டு அதில் குற்றவாளிகள் எந்தப் படைப்பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்திருக்க முடியும் என்பன போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே வழக்குகள் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெடுக்கப்பட முடியும். அதற்குத் தேவையான கால அவகாசம் மிகுதி. அதற்கான ஆவண-ஆதாரங்களும் பெரும்பாலும் அரசு தரப்பினரிடமே இருப்பதும் இயற்கை. அதேசமயம், 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணையோ, அல்லது சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்நாட்டு விசாரணையோ, இரு தரப் பினரையும் பாதிக்குமானால், தற் போது அரசினால் சீர்திருத்தம் அளிக் கப்பட்டு, மறுவாழ்வளிக்கப்பட்ட 12,000 முன்னாள் விடுதலைப் புலி கள் இயக்கப் போராளிகளும் குற்ற வாளிக் கூண்டில் நிறுத்தப்படுவார் கள். அதுபோன்றே, அரசினால் 'போர்க் குற்றவாளிகள்' என்று கருதப் பட்டு, தொடர்ந்து சிறையில் இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் 'சர்வதேச குற்றவாளி கள்' என்று சித்தரிக்கப்படுவார்கள்.

இந்த இரு தரப்பினரில் எவராவது தங்களது உறவுகளையோ, நண்பர்க ளையோ 'காட்டிக் கொடுத்தால்', அவர்களது நிலைமையும் பிரச்சி னைக்குரியதாக மாறிவிடும். அந்த உறவினர்களோ, நண்பர்களோ புலம் பெயர்ந்தோர் என்றால், அவர்களின் பிரச்சினை கவலைக்குரியதாகிவிடும். 'போர்க் குற்றங்கள்' மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு 'பொறுப் புக் கூறல் வேண்டும்' என்று வாதி ட்டு, போராடி வரும் தமிழர் தலைமை களும் அவர்களது புலம்பெயர் சகோ தரர்களும் இவ்வாறு நடக்கவும் வாய்ப்பு உள்ளதை எண்ணி நோக்கி யதாகத் தெரியவில்லை.

இனப்போரின் முடிவுக் காலத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் 'மனி தக் கேடயமாக' பயன்படுத்தி வந்த மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களிடையே தங் களை மறைத்துக் கொண்டு வந்த 12,000 போராளிகளின் 'வாக்கு மூலங்களை' அரசு தரப்பு பதிவு செய்து கொண்டிருக்கும் என்று கருது வதற்கு இடமிருக்கிறது. சர்வதேச விசாரணை என்று வந்துவிட்டால் அந்த வாக்குமூலங்களே குற்றச்சாட் டுகளாக மாறிவிடும் வாய்ப்பு உள் ளது. அந்த வகையில், அரசு தரப்புக் குறித்து தமிழ்த் தலைமைகளிடமோ, சர்வதேசக் குழுக்களிடமோ தற்போது இருக்கும் சாட்சியங்களை விட, விடு தலைப் புலிகளை குறித்து அரசு தரப் பில் தற்போது இருக்கும் சாட்சியங் கள் அதிக பயனளிக்கும் என்று கருத இடமிருக்கிறது. அதேசமயம், அரசு தரப்பு குறித்து ஐ.நா செயலாளர் நாய கம் பான்.கீ.மூன் நியமித்த 'டாரூஸ் மன் குழு'விடம் பாதிக்கப்பட்டவர்க ளோ, அந்தக் குற்றங்களைப் பார்த்த சாட்சியங்களோ தெரிவித்த விடயங் கள் அடுத்த 30 ஆண்டுகளுக்கு வெளிப்படுத்த முடியாது என்ற கட் டுப்பாடுகள் உள்ளன.

அந்த வகையிலும், 'போர்க் குற்றங் கள்' குறித்த சர்வதேச விசாரணை என்று வந்துவிட்டால், அரசு தரப்பை விட தமிழர் தரப்பிற்கே பாதிப்பு அதி கமாக இருக்கும். 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று கோரிக்கை விடுத்து வரும் தமிழ்த் தலைமைகளும் புலம்பெயர்ந் தோர் குழுக்களும் இதைத் தானா எதிர்பார்க்கிறார்கள்? நிச்சயமாக இல் லை. அவ்வாறானால், அவர்கள் முத லில் இருந்தே 'போர்க் குற்றங்கள்' குறித்த சர்வதேச விசாரணை தமிழர்க ளைப் பாதிக்காது என்று கருதியா செயல்பட்டார்கள்? அவ்வாறானால், அது அவர்களது அறியாமையைக் குறிக்கிறதா என்ன?

### பொம்மை கூட பேசுதே

மனித உரிமைகள் பேரவை உட் பட்ட ஐ.நா. அலுவலகங்களில் இருந்து, தமிழர் தலைமை எதை எதிர் பார்த்தது, அதனை இழப்பதற்கு. இது, தத்துவார்த்த கேள்வி போல் தோன்றி னாலும், உண்மை அது தான். உரி மைக்குக் குரல் கொடுப்பதற்கு அப் பால், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உடனடித் தேவைகள் என்ன, அவற்றை அவர்களுக்கு கிடைக்கச்செய்வதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தலைமைகள் கருதியதா என் பது இன்னமும் சந்தேகத்திற்கு இடமா கவே இருக்கிறது. அது போன்றே, வெளிநாடு வாழ் இலங்கைத் தமிழர்க ளும் 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச அரசியல் செய்வதைத்தவிர, உருப்படியாகத் தங்களாலான என்ன உதவிகளை அந்த மக்களுக்குச் செய் தார்கள்?

இன்று, மனித உரிமைகள் பேரவை க்கான அமெரிக்கத் தீர்மானம் நீர்த்துப் போய் உள்ளது என்ற கருத்து தமிழர்க ளிடையே இருக்கிறது. இரண்டுமே எதிர்பார்க்கப்பட வேண்டிய விட யமே. அவ்வாறு எதிர்பார்த்ததினால் தானோ என்னவோ, 'போர்க் குற்றங் கள்' குறித்து சர்வதேச விசாரணைக் குழு அமைத்து அரசின் இராணுவத் தளபதிகளை விசாரணை வளையத் திற்குள் கொண்டு வர வேண்டும் என்ற புதிய கோரிக்கையை தமிழ் மக் களின் பெயரில் சிலர் முன்வைத்திருக் கிறார்கள் என்று பத்திரிகைச் செய்தி கள் கூறுகின்றன.

இந்தச் செய்தியின் அடிப்படையில் பார்க்கும் போது, இந்தப் புண்ணிய வான்கள் எந்த அடிப்படையில் இனப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில்,

(23ஆம் பக்கம் பார்க்க)

**இந்தியப் பெருங்கடல் குறித்த சர்வதேச அரசியலில் இலங்கை ஒரு பகடைக்காய் மட்டுமே, அதில் தமிழ் மக்கள் ஒரு சிறிய விளையாட்டுப் பொருள்தான். இந்த பகடைக்காய்களை எப்போது, எவ்வாறு நகர்த்த வேண்டும் என்று விளையாட்டு வீரனே சிந்தித்து வெற்றிக்கு வழிவகுத்துக் கொள்வான். அதில் பகடைக்காய்கள் அவனது சொல்படி ஆடுமே தவிர, தனக்கு என்று எந்தத்தகுதியையும் பெற்று விட முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



கலாநிதி ஜெஹான் பெரேரா

# வெளியிலிருந்து விரைவான தீர்வுகளை எதிர்பார்த்தவர்களை ஏமாற்றிய அமெரிக்கத் தீர்மானம்

**அரசாங்கம் தன்னைப்பலப்படுத்துவதற்கு கால அவகாசம் கிடைக்கக்கூடும் என்ற போதிலும் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துமாறு அதன்மீது நெருக்குதல்களைப் பிரயோகிக்கும் சர்வதேச செயன்முறைகள் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை**

தமிழர் அரசியல் சமுதாயம் ஏமாற்றப்பட்டுவிட்ட உணர்வுடன் இருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள குழுக்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வரவிருக்கும் தீர்மானத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் ஆதரவைத் திரட்ட முயற்சி மேற்கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் முடிவில் இருந்தும் இதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய , கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய தீர்மானம் முன்னைய தீர்மானங்களை விட கடுமையானதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பொதுநலவாய நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்துகொள்வதற்கு கடந்த நவம்பரில் இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்த காட்டமான கருத்துகள் இந்த எதிர்பார்ப்புகளுக்கு பலமூட்டியிருந்தன. இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய போர்க்குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்படுத்த மனித உரிமைகள் பேரவையில் தனது நாட்டிற்கு இருக்கும் தற்போதைய அந்தஸ்தை பயன்படுத்தப் போவதாகவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் பொதுநலவாய உச்சிமகாநாட்டைப் பகிஷ்கரித்தமையும் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உணர்வைக் கொடுத்தது.

அடுத்து இலங்கைக்கு வந்திருந்த உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்க அலுவலகத்தின் தூதுவர் ஸ்டீபன் ரப் தெரிவித்த கருத்துகள் மனித உரிமைகள் பேரவையில் இத்தடவை இலங்கைக்கு எதிராகக் கடுமையான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு சில உண்மைகளை உணர்த்தியிருக்க வேண்டும். ஆனால், ஐ.நா.வில் எந்தவொரு தீர்மானத்தையும் கொண்டுவருபவர்கள் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதை உறுதி செய்துகொள்ளவேண்டியது அவசியம் என்று அவர் கூறியிருந்தார். சர்வதேச சட்டங்களை மீறியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதை அவர் தெளிவாகவே கூறியிருந்தார். ஆனால், ஒரு தீர்மானம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதன் 47 உறுப்பு நாடுகளில் 24 நாடுகளின் ஆதரவைப் பெறவேண்டிய தேவையிருக்கிறது என்ற யதார்த்தத்தையும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார். ஏனைய வல்லரசுகளான சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு அவற்றின் ஆதரவை பகிரங்கமாகவே தெரியப்படுத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புலத்திலேயே ஸ்டீபன் ரப்பின் இந்தக் கருத்தை நோக்கவேண்டியிருந்தது.

வாக்குகளைப் பெறுவதை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு செயன்முறையும் இயல்பில் அரசியல் ரீதியானதே. அரசியல் என்பது ஆட்சிமுறையில் பதவிகளைக் கைப்பற்றி அதிகாரத்தைச் செலுத்துவதும் மனிதச் சமுதாயத்தின் மேலாக கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுமாக இருக்கின்ற போதிலும் அது சமூக மட்டத்தில் அல்லது தனிநபர் மட்டத்தில் மக்களைச் செல்வாக்கிற்கு உட்படுத்துவதுடனும் சம்பந்தப்பட்டதாகும். பல்வேறுபட்ட தந்திரோபாயங்கள் அரசியலில் பயன்படுத்தப்படுகின்றன. அது மக்கள் மத்தியில் கருத்துகளைப் பரப்புவது, ஏனையவர்களிடம் பேச்சுவார்த்தைகளை நடத்துவது, சட்டங்களை இயற்றுவது மற்றும் பலத்தைப் பிரயோகிப்பது என்பவற்றையும் உள்ளடக்கியது. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கு இருக்கின்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீவிரமான தீர்மானத்தைவிட நடுநிலைப்போக்கான ஒரு தீர்மானமே வெற்றிபெறுவதற்கான வாய்ப்பைப் பெருமளவு கொண்டுள்ளது. ஆனால், பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகள் கொடுத்த உறுதிமொழிகள் மீதான நம்பிக்கை தூதுவர் ஸ்டீபன் ரப் தெரிவித்திருக்கக்கூடிய எச்சரிக்கைமிகுந்த கருத்துகள் மீது கவனத்தைச் செலுத்த அனுமதிக்கவில்லை.

### இழந்த நம்பிக்கை

இலங்கைக்குள் இருக்கும் தமிழ்த் தலைமைத்துவங்களும் புலம்பெயர் தமிழர்களும் போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்றே வலியுறுத்தி வருகின்றனர். தங்களது அரசியல் மற்றும் பொருளாதார மனக்குறைகளைக் கவனிப்பதில் அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை என்று நம்புவதன் காரணமாகவே இத்தகைய நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கிறார்கள். பொறுப்புக் கூறுதலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்காக மாத்திரம் அவர்கள் அதைச் செய்யவில்லை. தான் செய்வது குறித்து அரசாங்கம் கூறுகின்றவற்றுக்கும் தமிழர்கள் அனுபவிக்கின்றவற்றுக்கும் இடையே பாரிய இடைவெளி இருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று கோரும் கூட்டறிக்கை ஒன்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் மத மற்றும் சிவில் சமூகத் தலைவர்களும் கைச்சாத்திட்டார்கள். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நகல் தீர்மானம் இவர்களது எதிர்பார்ப்புகளை ஓரளவிற்கு நிறைவேற்றுவதாக இருக்கிறது. தீர்மானத்தை வலுவுள்ளதாக மாற்றுவதற்குத் தேவையான கூறுகள் நகலில் இருக்கின்றன. பொறுப்புக் கூறுதலுடன் சம்பந்தப்பட்ட இலங்கையின் செயன்முறையை சர்வதேச கண்காணிப்புக்குட்படுத்த வேண்டுமென்ற யோசனையை முன்வைக்கும் தீர்மான நகல் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அதன் சொந்த விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் கோருகிறது.

உண்மையை நாடும் பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச சட்ட மீறல்களுக்கு பொறுப்பானவர்களை வகைசொல்ல வைக்கும் தேசியக் கொள்கை ஒன்று வரையப்பட வேண்டும் என்றும் நகல் தீர்மானம் கேட்கிறது. அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்யுமாறும் வடமாகாண சபைக்குத் தேவையான வளங்களையும் அதிகாரத்தையும் வழங்குமாறும் அது கோருகிறது. அத்துடன் நாட்டின் சகல பிரஜைகளையும் பாதிக்கின்ற நல்லாட்சியுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் கவனிக்குமாறு நகல் தீர்மானம் அரசாங்கத்தைக் கேட்கிறது. வடக்கு, கிழக்கிற்கு மாத்திரம் அல்லது போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய மீறல்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் நாடுமுழுவதிலும் இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்களையும் அவற்றுக்கான பொறுப்புக்கூறல் கடப்பாட்டையும் நகல் தீர்மானம் உள்ளடக்கி அதன் வீச்சு எல்லையை அகலப்படுத்தியிருக்கிறது. மதச் சிறுபான்மையினர், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றியும் பெண்களை இலக்கு வைக்கும் குற்றச் செயல்கள் பற்றியும் கூட அது குறிப்பிடுகின்றது.

பாலியல் வன்முறைகள், ஆட்கள் காணாமல் போகின்ற சம்பவங்கள்,

இலங்கைக்குள் இருக்கும் தமிழ்த் தலைமைத்துவமும் புலம்பெயர் தமிழர்களும் போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்றே வலியுறுத்தி வருகின்றனர். தங்களது அரசியல் மற்றும் பொருளாதார மனக்குறைகளை கவனிப்பதில் அரசாங்கத்திற்கு அக்கறையில்லையென்று நம்புவதன் காரணமாகவே இத்தகைய நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கிறார்கள். பொறுப்புக்கூறுதலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்காக மாத்திரம் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமுறைப்படியான உரிமை சாராத கொலைகள், சித்திரவதைகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மீறும் செயல்கள், அமைதியான முறையில் மக்கள் கூடுவதற்கு இருக்கின்ற உரிமையை மீறும் செயல்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள், சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்திற்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் உட்பட இலங்கையில் தொடர்ந்து இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் பற்றி நகல் தீர்மானம் கடுமையான அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட வன்முறை மற்றும் பாரபட்ச செயல்கள் அதிகரித்து வருகின்றமை, குறிப்பாக இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உட்பட இலங்கையில் உள்ள மதச் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றியும் அது குறிப்பிடுகிறது.

அதிகரித்திருந்த எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தற்போதைய நகல் தீர்மானம் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதும் தங்களது பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வைக் கொண்டுவரக்கூடியதுமான தீர்மானம் ஒன்று பற்றி நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது. உக்ரெயின் நெருக்கடி தொடர்பில் மேற்குலக நாடுகளினால் பரிசீலிக்கப்படுகின்றதைப் போன்ற பொருளாதார மற்றும் அரசியல் தடைகளுடன் கூடிய ஒரு தீர்மானம் நிலைவரத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கக்கூடும். அது ஒன்றில் அரசாங்கம் நெருக்குதல்களுக்கு அடிபணிந்து சர்வதேச கோரிக்கைகளுக்கு இணங்குவதாக இருந்திருக்கும் அல்லது சர்வதேச சமூகத்துடன் அரசாங்கம் நேரடியாக மோதலுக்குப் போவதாக இருந்திருக்கும். இந்த இரு தெரிவுகளுமே அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டு அதைப் பலவீனப்படுத்த முடியும். இதையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிரணி விரும்பும்.

தற்போது முன்னால் உள்ள நகல் தீர்மானம் பொதுவில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கோ அல்லது தமிழர் அரசியல் சமுதாயம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளு க்கோ விரைவான தீர்வுகளை வழங்குவதாக இல்லை. இன்னும் ஒருவருட காலத்தில் ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இன்னொரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அது கோருகிறது. இது இலங்கை அரசாங்கம் இதுகாலவரையில் செயற்பட்டு வந்திருக்கிறதைப் போன்றே தொடர்ந்து செயற்படுவதற்கு அதற்கு வாய்ப்பைக் கொடுக்கிறது. ஆனால், கடந்த காலத்து மனித உரிமை மீறல்களுடன் சேர்த்து தற்போதைய மீறல்கள் மீதும் கவனம் செலுத்துகின்ற செயல்முறைகள் தொடரும் என்பதையே நகல் தீர்மானம் உணர்த்துகிறது. உண்மையில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்துகின்ற விடயங்கள் தற்போது பரந்தளவிலானவையாக இருக்கின்றன. அதன் காரணத்தினால் தான் அரசாங்கம் நகல் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்திருக்கிறது.

அரசாங்கம் தன்னைப் பலப்படுத்துவதற்கு கால அவகாசம் கிடைத்திருக்கின்றது என்ற போதிலும் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துமாறு அதன் மீது நெருக்குதல்களைப் பிரயோகிக்கும் சர்வதேச செயல்முறைகள் அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இலங்கைக்கு வெளியிலிருந்து தங்களது பிரச்சினைகளுக்குத் துரிதமான தீர்வுகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை தமிழ் அரசியல் சமுதாயம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. இன்னும் ஒருவருடத்திற்கோ அல்லது இரண்டு வருடத்திற்கோ காத்திருக்காமல் அரசாங்கத்துடன் ஊடாட்டங்களை செய்யவேண்டியிருக்கும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'வடக்கு கிழக்கில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி' என்ற தலைப்பிலான மகாநாட்டில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிப்படுத்திய கருத்துகளுக்கு அடிப்படையாக அமைந்த உணர்வே தற்போதைய தருணத்தில் வழிகாட்டியாக அமைய வேண்டும். நல்ல சட்டங்கள் கூட தீய ஆட்சியாளர்களினால் தலைகீழாகப் புரட்டக்கூடும். அதேவேளை தீய சட்டங்கள் கூட நல்ல ஆட்சியாளர்களினால் மக்களின் நலன்களுக்காக உருப்படியான முறையில் பயன்படுத்தப்பட முடியும் என்று அவர் கூறினார். ■

---

*(17ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஆட்சிமாற்றத்தை அமெரிக்கா ஏன் விரும்புகிறது ஏன்று நான் நினைப்பதற்கான காரணத்தை விளக்க விரும்புகிறேன். அடுத்துவரும் வருடங்களில் ராஜபக்ஷ ஆட்சி ஒரு உறுதிப்பாடற்ற நிலையை நோக்கிச் செல்லும் என்று அமெரிக்கர்கள் கணிப்பிட்டார்கள். வடக்குடனான அரசாங்கத்தின் உறவு மேலும் மோசமடைகிறது. முஸ்லிம்களும் அந்நியப்படுத்தப்படுகிறார்கள். அரசியல் தீர்வும் வரும் அறிகுறியில்லை. இந்தியத் தேர்தலுக்குப் பிறகு இந்தியாவுடனான இலங்கை அரசாங்கத்தின் உறவும் மோசமடையக் கூடும். தெற்கில் அரசியல் நிலைவரங்களிலும் பிரச்சினைகள் தோன்றுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. மேல் மாகாண சபைக்கும் தென்மாகாண சபைக்கும் இம் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலே சிங்கள-பௌத்த துருப்புச் சீட்டை அரசாங்கம் பயன்படுத்தி ஆட்டத்தை நடத்தக்கூடிய இறுதிச் சந்தர்ப்பமாகவும் அமையலாம். இந்தத் துருப்புச் சீட்டு நெடுகவும் பயன்தரப்போவதில்லை. இத்தகைய சூழ்நிலையை வாஷிங்டன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு காத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# இலங்கை மீதான எதிர்கால அமெரிக்க அழுத்தங்கள் குறித்து கிளம்பும் சந்தேகங்கள்



யதீந்திரா

**தற்போதைய பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவிபிள்ளையின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை வரவேற்றிருப்பதுடன் அதற்கான பொறுப்பை மனித உரிமைகள் பேரவை மீதே திருப்பி விட்டிருக்கிறது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் மூன்றாவது பிரேரணை வெளியிடப்பட்டிருக்கின்ற நிலையில் அது தொடர்பான பல வாதப்பிரதிவாதங்கள் மேலெழுந்திருக்கின்றன. தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் அபிப்பிராய உருவாக்குனர்களும் மிகைபடக் கூறியளவிற்கு எதனையும் நிகழ்த்தக் கூடிய வல்லமையை அப்பிரேரணை வெளிப்படுத்தவில்லை என்பதே தற்போதைய தமிழர் ஆதங்கத்திற்கு காரணம். தமிழர் ஆதங்கம் என்பது சரியான ஒன்றுதானா அல்லது இது அவர்களாகவே தங்கள் மீது வலிந்து திணித்துக்கொண்ட அதீத கற்பனைகளின் விளைவா? குறிப்பாக புலம்பெயர் சூழலில் அமெரிக்காவின் பிரேரணை குறித்து பெரும் எதிர்பார்ப்பு, நிலவியிருந்தது. இதற்கு பொதுநலவாய மகாநாட்டின் போது பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் சர்வதேச விசாரணை தொடர்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் மற்றும் கனடிய பிரதமர் மகாநாட்டை பகிஷ்கரித்திருந்தமை ஆகியவற்றின் விளைவாக, அமெரிக்க பிரேரணையானது சற்று கடுமையாகலாம் என்பதே புலம்பெயர் தரப்பினரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், மீண்டும் ஒரு உள்ளக விசாரணைக்கு அழைப்புவிடும் வகையிலேயே பிரேரணை வெளிவந்திருக்கிறது. ஆனால் தற்போது வெளிவந்திருக்கும் பிரேரணை, 2012 மற்றும் 2013 இல் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளிலிருந்து மேலும் ஒரு படி முன்னோக்கியதாகவே அமைந்திருக்கிறது. இதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இது குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனும் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இணைந்து வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில், குறித்த பிரேரணையானது இலங்கையில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான திசை நோக்கிய பாதையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கட்ட நகர்வாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதே வேளை, எதிர்வரும் வாரங்களில் குறித்த பிரேரணையை முன்மொழிந்த இணைத்தரப்பினர், விசாரணைப் பொறிமுறையை வலுப்படுத்தும் வகையில் மேலும் திருத்தங்களை செய்ய முன்வரவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சருடன் இணைந்து வெளியிட்டிருப்பதற்கு ஒரு தெளிவான காரணமுண்டு. குறித்த அமெரிக்கப் பிரேரணையில் வடக்கு மாகாணசபை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாக்களிப்பில் இடையூறுகள் இன்றியும், வன்முறைகள் இன்றியும் வடக்கு மாகாணசபை தேர்தல் இடம்பெற்றமையை வரவேற்பதாக பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அத்துடன் பரிந்துரைகளில் ஒன்றாக, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக, வடக்கு மாகாணசபையை ஆட்சிசெய்வதற்கான ஒத்துழைப்புக்களை அரசாங்கம் வழங்க முன்வர வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கின்றது. அமெரிக்கப் பிரேரணையில் வடக்கு மாகாணசபை தொடர்பில், குறித்துரைக்கப்பட்டிருக்கின்ற பின்புலத்தில்தான் சம்பந்தன் மேற்படி கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

இப்பிரேரணை அமெரிக்காவின் இராஜதந்திர அணுகுமுறையின் ஒரு பகுதியாகும். படிப்படியாக இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையின் மீதான தன் அழுத்தங்களை பெருப்பித்துக் கொண்டுவரும் நோக்கிலேயே, ஒவ்வொரு பிரேரணைகளின் உள்ளடக்கமும் அமைந்திருக்கிறது. அமெரிக்கப் பிரேரணை என்பது அதன் உள்ளடக்கத்தில் பெரியளவில் மாற்றங்களை காட்டவில்லை. ஆனால் அந்த ஆரம்பநிலை உள்ளடக்கத்தை மெதுமெதுவாக பெருப்பித்துக்கொள்ளுமொரு உபாயத்தை கடைப்பிடித்து வருவதைக் காணலாம். முன்னைய இரண்டு பிரேரணைகளின் அடிப்படைகள் மாறவில்லை. ஆனால் அதன் மீதான பொறுப்புக்கள் மாறியிருக்கின்றன. இதுதான் இங்கு உற்றுநோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அந்த அடிப்படையில் நோக்கினால், தற்போது கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது, மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவிபிள்ளையின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை வரவேற்றிருப்பதுடன், அதற்கான பொறுப்பை பேரவையின் மீதே திருப்பிவிட்டிருக்கின்றது. ஆனால் சர்வதேச விசாரணை அவசியம் என்பது கட்டாயமாக வலியுறுத்தப்படவில்லை, மாறாக வரவேற்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் ஒரு மறைமுக எச்சரிக்கையும் வழங்கப்பட்டிருக்கின்றது. இலங்கை தனது போக்கில் மாற்றங்களை காண்பிக்கவில்லையாயின் அதன் விளைவாக சர்வதேச விசாரணை ஒன்றை வலியுறுத்தவும் அமெரிக்கா தயங்கப்போவதில்லை என்பதே அந்தத் தகவல். இது பற்றி கருத்துரைத்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின், இலங்கைக்கான முன்னாள் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம், குறித்த பிரேரணையானது, நவிபிள்ளைக்கு விசாரணையொன்றை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை வழங்கியிருப்பதாகவும், அதன் உண்மையான பொருள் சர்வதேச விசாரணை என்பதுதான் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், தமிழ் அரசியல் அவதானிகள் சிலரோ, சர்வதேசம் தமிழர்களை ஏமாற்றிவிட்டதாகக் குறிப்பிட்டு வருகின்றனர்.

அமெரிக்கப் பிரேரணை என்பது, அதன் இறுதி அர்த்தத்தில் வெற்றி பெற வேண்டிய ஒன்றாகும். அந்த வகையில் அமெரிக்கப் பிரேரணையில் தமிழர் என்பது எப்போதும் இரண்டாவது விடயம்தான். வெற்றி தான் முதல் விடயம். குறித்த பிரேரணை வெற்றிபெற வேண்டுமாயின், அதன் உள்ளடக்கத்துடன், ஆதரவு நாடுகள் அனைத்தும் உடன்பாடு காண வேண்டும். இன்று தங்களால் ஆதரிக்கப்படும் ஒன்று நாளை தங்களின்மீதே திரும்பிவிடக் கூடாது என்பதில் அனைத்து நாடுகளுமே கருத்தொருமித்து இருக்கும். எனவே இந்த விடயங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டுதான், அமெரிக்கப் பிரேரணையின் உள்ளடக்கத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். எனவே இங்கு எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற பாங்கில் எதனையும் எதிர்

இந்தியாவை பொறுத்தவரை இலங்கையின் மீதான ஒரு சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிப்பது அதனளவில் பின்னடைவான ஒன்றாக நோக்கப்படும். இலங்கையின் மீதான பிடி முற்றிலுமாக தளர்ந்துவிடவும் கொழும்பு முற்றிலுமாக இந்தியாவிலிருந்து விலகி விடுவதற்கான சூழலை தோற்றுவித்து விடலாம். இந்தப் பின்னணியிலேயே இந்தியா தீர்மானம் பற்றிய நிலைப்பாட்டை எடுக்கும்

பார்க்க முடியாது. ஆனால் தமிழர் தரப்பில் ஒரு முக்கியமான விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது. சர்வதேச சக்திகள் என்பன தங்களின் நலன்களைப் புறம்தள்ளி எந்தவொரு விடயத்தையும் முன்தள்ளாது என்பதை நாம் ஏற்றுக் கொண்டாலும், நமது அடிப்படையான விடயங்களை நாம் விட்டுவிடக் கூடாது. அந்த வகையில் இந்தப் பிரேரணை திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், எதிர்காலத்தில் தமிழர் அரசியலை முன்னெடுப்பதில் சிக்கல்களைப் சந்திக்க வேண்டிவரும் என்பது அவ்வாறானவர்களின் வாதமாக இருக்கின்றது. அவ்வாறானவர்கள் கூறும் விடயம் இதுதான். தற்போது அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் தமிழர் பிரச்சினை குறிப்பாக சுட்டிக்காட்டப்படவில்லை. அதாவது, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இனரீதியான பிரச்சினையொன்றிற்கு முகம்கொடுத்து வருகின்றனர் என்பது பிரேரணையில் எங்கும் அழுத்தப்படவில்லை. தற்போது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக இருக்கின்ற நவிபிள்ளை அடுத்த ஆண்டு ஓய்வுபெற்றுச் சென்றால், அதன் பின்னர் அப்பதவியை பொறுப்பெடுப்பவர் தற்போதைய பிரேரணையின் அடிப்படையில்தான் விடயங்களை முன்னெடுத்துச் செல்வார். அவ்வாறானதொரு சூழலில், தமிழ் மக்களின் இனரீதியான பிரச்சினையை, சர்வதேசம் முழுமையாகவே கைவிட்டுச் செல்லும் நிலைமை தோன்றலாம். அந்த வகையில் பார்த்தால், அது அரசாங்கத்திற்கு பாரிய வெற்றியாகவே அமையும். மகிந்த ராஜபக்ஷவும் அதனைத்தான் குறிப்பிட்டு வருகின்றார் - இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை. இது மிகவும் பாரதூரமானது. ஆனால் கூட்டமைப்பின் தலைமையோ, இன்றைய சூழலில் நாம் தேவையற்ற விவாதங்களை செய்ய முடியாது என்று குறிப்பிடுகின்றது. மேலும் சர்வதேசம் (அமெரிக்கா) எந்த வழியைக் காட்டுகிறதோ,

***(63ஆம் பக்கம் பார்க்க..)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சர்வதேச அரசியல்





ஹென்றி ஏ.கிஸிங்கர்

# உக்ரெயின் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவது எவ்வாறு?




உக்ரெயின் தப்பிப்பிழைக்க வேண்டுமானால், செழித்தோங்க வேண்டுமானால் அது மேற்கின் பக்கத்திலோ கிழக்கின் பக்கத்திலோ நிற்கக்கூடாது. இரண்டிற்கும் இடையேயான பாலமாக அது செயற்படவேண்டும்.



உக்ரெயின் பிரதமர் ஆர்செனி யட்சென்யுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உக்ரெயின் பற்றிய பொதுவிவாதம் எதிர்த்து நின்று மோதுவதைப் பற்றியதாகவே இருக்கிறது. ஆனால், நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்று எமக்குத் தெரியவில்லை. நான்கு போர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் மக்களின் ஆதரவுடனும் ஆரம்பித்ததை எனது வாழ்நாளில் நான் கண்டிருக்கிறேன். ஆனால், அந்தப் போர்களை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது பற்றி எமக்குத் தெரிந்திருக்கவில்லை. மூன்று போர்களில் இருந்து ஒருதலைப்பட்சமாக வாபஸ் பெற்றுக் கொண்டோம். போர் எப்படித் தொடங்குகிறது என்பதல்ல, அது எவ்வாறு முடிவடைகிறது என்பதே ஒரு கொள்கைக்கான பரீட்சையாகும்.

உக்ரெயின் விவகாரம், அதாவது அந்த நாடு கிழக்குடன் இணைகிறதா அல்லது மேற்குடன் இணைகிறதா என்பது அடிக்கடி ஒரு பலப்பரீட்சையாகவே அமைந்துவிடுகிறது. ஆனால், உக்ரெயின் தப்பிப்பிழைக்க வேண்டுமானால், செழித்தோங்க வேண்டுமேயானால் அது மேற்கின் பக்கத்திலோ கிழக்கின் பக்கத்திலோ நிற்கக்கூடாது. இரண்டுக்கும் இடையேயான ஒரு பாலமாக அது செயற்படவேண்டும்.

உக்ரெயினை தனது ஒரு துணைக்கோள் நாடாக பலவந்தமாக மாற்ற முயற்சித்து எல்லைகளை நகர்த்த எத்தனிப்பது ஐரோப்பாவிடமிருந்தும் அமெரிக்காவிடமிருந்தும் நெருக்குதல்களைக் கொண்டுவரும் என்பதையும் வரலாற்றுத்தவறை மீண்டும் செய்வதாக இருக்கும் என்பதையும் ரஷ்யா ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை, ரஷ்யாவுக்கு உக்ரெயின் வெறுமனே ஒரு வெளிநாடாக இருக்க முடியாது என்பதை மேற்குலகமும் விளங்கிக்கொள்ள வேண்டும். கீவன் ரூஸ் (Kievan Rus) என்று அழைக்கப்பட்ட கிழக்குப் பகுதியில் அமைந்த முதல் ஸ்லாவிக் அரசில் இருந்தே ரஷ்ய வரலாறு ஆரம்பிக்கிறது. ரஷ்ய மதமும் அங்கிருந்தே பரவியது. உக்ரெயின் பல நூற்றாண்டுகளாக ரஷ்யாவின் பகுதியாக இருந்துவந்துள்ளது. அத்துடன், அதற்கு முன்பிருந்தே அவற்றின் வரலாறுகளும் பின்னிப் பிணைந்தவையாக இருந்திருக்கின்றன. 1709ஆம் ஆண்டில் மூண்ட பொல்டாவா சண்டையில் (Battle of poltava) ஆரம்பித்த ரஷ்யாவின் விடுதலைக்கான போர்களில் மிகவும் முக்கியமான போர்கள் சில உக்ரெயின் மண்ணிலேயே நடந்தன. மத்தியதரைக் கடலில் ரஷ்யாவின் அதிகாரத்தை முனைப்புறுத்தும் கருவியாக விளங்கும் கருங்கடல் கடற்படைப் பிரிவு கிறிமியாவின் செவாஸ் ரோபோல் துறைமுகத்தை நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது. அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் மற்றும் ஜோசப் புரோஸ்கி போன்ற பேர்பெற்ற ரஷ்ய அதிருப்தியாளர்கள் கூட, உக்ரெயினை ரஷ்ய சரித்திரத்தினதும் உண்மையில் ரஷ்யாவினதும் இன்றியமையாத பகுதி என்றே வலியுறுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பாவுடனான உக்ரெயினின் உறவுமுறை பற்றிய பேச்சுவார்த்தைகளில் கேந்திர முக்கியத்துவ அம்சத்தையும் விட உள்நாட்டு அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற போக்கும் காரியங்களைத் தாமதப்படுத்தும் உயர்மட்ட அதிகாரிகளின் போக்கும் ஒரு பேச்சுவார்த்தையை ஒரு நெருக்கடியாக மாற்றுவதற்கு பங்களிப்புச் செய்திருக்கின்றன என்பதை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெளியுறவுக் கொள்கையென்பது முன்னுரிமைகளை உறுதிப்படுத்துவதேயாகும்.

உக்ரேனியர்கள் ஒரு தீர்க்கமான பிரிவினர். அவர்கள் சிக்கலான வரலாற்றையும் பலமொழி பேசும் மக்கள் பிரிவினரையும் கொண்டதொரு நாட்டில் வாழுகிறார்கள். உக்ரெயினின் மேற்குப் பகுதி ஸ்ராலினும் ஹிட்லரும் ஆதாயங்களைத் தங்களுக்குள் பிரித்துக்கொண்டபோது 1939 ஆம் ஆண்

உக்ரெயின் அரசியல்வாதிகள் தங்களது விருப்புக்களை தங்களுடன் இணங்க மறுக்கின்ற நாட்டின் மற்றைய பகுதியினர் மீது திணிப்பதற்கு மாறி மாறி மேற்கொண்டிருக்கக்கூடிய முயற்சிகளே பிரச்சினையின் மூலவேராக இருக்கிறது என்பதை சுதந்திரத்திற்குப் பின்னரான உக்ரெயினின் அரசியல் தெளிவாக வெளிக்காட்டுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் சோவியத் யூனியனுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. சனத்தொகையில் 60 சதவீதத்தினர் ரஷ்யமொழி பேசுபவர்களாக இருக்கும் கிறிமியா, 1954 ஆம் ஆண்டில்தான் உக்ரெயினின் பகுதியாக வந்தது. பிறப்பால் உக்ரேனியரான சோவியத் தலைவர் நிகிடா குருஷேவ் கொசாக்குகளுடனான ரஷ்ய உடன்படிக்கையின் 300 ஆவது வருடாந்த நிறைவை முன்னிட்டு ஒரு பரிசாக கிறிமியாவை உக்ரெயினுக்குரியதாக்கினார். கொசாக்குகள் (Cossacks) எனப்படுவோர் கருங்கடல் மற்றும் காஸ்பியன் கடலின் வடக்கு உள்நாட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள். இவர்கள் ரஷ்ய அரசாங்கத்துக்கு இராணுவச் சேவை செய்தார்கள். மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் பெருமளவுக்கு கத்தோலிக்கர்கள். கிழக்குப் பகுதியில் வாழ்பவர்கள் பெருமளவுக்கு ரஷ்யமரபுக் கோட்பாட்டு மதப்பிரிவைச் (Russian Orthodox) சேர்ந்தவர்கள். மேற்குப் பகுதியினர் உக்ரேனியன் மொழி பேசுகிறார்கள். கிழக்கில் உள்ளவர்கள் பெரும்பாலும் ரஷ்ய மொழி பேசுகிறார்கள். உக்ரெயினின் இந்த இரு பிரிவினரையும் பொறுத்தவரை ஒரு பிரிவினர் மற்றைய பிரிவினர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய எந்த முயற்சியுமே (இதுவே வழமையானதாக இருந்து வந்திருக்கிறது) இறுதியில் உள்நாட்டுப் போருக்கு அல்லது பிரிவினைக்கு வழிவகுக்கும். கிழக்கு-மேற்கு முரண்நிலையின் ஒரு அங்கமாக உக்ரெயினைக் கருதுவது ரஷ்யாவையும் மேற்குலகையும் (குறிப்பாக ரஷ்யாவையும் ஐரோப்பாவையும்) சர்வதேச ஒத்துழைப்பு முறைமையொன்றுக்குள் (Cooperative international System) கொண்டுவருவதற்கான எந்த வாய்ப்பையும் பல தசாப்தங்களுக்கு பாழாக்கும்.

23 வருடங்கள் மாத்திரமே உக்ரெயின் சுதந்திர நாடாக இருந்து வந்திருக்கிறது. அதற்கு முன்னர் 14 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏதாவது ஒரு வகையான அந்நிய ஆட்சியின் கீழேயே அது இருந்திருக்கிறது. அதன் தலைவர்கள் விட்டுக்கொடுத்துச் செயற்படுகின்ற கலையைக் கற்றுக்கொள்ளவில்லையென்பது ஆச்சரியத்தைத் தரவில்லை. சரித்திரத்தின் பின்புலத்தில் நிலைவரங்களை நோக்குபவர்களாகவும் அவர்கள் இல்லை. உக்ரெயினின் அரசியல்வாதிகள் தங்களது விருப்புகளை தங்களுடன் இணங்க மறுக்கின்ற நாட்டின் மற்றைய பகுதியினர் மீது திணிப்பதற்கு

# மேற்குலகம் கடந்தகாலத் தவறுகளை உணராத பட்சத்தில் தீர்வு இல்லை

கெடுபிடி யுத்தம் முடிந்துவிட்டது என நினைத்து சிறப்பானதொரு உலகத்தைக்காணலாம் என்று எதிர்பார்த்தவர்களின் நம்பிக்கை பொய்த்து விட்டது. அமெரிக்காவின் தவறான கொள்கைகளும் உக்ரெயினில் கட்டவிழ்கின்ற நாடகமும் கேந்திர முக்கியத்துவத் தோழமையை நோக்கி ரஷ்யாவையும் சீனாவையும் உந்தக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன


மல்கம் ஃபிரேசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிமாறி மேற்கொண்டிருக்கக்கூடிய முயற்சிகளே பிரச்சினையின் மூலவேராக இருக்கிறது என்பதை சுதந்திரத்திற்குப் பின்னரான உக்ரெயினின் அரசியல் தெளிவாக வெளிக்காட்டுகிறது. இதுவே விக்டர் யானுகோவிச்சுக்கும் அவரது பிரதான அரசியல் போட்டியாளரான யூலியா ரிமோஷென்கோவுக்கும் இடையேயான மோதலின் சாராம்சமாகும். அவர்கள் இருவரும் உக்ரெயினின் இரு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் தயாரில்லாமல் இருந்து வந்திருக்கிறார்கள். உக்ரெயினின் இருபகுதிகளும் பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய வழிவகைகளைக் காண்பதே அந்த நாடு தொடர்பிலான விவேகமான அமெரிக்கக் கொள்கையாக இருக்கும். நாம் நல்லிணக்கத்தில் நாட்டம் காட்ட வேண்டுமே தவிர, ஒரு பிரிவின் மேலாதிக்கத்தில் அக்கறை காட்டக்கூடாது.



ரஷ்யாவும் மேற்குலகும் எல்லாவற்றுக்கும் மேலாக உக்ரெயினின் சகல பிரிவுகளும் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்பட

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு கெடுபிடி யுத்தக் கோட்பாட்டை (Cold war ideology) மறந்துவிட முடியுமென்றும் கூடுதலான அளவுக்கு ஒத்துழைப்புக்கொண்டதும் முன்னரை விடவும் சிறப்பானதுமான ஒரு உலகைக் கட்டியெழுப்புவதற்காக வல்லரசுகள் பாடுபடக்கூடியதாக இருக்கும் என்றும் பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால், வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ) அமைப்பு அதன் வேலையைச் செய்திருக்கிறது.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளுக்கான எதிர்காலப் பாதுகாப்பை வழங்கியிருக்கக்கூடிய பல வழிகள் இருந்தன. கிழக்கு நோக்கி ரஷ்யாவின் எல்லைகளுக்கு நகருவதன் மூலமாக அந்தப் பாதுகாப்பை வழங்க முடியுமென்று நேட்டோ நினைத்தது. ரஷ்யாவின் பாரம்பரிய செல்வாக்கு பிராந்தியமான கிழக்கில் நேட்டோ ஒரு அடி கூட நகரக்கூடாது என்று அப்போதைய ஜனாதிபதி கொர்பச்சேவ் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது வலியுறுத்தினார். ரஷ்யாவின் எல்லைகளுக்கே நேட்டோ கூட்டமைப்பை விரிவுபடுத்துவது குறித்து ஜனாதிபதி பில் கிளின்டன் அக்கறை காட்டினார். உக்ரெயினையும் ஜோர்ஜியாவையும் உட்படுத்துவது குறித்தும் பேசப்பட்டது.

கொர்பச்சேவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதற்கு மத்தியிலும்கூட, கிழக்கு நோக்கிய நகர்வில் அக்கறை காட்டப்பட்டது ஆத்திரமூட்டும், விவேகமற்ற ஒரு செயலாக அமைந்தது. ரஷ்யாவுக்கு அது ஒரு தெளிவான சமிக்ஞையைக் கொடுத்தது. 'ஐரோப்பிய விவகாரங்களையோ அல்லது உலக விவகாரங்களையோ கையாளுவதில் உங்களை ஒரு கூட்டுறவுப் பங்காளியாக்குவதற்கு நாம் விரும்பவில்லை. எங்களிடம் இருக்கக்கூடிய வல்லமையை நாம் பிரயோகிப்போம். நீங்கள் அதைப் பொறுத்துக் கொண்டு இருக்க வேண்டியது தான்'. இதுவே அந்தச் சமிக்ஞையாகும். சில வருடங்கள் கழித்து போலந்திலும் செக் குடியரசிலும் ஏவுகணை எதிர்ப்புப்; பொறிமுறையை நிலை வைப்பதற்கு ஜனாதிபதி புஷ் நாட்டம் காட்டிய போது இந்தச் செய்தி மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ஈரானை இலக்கு வைத்தே ஏவுகணை எதிர்ப்புப் பொறிமுறை நிலை வைக்கப்படுவதாக அமெரிக்கா கூறியது. அதை ரஷ்யா நம்பியிருக்காது. கெடுபிடியுத்தம் இன்னமும் நிலைத்திருப்பது போன்றே மேற்குலகம் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் ஜோர்ஜியாவில் என்ன நடந்தது? இப்போது கிறிமியாவில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? மேற்குலகத்தினால் முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் காரணமாகவே இவை நடந்தேறின. உக்ரெயினை நேட்டோவுக்குள் இழுப்பதற்கு பல வருடங்களாக மேற்குலகம் குறிவைத்துக் கொண்டேயிருந்தது. உக்ரெயினில் இருக்கக்கூடிய ஐரோப்பிய - ஆதரவு அரசாங்கமொன்றுக்கு ஆதரவளிப்பதற்கும் ரஷ்ய- ஆதரவு அரசாங்கமொன்றை எதிர்ப்பதற்கு அல்லது கவிழ்ப்பதற்கு தன்னாலியன்ற சகலதையும் மேற்குலகம் செய்துகொண்டிருக்கிறது.

இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்டவரும் கார்டியன் பத்திரிகையின் இணை ஆசிரியருமான சியூமஸ் மில்னே உக்ரெயினில் அதிகாரத்தில் இருந்த அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டங்களை நடத்தியவர்களைப் பற்றி ஒரு வர்ணனையைச் செய்திருந்தார். அவர் சொன்னவற்றில் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஒவ்வொரு தரப்பினருமே நிலைவரத்தை மோசமடையச் செய் திருக்கிறார்கள். ரஷ்யாவின் பல எல் லைகள் ஏற்கனவே சஞ்சலமானவை யாக இருக்கின்றன. அத்தகையதொரு தருணத்திலே ரஷ்யா தன்னை உலகி டமிருந்து தனிமைப்படுத்திக்கொள் ளாமல் இராணுவத் தீர்வொன்றைத் திணிக்கக்கூடியதாக இருக்குமென்று நான் நம்பவில்லை. மேற்குலகைப் பொறுத்தவரை, விளாடிமிர் புட்டினை கொடியவனாகக்காட்டுவது ஒரு கொள்கையாகாது. ஒரு உருப்படி யான கொள்கையில்லாததனால் இது ஒரு மாற்றீடாக இருக்கிறது போலும்.

புட்டினின் மனக்குறைபாடுகள் எவையாக இருந்தாலும் இராணுவத் திணிப்பு இன்னொரு கெடுபிடி யுத் தத்தைத் தோற்றுவிக்கும் என்பதை அவர் விளங்கிக்கொள்ள வேண்டும். அமெரிக்காவும் ரஷ்யாவை வாஷிங் டனால் வகுக்கப்பட்ட நடத்தை விதி கள் போதிக்கப்படவேண்டிய ஒரு நெறி பிறழ்ந்த நாடாக நடத்துவதைத் தவிர்க்க வேண்டும். ரஷ்யாவின் சூழ லில் நோக்குகையில் புட்டின் ஒரு சீரிய போர்த்திற வல்லுநர். அமெ ரிக்க விழுமியங்களையும் உளவி யலையும் விளங்கிக் கொள்வதென் பது அவரின் உறுதியான ஆர்வத் துக்குரியதல்ல. அதேபோன்றே, ரஷ்ய வரலாற்றையும் உளவியலை யும் விளங்கிக் கொள்வதென்பது அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்க ளின் உறுதியான அக்கறைக்குரிய விவகாரமாக இருந்ததில்லை என்று தான் கூறவேண்டும்.

போட்டி போட்டுக்கொண்டு பாவனை காட்டுவதைவிடுத்து, சகல தரப்புகளின் தலைவர்களும் விளை வுகளைப் பரிசீலனை செய்ய முற்பட வேண்டும். சகல தரப்புகளினதும் விழுமியங்களுக்கும் நலன்களுக்கும் பொருத்தப்பாடுடையதான ஒரு விளைவு பற்றிய எனது கருத்தை கீழே தருகிறேன்.

1. பொருளாதார ரீதியான கூட்ட ணியோ, அரசியல் ரீதியான கூட்ட ணியோ அதை யாருடன் வைத்துக் கொள்வது (ஐரோப்பா உட்பட) என்பதைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கான உரிமை உக்ரெயி னுக்கு இருக்க வேண்டும்.

2. உக்ரெயின் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ) அமைப்பில் இணையக் கூடாது. இந் தப் பிரச்சினை இறுதியாகக் கிளம்பி யபோது ஏழுவருடங்களுக்கு முன் னர் இந்த நிலைப்பாட்டையே நான் எடுத்திருந்தேன்.

3. உக்ரெயின் அதன் மக்களினால் வெளிப்படுத்தப்படுகின்ற விருப்புக ளுக்கு பொருத்தப்பாடுடையதான எந்த அரசாங்கத்தையும் அமைப்ப தற்கு சுதந்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதன் பிறகு விவேக முள்ள உக்ரெயின் தலைவர்கள் தங் கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவல்ல கொள்கையொன் றையே கடைப்பிடிப்பார்கள். சர்வ தேச ரீதியாக அவர்கள் பின்லாந்து கடைப்பிடித்து வருவதையொத்த போக்கையே கடைப்பிடிக்க வேண் டும். பின்லாந்து அதன் உறுதியான சுதந்திரத்தைப் பற்றி எந்தவிதமான சந்தேகத்தையும் விட்டு வைக்கவில் லை. அதேவேளை பலதுறைகளில் மேற்குலக நாடுகளுடன் ஒத்துழைத் துச் செயற்படுகிறது. ஆனால், ரஷ்யா வுடன் பகைமையையும் தவிர்த்துக்

பகுதியாகிலும் சரியானதாக இருந்திருக்குமானால், மேற் குலகம் மீண்டும் விரும்பத்தகாத பங்காளிகளையே தெரிவு செய்திருக்கிறது என்றே நினைக்க வேண்டியிருக்கி றது. அது எதிர்காலத்துக்கு நல்ல சமிக்ஞையைக் காட்டப் போவதில்லை. அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியவர் களை மில்னே பாசிச சார்பு, நாஜிசார்பு, யூத எதிர்ப்பு சக்திகள் என்று வர்ணித்திருந்தார்.

மேற்குலகம் மீண்டும் தயாராயிருக்கவில்லை. உக்ரெயி னில் கணிசமான ரஷ்ய சிறுபான்மையினர் இருக்கிறார்கள். அந்தச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு நடவடிக் கைகளை எடுக்க வேண்டிய கடப்பாடு ரஷ்யாவுக்கு இருக் கிறது. அத்துடன், உச்ரெயினை நேட்டோவுக்குள் இழுப்ப தற்கு மேற்குலகம் குறிவைக்கின்றது என்று புட்டின் நினைத்திருப்பாரேயானால், அவர் நிச்சயமாக நடவடிக் கைகளை எடுத்திருப்பார். ஏனென்றால், கிறிமியாவில் கருங்கடல் துறைமுகங்களுக்கான ' நுழைவுரிமையை அவர் உத்தரவாதப்படுத்த வேண்டியிருக்கிறது.

கிறிமியாவில் உள்ள சொத்துகளைப் பாதுகாப்பது எப் போதுமே ரஷ்யாவின் இலக்காக இருக்கும். மேற்குலக நாடுகளின் தலைவர்களும் மேற்குலக ஊடகங்களும் முழுத் தகராறையுமே ஒரு பக்கச்சார்பானதாகவே பெரும் பாலும் காட்டுகின்றன; அதாவது சகலதுமே ரஷ்யாவின் தவறு என்றும் உண்மையான ஜனநாயகம் தோன்றுவதை புட்டின் தடுக்கிறார் என்றும் கூறுகின்றனர். சோவியத் யூனியனின் வீழ்ச்சியையடுத்து ஆரம்ப நாட்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (நேட்டோ கிழக்கே நகராது என்று கொர்பச்சேவ் நம்பிக்கை வைத்த) உறுதி யான உடன்படிக்கையை மீறுவதாகவே அமைந்திருந்தன. அந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கக் கூடியவையாக அமைந்துவிட்டன.

எளிதில் கையாள முடியாத தற்போதைய மிகவும் சிக்க லானதும் பேராபத்துக்கொண்டதுமான பிரச்சினையுடன் மல்லுக்கட்டி வெற்றிகொள்ள முயற்சிக்கின்றவர்கள் வர லாற்றையும் மேற்குலகின் கடந்தகால தவறுகளையும் விளங்கிக்கொள்ளாத பட்சத்தில் இதிலிருந்து விடுபட வழி யேயில்லை.

இந்தப் பிரச்சினையில் இன்னொரு அம்சமும் இருக்கி றது. மேற்குலகம் எதிர்காலத்தில் கூடுதல் அக்கறையுடன் நோக்க வேண்டியது இது. முட்டாள்த்தனமானதும் ஆபத் தானதுமான ஒரு கொள்கையென்று பலரும் கருதுகிற கொள்கையை மேற்கு பசுபிக்கில் கடைப்பிடிக்க அமெ ரிக்கா ஆரம்பித்திருக்கிறது. அதாவது நிலைமை தெளிவு பெறும்வரை சீனாவைத் தாக்குக் காட்டி வைத்திருக்கும் சூழ்ச்சிநயத்துடனான கொள்கை. (Policy of contain- ment) எழுச்சி கண்டு வருகின்ற சீனாவைப் பொறுத்த வரை இத்தகைய கொள்கையைக் கடைப்பிடிப்பது தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறது.

4. ரஷ்யாவைப் பொறுத்தவரை கிறிமியாவை தன்னுடன் இணைத்துக் கொள்வதென்பது சமகால உலக ஒழுங்கின் விதிமுறைகளுக்குப் பொருத்தப்பாடானதாக இருக்காது. ஆனால், உக்ரெயினுடனான கிறிமியாவின் உறவுமுறையை இடர்பாடுகளுக்கு இடந்தராதமுறையில் அமைத்துக்கொள்வதும் கூட சாத்தியமாயிருக்க வேண்டும். இதற்காக கிறிமியா மீது உக்ரெயினுக்குள்ள சுயாதிபத்தியத்தை ரஷ்யா அங்கீகரிக்கவேண்டும். சர்வதேச அவதானிகளின் பிரசன்னத்துடன் நடத்தப்படக்கூடிய தேர்தலின் மூலமாக கிறிமியாவின் சுயாட்சியை உக்ரெயின் வலுவூட்ட வேண்டும். செவாஸ் டோபோலில் உள்ள கருங்கடல் கடற்படையின் அந்தஸ்து பற்றி எந்தவிதமான சந்தேகத்துக்கும் புரியாத் தன்மைக்கும் இடம்வைக்காத வகையில் இந்தச் செயன்முறை அமைய வேண்டும்.

நான் கூறிய இவையெல்லாம் கோட்பாடுகள். ஆணைகள் இல்லை. இவையெல்லாம் சகல தரப்புகளுக்கும் மனதுக்குப் பிடித்தமானதாக இருக்கப்போவதில்லை என்பதை இந்தப் பிராந்தியத்துடன் பரிச்சயம் உள்ளவர்கள் நன்கறிவார்கள். இந்தச் சோதனை முற்றுமுழுதான திருப்தியல்ல, சமநிலையான அதிருப்தியே. இந்த அடிப்படைகளில் அல்லது இதையொத்த அடிப்படைகளில் சிலவகைத் தீர்வுகள் காணப்படாவிட்டால் மோதலை நோக்கிய போக்கு விரைவுபடுத்தப்படும் என்பதிற் சந்தேகமில்லை. அதற்கான நேரம் போதுமானளவு விரைவாக வந்துவிடவும் கூடும். ■

*ஹென்றி கீஸிங்கர் முன்னாள் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் (1973-1977)*




கிறிமிய தலைநகரில் ரஷ்ய ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள்


றான அணுகுமுறை என்பதை முன்னாள் பென்டகன் அதிகாரியான ஜோசப் நையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். சீனாவுடன் அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை ஒத்துழைப்புத் தன்மையானதாகவே இருக்க வேண் டும் என்பதே அவரின் அபிப்பிராயமாக இருக்கிறது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கேந்திர முக்கியத்துவ ஏற்பாடுகளைச் செய்துகொள்வதற்கான சாத்தியங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. அமெரிக்காவின் தவறான கொள்கைகளும் உக்ரெயினில் கட்டவிழ்கின்ற நாடகமும் கேந்திர முக்கியத்துவ தோழமையொன்றை நோக்கி ரஷ்யாவையும் சீனாவையும் உந்துகின்றனவா?

கெடுபிடி யுத்தம் முடிந்துவிட்டது என நினைத்து சிறப்பானதொரு உலகத்தைக் காணலாம் என்று எதிர்பார்த்தவர்களின் நம்பிக்கை பொய்த்துவிட்டது. தற்போதைய கொள்கைக்கு பொறுப்பாக இருப்பவர்கள் தங்களின் கண் முன்னால் கட்டவிழ்கின்ற நிகழ்வுகளைப் பற்றி போதுமான விளக்கப்பாட்டைக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. ஒத்துழைத்துப் பணியாற்றி கூடுதலான அளவுக்கு பாதுகாப்பான உலகம் ஒன்றுக்கு வழிகாட்டக் கூடிய ஆற்றல் கொண்டவர்களாகவும் அவர்கள் இல்லை. ■

*(மல்கம் ஃபிரேசர் 1975-1983 காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பிரதமர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தடவை ஜெனீவாவில் இந்தியா எவ்வாறு நடந்துகொள்ளும்?






**ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தாலும் கூட அரசியல் ரீதியில் காங்கிரஸ் பெரிதாக எதையும் இழக்கப்போவதில்லை. ஏனென்றால் காங்கிரஸுடன் கூட்டணி கிடையாது என்று தி.மு.க. திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. பிரதமரும் காங்கிரஸும் தாங்கள் சரியானதென்று நினைக்கின்ற முடிவை எடுக்கக்கூடும்**

இத்தடவை ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கப்போகின்றது? கடந்த இருவருடங்களிலும் நடந்துகொண்டதைப் போன்று இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளின் அனுசரணையுடன் கொண்டுவரப்படுகின்ற தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா? அல்லது மென்மையாகப் பேசும் சுபாவமுடைய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பிரதமர் பதவிக்குப் பிரியாவிடை கொடுக்கப் போகின்ற நிலையில் இவ்வருடம் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் வருமா? தனது வெளியுறவுக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவதன் மூலமாக தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் ஆத்திரத்தைச் சம்பாதிப்பதைப் பற்றி பொருட்படுத்தாமல் இருக்கப்போகிறாரா?



எம்.பி.வித்தியாதரன்

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத் தேடுவதற்கு முன்னதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் மன்மோகன்சிங்கிற்கும் இடையே நிலவுகின்ற உறவு எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மன்மோகன் சிங்கிற்கும் ராஜபக்ஷவுக்கும் இடையே மிகவும் நல்ல உறவு இருக்கிறது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. அவர்கள் இருவரும் பரஸ்பரம் நல்ல மதிப்பு வைத்திருக்கிறார்கள். இருவருக்குமிடையே நல்ல நம்பிக்கையும் நிலவுகிறது. ஒருவரை மற்றவர் நன்கு புரிந்துகொண்டிருப்பது மாத்திரமல்ல, தங்கள் நாடுகளைப் பற்றி, பிராந்தியத்தைப் பற்றி, உள்நாட்டு அரசியலைப் பற்றி நல்ல விளக்கப்பாட்டைக் கொண்டவர்களாகவும் விளங்குகிறார்கள். உள்நாட்டு அரசியல் இருவரையும் அவர்கள் விரும்புகிற மாதிரி செயற்பட பலதடவைகள் அனுமதிக்க இல்லை.

ஏப்ரில்- மேயில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு மன்மோகன்சிங் பதவியிலிருந்து விலகப்போகிறார் என்பது நிச்சயமானது. காங்கிரஸ் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வருவதென்றால், தற்போதைய சூழ்நிலையில் அது அதிசயமாகவே இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அப்படி ஒரு அதிசயம் நிகழ்ந்தால் கூட, பிரதமர் பதவிக்குத் தான் போட்டியிடப்போவதில்லை என்பதை அவர் ஏற்கனவே தெளிவு படுத்திவிட்டார். புதிய இந்தியத்தலைவர் ஒருவருடனேயே இலங்கை இனிமேல் பேசவேண்டியிருக்கும் என்பதே இதன் அர்த்தம். அந்தப் புதிய தலைவர் மன்மோகன் சிங்கைப் போன்று மென்மையானவராகவும் விளக்கப்பாட்டைக் கொண்டவராகவும் இருப்பது சாத்தியமில்லை. அடுத்த பிரதமர் யாராக இருந்தாலும் அவர் கடுமையான போக்குடையவராக இருக்கக்கூடும்.

ஒரு தசாப்தத்துக்கும் கூடுதலான காலமாக பிரதமராகவும் ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசாங்கங்கள் இரண்டின் தலைவராகவும் இருந்த மன்மோகன்சிங் சகல அயல் நாடுகளுடனுமான உறவுகளை குறிப்பாக, இலங்கையுடனான உறவுகளை உருவகப்படுத்தி மேம்படுத்துவதில் பெரியதொரு பங்கையாற்றியிருக்கிறார். இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் அவர் விசேட அக்கறை காட்டி வந்திருக்கிறார். பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மதிப்பு மீது கவனம் செலுத்துவதாக அமைந்திருக்கிறது அக்கொள்கை. இலங்கை அதன் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த ஒரு கட்டத்தில், அதாவது விடுதலைப் புலிகளுடனான போரின் இறுதிக் கட்டத்தில் அந்த நாட்டுக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்த பெருமை மன்மோகன் சிங்கிற்கும் அப்போதைய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்குமே உரியது. தமிழக காங்கிரஸிடமிருந்து, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அப்போது அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியிடமிருந்து பெருமளவு நெருக்குதல்கள் வந்த போதிலும் கூட, ராஜபக்ஷவுக்கு நேசக்கரம் உறுதியானமுறையில் நீட்டப்படுவதை மன்மோகன் சிங் உறுதிசெய்தார். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் சகலவிதமான நெருக்குதல் தந்திரோபாயங்களுக்கும் எதிராக நின்று பிரதமர் இதைச் செய்தார். மிகவும் முக்கியமான தருணத்தில் இத்தகைய உதவியைச் செய்தமைக்காகத்தான் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மன்மோகன் சிங்கிற்கு இன்னமும் நன்றியுடையவராக இருக்கிறார் போலும்.

போரின் முடிவுக்குப் பிறகு தமிழர்கள் தங்களுக்குரிய மரியாதையை, அபிவிருத்தியை, அதிகாரப் பரவலாக்கத்தைப் பெறுவதை ராஜபக்ஷ உறுதி செய்வார் என்று மன்மோகன் சிங் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தார். ஆனால், அவர் நினைத்த மாதிரி அது நடைபெறவில்லை. இலங்கை ஜனாதிபதியைக் கண்டிக்குமாறும் மனித உரிமை மீறல்களைக் கண்டிப்பதற்கு மேற்குநாடுகள் ஜெனீவாவில் கொண்டுவரும் தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் மத்திய அரசாங்கத்தின் மீது தமிழ்நாடு அரசியல்வாதிகள் நெருக்குதலைக் கொடுப்பதற்கு இது போதுமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தது. மன்மோகன் சிங்கின் அரசாங்கம் தி.மு.க.மீது தங்கியிருந்ததால் உள்நாட்டு அரசியல் நெருக்குதல்களுக்கு அவர் அடிபணிய வேண்டியதாயிற்று. கடந்த இருவருடங்களாக ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை இந்தியா ஆதரித்தது. பொதுநலவாய மகாநாட்டை நடத்துவதற்கான வாய்ப்பை இலங்கைக்குப் பெற்றுக்கொடுப்பதில் இந்தியா பெரிய பங்கையாற்றிய போதிலும், அந்த மகாநாட்டில் பங்கேற்பதற்கு இலங்கைக்கு மன்மோகன் சிங் போக முடியாமற் போய்விட்டது. அந்தளவுக்கு நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. எவ்வாறெனினும், தனது வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தை பிரதமர் கொழும்பு மகாநாட்டுக்கு அனுப்பி வைத்தார். இந்தியாவின் இலங்கைக் கொள்கையினால் அதிருப்தியடைந்த தி.மு.க. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்டது.

**ராஜபக்ஷவுடனான மன்மோகன் சிங்கின் சந்திப்பை இலங்கையிலுள்ள தமிழர்களின் நலன்களுடன் இணைத்து முற்றுமுழுதாக நியாயப்படுத்தி சல்மான் குர்ஷித் தெரிவித்த கருத்துகள் தி.மு.க.வுக்கும் அண்ணா தி.மு.க.வுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதல்களாக அமைந்தன**



இப்போது, காங்கிரஸ் அதன் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான தேர்தலொன்றுக்கு முகங்கொடுக்கப் போகும் நிலையில், ஒவ்வொரு லோக்சபா ஆசனமும் காங்கிரஸ் கட்சிக்கு மிக மிக முக்கியமானதாகத் தோன்றும் சூழ்நிலையில், மன்மோகன்சிங் அரசியல் ஆபத்தைத் தோற்றுவிக்கக்கூடிய தீர்மானமொன்றை எடுப்பதற்குத் துணிச்சல் கொள்வாரா என்ற கேள்வி எழுகிறது. உண்மையில், தனிப்பட்ட முறையில் மன்மோகன்சிங் பெரிதாக இழப்பதற்கு எதுவுமில்லை. ஏனென்றால், மீண்டும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடும் உத்தேசம் எதுவும் இல்லை என்று அவர் ஏற்கனவே பிரகடனம் செய்துவிட்டார். ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தாலும் கூட, அரசியல் ரீதியிலும் காங்கிரஸ் பெரிதாக எதையும் இழக்கப்போவதில்லை. ஏனென்றால், காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளப் போவதில்லை என்று தி.மு.க. அறிவித்துவிட்டது. பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோடியை அவரின் கடின உழைப்புக்காக கருணாநிதி பாராட்டுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணா தி.மு.க.வும் கூட தனித்தே தமிழகத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருக்கிறது. இத்தகைய பின்புலத்தில், பிரதமரும் காங்கிரஸ் கட்சியும் தாங்கள் சரியானதென்று நினைக்கின்ற முடிவை எடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆனால், அதை அவர் செய்வாரா? குறிப்பாக ராஜபக்ஷவுக்கான தனது பிரியாவிடைப்பரிசாக...! மேற்குலகினால் தயாரிக்கப்பட்ட நகல் தீர்மானத்தை பரிசீலனை செய்த பிறகு உகந்த நேரத்தில் உகந்த தீர்மானத்தை இந்தியா எடுக்கும் என்று டில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். 'எமது நலன்களுக்கு உகந்ததான தீர்மானத்தையே நாம் எடுப்போம்' என்று ஒரு அதிகாரி சொன்னார். ஜெனீவாவில் மேற்குலகுடன் சேர்ந்து வாக்களித்த கடந்த இருவருடங்களிலும் கூட இதுவே இந்த அதிகாரிகளின் கையிருப்பில் இருந்த பதிலாகும் என்பது கவனிக்கத்தக்கது.

ஆனால், மியன்மாரில் நடைபெற்ற 'பிம்ஸ்ரெக்' உச்சி மகாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்ற மன்மோகன்சிங் அங்கு ராஜபக்ஷவுடன் நடத்திய தனியான சந்திப்பு இவ்வருடம் ஜெனீவாவில் இந்தியா வித்தியாசமான நிலைப்பாட்டை எடுக்குமா என்ற கேள்வியைக் கிளப்புகிறது. ஜெனீவா விவகாரம் குறித்து இருவரும் பேசினார்கள் என்ற போதிலும், ராஜபக்ஷவுக்கு மன்மோகன்சிங் எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. ஆனால், இலங்கையுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதற்கான விருப்பத்தை அவர் வெளியிட்டார். மார்ச் 4 ஆம் திகதி ஜெனீவா ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல் தீர்மானம் குறித்து தங்களுக்கிடையிலான 25 நிமிட பேச்சுவார்த்தையின் போது அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

நகல் தீர்மானம் குறித்து தீர்க்கமான பேச்சுவார்த்தை எதுவும் இடம்பெறவில்லை. தீர்மானம் இலங்கையிலும் இந்தியாவிலும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது என்பதால் இரு நாடுகளும் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பது அவசியம் என்று உணரப்பட்டது என்று இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் சயீத் அக்பருதீன் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் குறிப்பாக தி.மு.க. மன்மோகன் சிங் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியதைக் கூட கடுமையாகக் கண்டனம் செய்திருக்கின்றன. இச்சந்திப்பு தமிழர்களின் நலன்களுக்குச் செய்யப்பட்ட துரோகமாகும் என்று அக்கட்சிகள் வர்ணித்திருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கக்கோரும் தீர்மானத்தை ஜெனீவாவில் இந்தியாவே கொண்டுவரவேண்டுமென்றும் அக் கட்சிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

ஆனால், இத்தடவை ஜெனீவாவில் இந்தியாவின் நிலைப்பாடு வித்தியாசமானதாக இருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. 'இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பில் கூடுதல் முன்னேற்றம் ஏற்படுவதைக் காணவே நாம் விரும்புகிறோம். உள்நாட்டு விவகாரங்களில் அவர்கள் முன்னோக்கி நகர வேண்டியிருக்கிறது' என்று ஒரு உயர்மட்ட இந்திய அதிகாரி கூறினார். இவரின் கூற்று இந்தியா எந்த விதமாக வாக்களிக்கக் கூடும் என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கும் வகையில் அமைந்திருக்கிறது போலத் தோன்றுகிறது.

அதேவேளை, மீனவர் பிரச்சினை மீண்டும் முன்னரங்கத்துக்கு வந்திருக்கிறது. இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி 32 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. இது தொடர்பாக மியன்மார் சந்திப்பில் ராஜபக்ஷவிடம் பேசிய மன்மோகன்சிங் மனிதாபிமானத்துடன் இந்த விவகாரத்தை அணுகுமாறு கேட்டுக்கொண்டதாக அக்பருதீன் குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கையுடனான இந்தியாவின் ஊடாட்டத்தை வடமாகாணத்தில் தமிழர்களுக்காக இந்தியா மேற்கொள்கின்ற மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளுடன் இணைத்துப் பேசினார். மன்மோகன் சிங்கிற்கும் ராஜபக்ஷவிற்கும் இடையே நடந்த சந்திப்பு தொடர்பாக திராவிட இயக்கக் கட்சிகளினால் வெளிப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை மறுதலிப்பதாக குர்ஷித்தின் கருத்து அமைந்தது.

'இலங்கையின் வடமாகாணத்தில் இந்தியா வீடுகளை, பாடசாலைகளை, ஆஸ்பத்திரிகளை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது. அபிவிருத்திப் பணிகளைத் தமிழர்கள் விரும்புகிறார்கள். தமிழர்களின் நல்வாழ்வுக்கான பணிகளிலேயே நாம் ஈடுபட்டிருக்கின்றோம். எமது நலன்புரித் திட்டங்கள் குறித்து தமிழர்கள் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களிடமே கேட்டுப் பாருங்கள். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஆகியவை தொடர்பில் இந்தியா இலங்கையைத் தொடச்சியாகத் தூண்டிக்கொண்டேயிருக்கிறது. இந்தியாவின் வற்புறுத்தல் காரணமாகவே இந்த இரு விவகாரங்களிலும் இலங்கை தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று வெளியுறவு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ராஜபக்ஷவுடனான மன்மோகன் சிங்கின் பேச்சுவார்த்தையை இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களுடன் இணைத்து முற்றுமுழுதாக நியாயப்படுத்தி சல்மான் குர்ஷித் தெரிவித்த கருத்துகள் தி.மு.க.வுக்கும் அண்ணா தி.மு.க.வுக்கும் எதிராக தொடுக்கப்பட்ட தாக்குதல்களாக அமைந்தன.

ஆனால், இந்தியாவின் பிரதமர் பதவிக்குத் தகுதியானவராக தன்னைக் காட்டிக் கொள்ளும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, ராஜபக்ஷவுடன் கைகுலுக்கிய மன்மோகன் சிங்கின் செயலைக் கண்டனம் செய்ததுடன், இந்திய மீனவர்கள் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றமை குறித்து கடுமையான செய்தியை பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரி தன்னால் எழுதப்பட்ட கடிதங்களுக்கு பிரதமர் பதிலளிப்பதில்லை என்றும் ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார். தமிழக மீனவர்களின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை மீனவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே கொழும்பில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தான் கேட்டுக்கொண்டிருக்கின்ற அதேவேளை, பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கும் முயற்சியாக இலங்கைக் கடற்படையினர் மேலும் பல தமிழக மீனவர்களைக் கைது செய்திருக்கிறது என்றும் ஜனவரி 27ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற முதலாவது சுற்றுப்பேச்சுவார்த்தைக்குப் பிறகு 148 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கிறது என்று குற்றஞ்சாட்டியே திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த வருடம் கூட்டணியில் இருந்து விலகிக்கொண்டது என்றபோதிலும், தி.மு.க.வைச் சாந்தப்படுத்துவதற்காக ஜெனீவாத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்திய அரசாங்கம் ஆதரித்து வாக்களித்தது. அப்படி வாக்களித்த போதிலும் கூட, ஜெனீவா தீர்மானத்தின் வாசகங்களின் கடுமையைத் தணித்தமைக்காக அரசாங்கத்தை தி.மு.க. குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருந்தது. தமிழக மக்களின் குறிப்பாக, தீவிர தமிழ்த் தேசியவாதிகளின் ஆதரவைத் தன்பக்கம் இழுக்கும் முயற்சியாக ஜெயலலிதாவும் இலங்கை விவகாரத்தில் தன்னுடைய முன்னைய நிலைப்பாடுகளையும் விட தீவிரமான நிலைப்பாடுகளை எடுத்து அறிவிப்புச் செய்துகொண்டிருக்கிறார்.

தீவிர தமிழ் அரசியல் விளையாட்டில் தி.மு.க.வை முந்திச்செல்லும் ஒரு முயற்சியாக ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்வதாக ஜெயலலிதா கடந்தமாதம் அறிவித்தார். பிறகு அவரின் அறிவிப்புக்கு எதிராக மத்திய அரசாங்கம் இந்திய உச்ச நீதிமன்றத்தை நாடியதையடுத்து அதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசியலில் அதிகரித்துக்கொண்டிருக்கும் பர பரப்புக்கு மத்தியில், இந்திய அரசாங் கம் குறிப்பாக பிரதமர் மன்மோகன்சிங் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றி உலக அரங்கில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட முன்வருவாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

### மே 16க்குப் பிறகு புதிய பிரதமர்

இந்திய பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டது. 9 கட்டங்களாக நடைபெறவிருக்கும் வாக்களிப்பு ஏப்ரில் 7ஆம் திகதி ஆரம்பித்து மே 12ஆம் திகதி முடிவடைகிறது. இந்திய வரலாற்றில் மிக



இந்திய வரலாற்றிலேயே மிகவும் நீண்ட தேர்தல் செயல்முறையாக அமையப்போகும் 2014 லோக்சபா தேர்தல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வும் நீண்ட தேர்தல் செயன்முறையாக இது அமையப்போகிறது. மே 16ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை தொடங்கும். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் புதிய பிரதமராக யார் வருவார் என்பதை அன்றைய தினம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலமாக நாட்டுக்கு தலைமைதாங்கி வழிநடத்திய தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங் தனது கட்சி தேர்தலில் வெற்றிபெற்றால் கூட மீண்டும் பிரதமர் பதவிக்குத்தான் வரப்போவதில்லை என்பதை ஏற்கனவே அறிவித்துவிட்டார். அரசாங்கத்துக்கு வெளியே இருந்து கொண்டு அதைக் கட்டுப்படுத்தி வரும் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தியே கட்சி மீண்டும் அதிர்ஷ்டவசமாக அதிகாரத்துக்கு வருமானால் பிரதமராகக்கூடிய வாய் ப்பு இருக்கிறது.

நரேந்திர மோடியும் பாரதீய ஜனதாவும் விடுத்த சவாலை ராகுல் காந்தியும் அவரது கட்சியும் ஏற்க மறுத்துவிட்டன. மூத்த தலைவர் எல்.கே. அத்வானியும் அவரது ஆதரவாளர்களும் வெளிக்காட்டிய ஆட்சேபத்தையும் பொருட்படுத்தாமல் பாரதீய ஜனதா அதன் பிரதமர் வேட்பாளராக குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியை அறிவித்த அதேவேளை, அவரை எதிர்த்துநிற்கக்கூடியதாக போதுமானளவு செல்வாக்கைக் கொண்டவராக ராகுல் காந்தியை காங்கிரஸ் தலைமைத்துவம் கருதவில்லை. நல்லாட்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கும் மோடி உறுதியான ஒரு தலைவர் என்ற மதிப்பு பரவலாக இருக்கிறது. கடந்த காலத்தைப் போன்றே தேர்தலுக்குப் பிறகு, காங்கிரஸ் எம்.பி.க்கள் தங்களது தலைவரைத் தெரிவு செய்வார்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்படக்கூடிய தலைவர் ராகுல் காந்தியைத்தவிர வேறுயாராகவும் இருக்கப்போவதில்லை.ஆனால், அவரின் பெயரை இப்போது அறிவிக்க அவர்கள் பயப்படுகிறார்கள். காங்கிரஸ் பாரம்பரியம் என்று ஒன்றைக்கூறி அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

பிரதமர் பதவிக்கான போட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா (அண்ணா தி.மு.க.) மேற்குவங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி (திரிநாமுல் காங்கிரஸ்), பீஹார் முதலமைச்சர் நிதிஷ்குமார் (ஐக்கிய ஜனதா தளம்), முலாயம் சிங் யாதவ் (சமாஜ்வாதி கட்சி) போன்றோரும் நிற்கிறார்கள்.

**காங்கிரஸ் கட்சி படுமோசமான தோல்வியைச் சந்திக்கப்போகிறது. பாரதீய ஜனதா அதிகாரத்துக்கு வருவதை தடுக்க வேறொரு அணி அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதற்கு வசதியாக காங்கிரஸ் கட்சி வெளியிலிருந்து ஆதரவளிக்கக்கூடிய சாத்தியங்களே அதிகம்**

தேர்தல் முடிவுகள் மே 16ஆம் திகதியே தெரியவருமென்ற போதிலும், அவை எந்தமாதிரி அமையுமென்பதை இப்போதே ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாகவுள்ளது. பெருவாரியான ஊழல் மோசடிகளாலும் பணவீக்கத்தாலும் அபகீர்த்திக்குள்ளாகியிருக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி நிச்சயமாக மீண்டும் அதிகாரத்துக்கு வரப்போவதில்லை என்பது முக்கியமானது. கடந்த தேர்தலில் தனது சொந்தத்தில் 200க்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ் படுமோசமான தோல்வியைச் சந்திக்கப்போகிறது. அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்கள் இதை உணர்த்தி நிற்கின்றன. பாரதீய ஜனதா அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க காங்கிரஸ் கட்சி வேறு ஒரு அணி அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதற்கு வெளியில் இருந்து ஆதரவு அளிக்கக்கூடிய சாத்தியங்களே அதிகம்.

இரண்டாவதாக, லோக்சபாத் தேர்தலில் கூடுதல் ஆசனங்களைப் பெறும் தனிக்கட்சியாக பாரதீய ஜனதாவே விளங்கப் போகிறது. முக்கியமான மாநிலங்களான இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சதீஷ்கார், மகாராஷ்டிரா, கர்நாடகா போன்றவை உட்பட கூடுதல் ஆசனங்களைக் கொண்ட உத்தரப்பிரதேசம் (80 ஆசனங்கள்), பீஹார் (48 ஆசனங்கள்) ஆகியவற்றில் இத்தடவை பாரதீயஜனதா அதன் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து சிறந்த செயற்பாட்டை வெளிக்காட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த தேர்தலில் உத்தரப்பிரதேசத்தில் 10 ஆசனங்களிலும் இராஜஸ்தானில் 4 ஆசனங்களிலுமே பாரதீய ஜனதா வெற்றிபெற்றது. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் குழம்பிப் போய்விடுவார்களே என்ற பயத்தில் ஏனைய பல கட்சிகள் பாரதீய ஜனதாவை 'தீண்டத்தகாத' கட்சியாக நோக்குவதே அக்கட்சிக்குள்ள பெரிய பிரச்சினை. இன்னொரு பிரச்சினை 2002 குஜராத் கலவரத்தின் வில்லனாக மோடி காண்பிக்கப்படுவதுதான். சுமார் 4000பேர் கொல்லப்பட்ட அந்த கலவரத்தை மூன்று நாட்களாகக் கட்டுப்படுத்துவதற்கு மோடியின் அரசாங்கம் தவறியது.

இத்தகைய பின்புலத்திலே, தேர்தலில் கூடுதல் எண்ணிக்கையான ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியாக பாரதீய ஜனதா வந்தாலும் கூட, அதனால் அரசாங்கத்தை அமைக்கக் கூடியதாக இருக்குமென்று சொல்வதற்கில்லை. கடந்த டிசம்பரில் டில்லி மாநில சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்தித்த போதிலும் கூட, பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக அது அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சிக்கு ஆதரவளித்து ஆட்சிக் கட்டில் ஏற்றியது. இதே தந்திரோபாயத்தை தேர்தலுக்குப் பிறகு மத்தியிலும் காங்கிரஸ் பின்பற்றக்கூடிய சாத்தியங்களே இருக்கின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வீசும் கூட்டணிக் காற்று!

# மல்லுக்கு நிற்கும் தேர்தல் காட்சிகள்!

## சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

**ஒவ்வொரு கூட்டத்திலும் 'இந்த காங்கிரஸ் அரசை தூக்கியெறிவீர்களா? செய்வீர்களா?' என்று கேள்வி எழுப்பி உற்சாகம் மிகுந்ததாக மாற்றி வருகிறார் முதலமைச்சர் ஜெயலலிதா. அவரைப்பொறுத்தவரை காவிரிப்பிரச்சினை, முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை, மாநில அரசுக்கு நிதி கொடுக்காத பிரச்சினை, கச்சதீவு பிரச்சினை, தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு இப்படி ஒரு கதம்ப மாலையுடன் பிரசாரத்தில் நிற்கிறார்.**

கூட்டணிக் காற்று தமிழகத்தில் பல திசைகளிலும் வீசிக் கொண்டிருக்கிறது. இந்தியப் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழகத்தில் ஏப்ரல் 24ஆம் திகதி தேர்தல். அன்றைய தினம் டில்லியில் யார் ஆட்சி அமைப்பது என்பதை முடிவு செய்யப் போவது எந்த அணி என்பது பற்றி தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்கப் போகிறார்கள் தமிழக வாக்காளர்கள். இந்தத் தேர்தலைச் சந்திக்கும் முன்பு அமையப் போகின்ற அணி விவகாரத்தில்தான் 'ஆடிக் காற்றில் அம்மிக்கல் பறப்பது போல் பல கட்சிகளும் அங்கும் இங்குமாகப் பறந்து கொண்டிருக்கின்றன'.



தமிழகத்தில் 'அணிக்குத் தலைமை தாங்கும் கட்சிகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான் இருக்கின்றன. ஆனால் இந்த முறை புதிய வரவாக 'மோடி' தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அணி அமைக்கும் முயற்சியில் அதிரடியாக இறங்கியது. தி.மு.க. காங்கிரஸ் கட்சியுடன் இருக்கும், அ.தி.மு.க. கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இருக்கும் என்ற சிந்தனையில் பா.ஜ.க. இந்த முடிவை எடுத்தது. இந்த மூன்று அணிகளுக்கு இடையேயும் எப்படியெல்லாம் 'கூட்டணி போக்குவரத்துகள்' நடந்து கொண்டிருக்கின்றன என்பதுதான் இங்கே நாம் அலசப் போகும் அத்தியாயம்.

அ.தி.மு.க. முதலில் இருந்தே 'நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்' என்ற முழக்கத்தை தூக்கிப் பிடித்தது. ஏறக்குறைய 15 வருடங்கள் டெல்லியில் நடைபெறும் அரசில் அங்கம் வகிக்க முடியாமல் போனது அக்கட்சிக்கு பெரிய இழப்பை ஏற்படுத்தி விட்டது. அதனால் இந்த முறை 'நம் எக்ஸ்பிரஸ் ரயில் செங்கோட்டைக்குப் போகும்' என்று அ.தி.மு.க. பொதுக்குழுவிலேயே அறிவித்தார் முதல்வர் ஜெயலலிதா. அதை இடது சாரிக் கட்சிகள் புரிந்து கொள்ளத்தவறினார்கள். அவர், 'ஏதோ பிரசாரத்திற்காக அப்படிச் சொல்கிறார்' என்று தப்புக் கணக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இரு பிரதான கட்சிகளையும் தவிர்த்துப்பார்த்தால் புதிய அவதாரம் எடுத்திருப்பது விஜயகாந்த் தலைமையிலான பா.ஜ.க. அணியே அதை அப்படித்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அக்கூட்டணியிலிருக்கும் பா.ஜ.க., பா.ம.க., தே.மு.தி.க., ம.தி.மு.க. ஆகிய நான்கு முக்கிய கட்சிகளில் அதிக இடங்களில் போட்டியிடப் போகிறது விஜயகாந்த் கட்சிதான்.**

போட்டார்கள்.

கம்யூனிஸ்ட் கூட்டணிகளுடன் வெற்றி பெற்று முதல்வர் பதவியை ஏற்றுக்கொண்ட போது குஜராத் முதல்வர் நரேந்திரமோடியை தன்னுடைய பதவியேற்பு நிகழ்ச்சிக்கு அழைத்து கௌரவப்படுத்தினார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. அப்போது அந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுடன் 'அது இரு தலைவர்களின் நட்பின் அடிப்படையில் நடைபெற்றது. அரசியல் அல்ல' என்று கூறி அ.தி.மு.க. விற்கு குடை பிடித்தார்கள் இடதுசாரிகள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு ராஜ்ய சபைப் பதவியை மிகவும் இழுத்தடித்துக் கொடுத்த போது கூட 'அம்மா புகழ்' பாடினார்கள். அக்கட்சியின் அகில இந்தியத் தலைவர்களில் ஒருவரான ஏ.பி.பரதன் உள்ளிட்டோர் சென்னைக்கே வந்து 'அ.தி.மு.க.வுடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலை சந்திப்போம்' என்று அறிவித்து விட்டுப் போனார். அடுத்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு ராஜ்ய சபை பதவியைக் கேட்டதும் கொடுத்தார் ஜெயலலிதா. அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் சென்னைக்கே வந்து 'நாங்கள் அ.தி.மு.க. அணியில்' என்பதை தெளிவுபடுத்தி விட்டுச் சென்றார். அது மட்டுமல்ல, 'பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தேசிய அரசியலில் ஜெயலலிதா முக்கிய பங்கு வகிப்பார்' என்றும் கூட பிரகடனப்படுத்தி விட்டுச் சென்றார்.

ஆனால், இடதுசாரிகள் தலைமையில் 11 கட்சிக் கூட்டணி ஒன்றை அகில இந்திய அளவில் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் அந்தமுயற்சிகள் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றன. அந்த அணியின் கூட்டங்களில் உத்தரப்பிரதேச ஜாம்பவான் முலாயம் சிங் கலந்து கொண்டார். பீஹார் முதலமைச்சர் நித்திஷ்குமார் பங்கேற்றார். இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் இரண்டாம் கட்டத் தலைவர்களான தம்பிதுரை, டாக்டர் மைத்ரேயன் போன்றோர்தான் போனார்களே தவிர, ஜெயலலிதா பங்கேற்கவில்லை. ஏன்? இந்த அணியின் சார்பில் 'கொள்கைப் பிரகடனம்' செய்ய சமீபத்தில் டில்லியில் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்குக் கூட ஜெயலலிதா போகவில்லை. அந்தக் கூட்டத்தில்தான் 'மதவாதம், ஊழல்' என்பதை மையப்படுத்தி இந்தப் பாராளுமன்றத் தேர்தலைச் சந்திப்பது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொள்கைப் பிரகடனம் முடிந்தவுடன்தான் தமிழகத்தில் உள்ள நாற்பது தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்தார் ஜெயலலிதா. 'கம்யூனிஸ்டுகளுடன் தொகுதிப் பங்கீடு முடிந்ததும் அந்தத் தொகுதிகளில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வாபஸ் பெறப்படுவார்கள்' என்றார். ஆனால் அவர் காஞ்சிபுரத்தில் முதல் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிய பிறகுகூட, இடதுசாரிக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு எட்டப்படவில்லை. தன் கூட்டணிக் கட்சியை தன் கட்சி மேடையில் ஏற்றாமல், அதுவும் முதல் பிரசாரக் கூட்டத்தையே கூட்டணிக் கட்சி இல்லாமல் செய்து சாதனை நிகழ்த்தினார் ஜெயலலிதா என்றுதான் சொல்ல வேண்டும்.

இதன்பிறகுதான் இப்போது கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு கோபம் வந்தது. இரு கட்சித் தலைவர்களும் ஒன்று கூடினார்கள். ஏனென்றால் சமீப காலமாக தேர்தல் கூட்டணி என்பதை இரு கம்யூனிஸ்ட் தலைவர்களும் சேர்ந்தே முடிவு செய்கிறார்கள். இருவரும் சேர்ந்தே ஒரு அணியில் இடம்பெறுகிறார்கள். அதற்காக நடைபெற்ற கூட்டங்களில் அக்கட்சியின் நிர்வாகிகள் கோபக் கனல் கொட்டினார்கள். அதன் விளைவு! அ.தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியே வந்து 'தனியாகப் பாராளுமன்றத் தேர்தலைத் தமிழகத்தில் சந்திப்போம்' என்று அறிவித்துள்ளார்கள். இது மாநிலக் குழு எடுத்திருக்கும் முடிவு. இதில் மத்திய குழுவிற்கு சம்மதம் இருக்குமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஏனென்றால் இரு கட்சிகளுமே இந்தத் தேர்தலில் அகில இந்திய அளவில் கிடைக்கும் எம்.பி.க்களின் அடிப்படையில்தான் 'தேர்தல் அங்கீகாரத்தை' தக்க வைத்துக் கொள்ள முடியும். அதற்காகத்தான் 2009 பாராளுமன்றத் தேர்தலில் கொடுக்கப்பட்ட தலா மூன்று தொகுதிகள் தங்களுக்கு வேண்டும் என்று அ.தி.மு.க.விடம் கோரிக்கை வைத்தார்கள் இரு கம்யூனிஸ்ட் கட்சிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும். ஆனால் அ.தி.மு.க.வோ 'உங்கள் இருவருக்குமே ஏற்கனவே தலா ஒரு ராஜ்ய சபை பதவி கொடுத்து விட்டேன். அதனால் தேர்தலில் போட்டியிட உங்கள் இருவருக்கும் இன்னும் தலா ஒரு தொகுதி தருகிறேன்' என்று கூறினார். ஒரு தொகுதி வேண்டாம் என்று கூறிவிட்டுத்தான் இப்போது தனி அணிக்குத் திட்டமிடுகிறார்கள் கம்யூனிஸ்டுகள். அ.தி.மு.க. தலைமையிலான அணி இந்த அளவில் இருக்கிறது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா, 'காங்கிரஸும், தி.மு.க.வும் தமிழகத்திற்குத் துரோகம் இழைத்து விட்டன' என்ற

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய ஐந்து கட்சிகள் வெளியேறி விட்டன. ஆகவே சட்டமன்றத் தேர்தலின் போது இருந்த பலம் இப்போது பாராளுமன்றத்தேர்தலில் இல்லை. ஆனாலும் 'அ.தி.மு.க. அங்கம் வகிக்கும் ஆட்சி' 'மத்தியில் அ.தி.மு.க. ஆட்சி' என்றெல்லாம் பிரசாரக் கூட்டங்களில் நம்பிக்கையூட்டி வாக்குகளைக் கேட்டு வருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழக அணியில் இப்போது காங்கிரஸ் கட்சி இல்லை. பாட்டாளி மக்கள்கட்சி இல்லை. இந்தக் கட்சிகள் எல்லாம் சென்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அணி

இடம் தரவில்லை. தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தால், அகில இந்திய அளவில் குறிப்பாக வட மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் ஊழல் பற்றிப் பேச முடியாது என்று தயங்கினார்கள். அதனால் தி.மு.க.விற்கு தே.மு.தி.க.விடம் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அவரோ தனக்கு குறைந்தபட்சம் 12 பாராளுமன்றத் தொகுதிகள் வேண்டும். அதுவும் காங்கிரஸை நீங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இரு நிபந்தனைகளை விதித்தார்.

விஜயகாந்த் காங்கிரஸுக்கு ஆதரவான இந்தக் கோரிக்கையை வைத்த



திராவிட முன்னேற்றக்கழக அணியில் இப்போது காங்கிரஸ் கட்சி இல்லை. பாட்டாளி மக்கள் கட்சியும் இல்லை. இவையெல்லாம் கடந்த சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. அணியுடன் இருந்த கட்சிகள். தி.மு.க.வின் மோகமெல்லாம் விஜயகாந்த் கட்சி மீதுதான் இருந்தது. காங்கிரஸ் கட்சி தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள விருப்பமாகவிருந்தாலும் அந்தக்கட்சியால் தி.மு.க.வுக்கு வந்த விவகாரங்களை மறக்க கருணாநிதி தயாராக இல்லை. மு.க.ஸ்டாலின் காங்கிரஸ் தேவையில்லை என்பதில் கறாராக இருந்தார்.

குற்றச்சாட்டை முன்வைத்து பிரசாரப் பயணம் மேற்கொண்டு விட்டார்.

அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை, காவிரிப் பிரச்சினை, இலங்கைப் பிரச்சினை, மாநில அரசுக்கு நிதி கொடுக்காதது, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, கச்சதீவை மீட்டுக்கொடுக்காதது, தனி ஈழம் அமைப்பதற்கான பொது வாக்கெடுப்பு இப்படி ஒரு கதம்ப மாலையுடன் பிரசாரக் களத்தில் நிற்கிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் 'இந்தக் காங்கிரஸ் அரசைத் தூக்கி எறிவீர்களா? செய்வீர்களா?' என்று கேள்வி எழுப்பி பிரசாரக் கூட்டத்தை உற்சாகமிகுந்த கூட்டமாக மாற்றி வருகிறார் அவர். ஆனால் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம், புதிய தமிழகம்,மனிதநேய மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,

யுடன் இருந்த கட்சிகள். தி.மு.க.வின் மோகம் எல்லாம் விஜயகாந்த் தலைமையில் உள்ள தே.மு.தி.க.மீதுதான் இருந்தது. காங்கிரஸ் கட்சி தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ள விருப்பமாக இருந்தாலும், அக்கட்சியால் தி.மு.க.விற்கு வந்த 'விவகாரங்களை' மறக்க கலைஞர் கருணாநிதி தயாராக இல்லை. அதனால்தான் தி.மு.க. பொதுக்குழுவைக் கூட்டி 'பா.ஜ.க.வுடனும் கூட்டணி இல்லை. காங்கிரஸுடனும் கூட்டணி இல்லை' என்று அறிவித்தார். அதன்பிறகு 'மோடி நல்லவர்' 'எனக்கு நண்பர்' என்றெல்லாம் சொல்லி வைத்தார். அவர் மனதில் மோடி தலைமையிலான பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால் கூட தப்பு இல்லை என்ற எண்ணவோட்டமே மேலோங்கி நின்றது. ஆனால் அதற்கு பா.ஜ.க. தரப்பு

தற்காகவே அவருக்கு ஸ்பெஷலாக ஒரு அப்பாயின்மென்ட் கொடுத்து தமிழகப் பிரச்சினைகள் பற்றிய கருத்தைக் கேட்டார் பிரதமர் மன்மோகன்சிங். 'நீங்கள் தமிழக முதல்வரானால் பிரச்சினைகள் தீரும்' என்று கூட ஐஸ் வைத்தார். ஆனாலும் தி.மு.க. பொருளாளரும், கட்சியின் முக்கிய முடிவுகளில் முன்னணி நாயகராகத் திகழுபவருமான மு.க. ஸ்டாலின், 'காங்கிரஸுக்கு நோ' என்று கறாராக இருந்தார். காங்கிரஸ் தலைவர்கள் பலரும் ஸ்டாலினுக்கு தூது விட்டார்கள். குறிப்பாக குலாம் நபி ஆசாத், ப. சிதம்பரம் போன்றவர்கள் கூட பேசினார்கள். ஆனால், காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என்ற கருத்திலிருந்து அவர் பின்வாங்கவில்லை. காரணம் அது தி.மு.க. தொண்டனின் மூட் என்று வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் சொல்லி, ஒட்டு மொத்த கட்சியே 'காங்கிரஸுடன் கூட்டணி வேண்டாம்' என்பதில் என் பின்னால் நிற்கிறது என்று பிரகடனப்படுத்தினார் ஸ்டாலின். காங்கிரஸ் இல்லாத தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க விஜயகாந்திற்கு இஷ்டமில்லை. அது மட்டுமன்றி, விஜயகாந்திற்கு வேறு ஆசை இருக்கிறது. அவரது கட்சி தி.மு.க. எதிர்ப்பு என்பதில் முக்கியமாக இருந்து வருகிறது. அதற்கு என்ன காரணம் என்றால் எப்படியாவது அ.தி.மு.க. வாக்கு வங்கியை 'கறுப்பு எம்.ஜி.ஆர்' என்ற இமேஜை வைத்து கைப்பற்றி விட வேண்டும் என்பதுதான். ஆகவே இந்தப் பாராளுமன்றத் தேர்தலிலும் நாம் தி.மு.க.வுடன் கூட்டணி வைக்காமல் விலகி நின்றால், தி.மு.க.வை உறுதியாக எதிர்ப்பவன் என்ற நிலையை ரசிக்கும் அ.தி.மு.க. தொண்டர்கள் தன்னை எதிர்காலத்தில் ஆதரிப்பார்கள் என்று கணக்குப் போடுகிறார்.

அதனால் தி.மு.க.வில் பல கட்ட திரைமறைவுப் பேச்சுவார்த்தைகளில் விஜயகாந்த் பிடி கொடுக்கவில்லை. சிங்கப்பூர் போனார். சிகிச்சைக்காகப் போயிருக்கிறார் என்றார்கள்.


ஆகவே இப்போது காங்கிரஸும் இல்லை. தே.மு.தி.க.வும் இல்லை. இந்நிலையில் கூட்டணியில் உள்ள கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டைத் துவங்கிய தி.மு.க., 'இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு' ஆகிய நான்கு கட்சிகளுக்கும் தலா ஒரு பாராளுமன்றத் தொகுதியை ஒதுக்கியுள்ளது. இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மட்டும் ஏற்கனவே இரு தொகுதிகளைப் பெற்ற கட்சி என்பதால், அக்கட்சியினர் மத்தியில் குமுறல் வெடித்துக் கொண்டிருந்தது. பின்னர் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் இரண்டாவது ஆசனம் வழங்கப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க.விலிருந்து வெளியேறியுள்ள இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தி.மு.க. கூட்டணிக்கு வருமா என்பதுதான் இப்போது கேள்வி. இந்த விடயத்தில் இடதுசாரிக் கட்சிகளின் தலைமைக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. 2ஜி அலைக்கற்றை ஊழலை முன்னிறுத்தி வட மாநிலங்களில் அரசியல் செய்யப்படுகிறது. அதனால் தி.மு.க.வை மூன்றாவது அணியில் சேர்த்தால், அந்த பிரசாரத்தில் சிக்கிக் கொள்ள நேரிடுமோ என்று பிரகாஷ் காரத், பரதன் போன்றவர்கள் எல்லாம் யோசிக்கிறார்கள்.

இந்த இரு மேஜர் கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால், புதிய அவதாரம் எடுத்திருப்பது விஜயகாந்த் தலைமையிலான பா.ஜ.க. அணி.

அதை அப்படித்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அக்கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க, பா.ம.க., தே.மு.தி.க., ம.தி.மு.க. ஆகிய நான்கு முக்கிய கட்சிகளில் விஜயகாந்த் கட்சிதான் அதிக இடங்களில் போட்டியிடப்போகிறது. அவருக்கு 14 பாராளுமன்றத் தொகுதிகளும், பா.ம.க.விற்கு 8 பாராளுமன்றத் தொகுதிகளும், ம.தி.மு.க.விற்கு 6 பாராளுமன்றத் தொகுதிகளும் கொடுக்கப்படும் என்று பேச்சுவார்த்தைகள் தொடங்கியிருக்கின்றன. முதலில் பா.ம.க.விடமும், அடுத்து தே.மு.தி.க.விடமும் முதல் ரவுண்ட் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது. இந்த 28 தொகுதிகள் போனால் மிஞ்சியிருப்பது 12 தொகுதிகள்தான். அதில் வேறு சில உதிரிக் கட்சிகளுக்கு சீட் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் பா.ஜ.க.விற்கு இருப்பதால் 8 முதல் 10 தொகுதிகளுக்குள் மட்டுமே பா.ஜ.க. போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தமிழகத்தில் முதல் முறையாக மோடி தலைமையிலான பா.ஜ.க. விஜயகாந்த் தலைமையிலான அணியில் போட்டியிடுகிறது. ஒதுக்கப்படும் தொகுதிகளின் அடிப்படையில் விஜயகாந்தான் அந்த அணிக்குத் தலைமை.

இந்தத் தொகுதி உடன்பாடு வைகோவிற்கு சம்மதமா என்பது தெரியவில்லை. அவர் பா.ஜ.க., ம.தி.மு.க., பா.ம.க ஆகிய மூன்று

**பிரதமர் வேட்பாளர் மோடியை முன்னிறுத்தி வெற்றி பெற்றுவிட முடியும் என்பதுதான் அந்த அணியில் இருப்போரின் எண்ணம். அப்படியொரு முயற்சி 1998, 1999 பாராளுமன்றத் தேர்தல்களில் வாஜ்பாயைப் பயன்படுத்தி வெற்றிபெற்றது. அப்போது தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் மாறி மாறி அந்தக் அணியில் இடம்பெற்றன. ஆனால் இப்போது அந்த கூட்டணியில் சேர்ந்துள்ள தே.மு.தி.க. பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய மூன்று கட்சிகளின் வாக்கு வங்கிகளைச் கூட்டினால் கூட தி.மு.க.வினதோ அல்லது அ.தி.மு.க.வினதோ வாக்கு வங்கியை ஈடுகட்ட முடியாது**



ஆனால் அவரோ 'என் பிள்ளையின் பட சூட்டிங்கிற்கு இடம் பார்க்கப் போனேன்' என்று கூறினார். சிங்கப்பூர் சென்று திரும்பி வந்த கையோடு பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைக்க தன் கட்சியின் தொகுதிப் பேச்சுவார்த்தைக் குழுவைப் பேச வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளுமே தலா எட்டுத் தொகுதிகள் என்ற அடிப்படையில் போட்டியிட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளாராம். இது 1998 பாராளுமன்றத் தேர்தல் ப்ளான். அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் வைகோவும், டாக்டர் ராமதாஸும் தலா 5 தொகுதிகளில் சமமாகப் போட்டியிட்டார்கள். ஏனென்றால் வைகோவைப் பொறுத்தமட்டில் பா.ம.க.விற்கு குறைவான சீட்டுகளில் போட்டியிடலாமா என்ற தயக்கம் இருக்கிறது. அதே நேரத்தில் அ.தி.மு.க, தி.மு.க. போன்ற கட்சிகளுடன் கூட்டணி வைக்கப் போவதில்லை என்ற முடிவை எடுத்திருக்கும் வைகோவிற்கு தொகுதி கேட்டு அடம்பிடிக்கும் ஒப்ஷன் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. 12 தொகுதிகளில் வேட்பாளரை அறிவித்துவிட்டு களம் இறங்கிய டாக்டர் ராமதாஸ் எப்படி சில தொகுதிகளை விட்டுக் கொடுக்க முன் வந்துள்ளாரோ, அதே போல் இப்போது வைகோவும் விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை.

பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி வெற்றி பெற்றுவிட முடியும் என்பதுதான் இந்த அணியில் சேர்ந்திருப்போரின் எண்ணம். அப்படியொரு முயற்சி 1998 இலும், 1999 பாராளுமன்றத் தேர்தலிலும் வாஜ்பாயை வைத்து வெற்றி பெற்றது. ஆனால் அப்போது தமிழகத்தில் உள்ள முக்கிய திராவிடக் கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாறி மாறி அந்த அணியில் இடம் பெற்றன. இந்த முறை அதே முயற்சியை நரேந்திரமோடியை முன்னிறுத்திச் செய்யப்படுகிறது. ஆனால் இப்போது அந்தக் கூட்டணியில் சேர்ந்துள்ள 'தே.மு.தி.க, பா.ம.க, ம.தி.மு.க.' ஆகிய மூன்று கட்சிகளின் வாக்கு வங்கியைக் கூட்டினால் கூட, தி.மு.க.வின் வாக்கு வங்கியையோ அல்லது அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியையோ ஈடுகட்ட முடியாது. ஏன் பா.ஜ.க.விற்கு உள்ள மோடியின் இமேஜைப் பயன்படுத்தியும் அந்த இலக்கை எட்ட முடியாது. ஆகவே இந்த அணி பா.ஜ.க.விற்கு உதவி செய்வதை விட, தேர்தல் அங்கீகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கும் ம.தி.மு.க.விற்கும், பாட்டாளி மக்கள் கட்சிக்கும் உதவும். அதே போல் எதிர்காலத்தில் அ.தி.மு.க. வைக் கைப்பற்ற வேண்டும் என்று விஜயகாந்த் போட்டுள்ள வியூகத்திற்கு கை கொடுக்கும். இந்தக் கூட்டணியில் இன்னொரு குழப்பமும் இருக்கிறது. வைகோ, ராமதாஸ், விஜயகாந்த் ஆகிய மூவருமே ஒருவருக்கொருவர் அரசியலில் ஜெயித்து விடக்கூடாது என்று நினைப்பவர்கள். அது மட்டுமன்றி விஜயகாந்திடம் உள்ள வாக்கு வங்கி வட மாவட்டங்களைப் பொறுத்தவரை ராமதாஸுக்கு எதிராக அவரிடம் வந்த வாக்கு வங்கி. இது போன்ற பல குழப்பங்களால், பா.ஜ.க. அணி டேக் ஓப் ஆகியிருக்கிறது. ஆனால் அது 'வெற்றி' என்ற விமானத்தளத்தில் போய் பத்திரமாக இறங்குவதற்கு வழியில்லை.

இந்த மூன்று அணிகளும் நிலைத்து விட்ட நிலையில், காங்கிரஸ் கட்சி தனித்து களம் காண வேண்டிய நிலையில் இருக்கிறது. ஒரு காலத்தில் எப்படி பா.ஜ.க.வை 'தீண்டத்தகாத கட்சி' என்று பிரசாரம் மேற்கொண்டார்களோ அதே மாதிரி இன்று காங்கிரஸ் கட்சிக்கு அப்படியொரு நிலை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இரட்டை வேடம், தமிழக மீனவர் பிரச்சினையில் கூட இலங்கைக்கு ஆதரவு, ராஜீவ் வழக்கில் மரண தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்ய முயன்ற தமிழக அரசின் முயற்சிக்கு சுப்ரீம் கோர்ட்டில் தடை பெற்றது, எல்லாவற்றிற்கும் மேலாக இயற்கையான கூட்டணிக் கட்சியான தி.மு.க.வை நசுக்க எடுத்த முயற்சி எல்லாம் இன்று காங்கிரஸ் கட்சியின் மீதே திரும்பித் தாக்கி நிற்கிறது. 1998க்குப் பிறகு மீண்டும் 16 வருடங்கள் கழித்து காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்போதைக்கு நான்கு முனைப் போட்டி தமிழகப் பாராளுமன்றத் தேர்தலில் உறுதியாகி விட்டது. இதில் கம்யூனிஸ்டுகள் தனித்துப் போட்டி என்பதில் உறுதியாக இருந்தால் ஐந்து முனைப் போட்டியாகக்கூட மாறிவிடும். ஆனால் தேர்தல் அணிகளைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.க. விற்கு கூட்டணிக் கட்சிகளே இல்லை. தி.மு.க.விற்கு சில கூட்டணிக் கட்சிகள். பா.ஜ.க.விற்கு பல கூட்டணிக் கட்சிகள். வாக்கு வங்கி அடிப்படையில் பார்த்தால் அ.தி.மு.க., 'நாங்கள் சாதனைகளைச் செய்திருக்கிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக சென்டிமென்டுடன் கைகோர்த்து நின்றிருக்கிறோம். எங்கள் தேர்தல் அறிக்கையில் ஈழம் அமைய பொது வாக்கெடுப்பே வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். காங்கிரஸ் அரசு தமிழகத்தை வஞ்சித்ததைப் பட்டியலிடுகிறோம். எங்களுக்கு ஆட்சிக்கான ஆதரவு அலை வீசுகிறது. அதனால் வெற்றி பெறுவோம்' என்கிறது. தி.மு.க.வைப் பொறுத்தமட்டில், 'ஏற்காடு சட்டமன்றத்தேர்தல், தி.மு.க. பத்தாவது மாநில மாநாடு போன்றவற்றிற்குப் பிறகு தி.மு.க.வின் வாக்கு வங்கி வீறு கொண்டு எழுந்து நிற்கிறது. எங்களுக்கு புதிய கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்திருக்கிறது. பா.ஜ.க. அணியால் அ.தி.மு.க.வின் வாக்குகள்தான் போகும். மதச்சார்பற்ற அணி என்றால் எங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள் மக்கள். 1989 சட்டமன்றத் தேர்தல் பாணியில் நாங்கள்தான் வெற்றி பெறுவோம்' என்ற எண்ண வோட்டத்தில் இருக்கிறது. பா.ஜ.க. அணியோ, 'எங்கள் பிராண்ட் மோடி. அவருக்கு தமிழகத்தில் அனைத்துக் கட்சியினர் மத்தியிலும் ஆதரவு இருக்கிறது. மோடி அலையால் தமிழகத்தில் பா.ஜ.க. அணி வெற்றி பெறும்.' என்கிறது. எல்லாக் கட்சிகள் மட்டத்திலும் எதிர்பார்ப்புகள் நிறைந்த தேர்தலாக 16ஆவது பாராளுமன்றத் தேர்தல் தமிழகத்தில் நடக்கப் போகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலசைப் பறவை 6



ஜெயமோகன்

# பகற்கனவின் பாதையில்

கு.ப.ராஜகோபாலனின் ஒரு பழைய (கதையில் கனகாம்பரம்) ஒருவன் கும்பகோணத்தில் தன் நண்பனை தேடிச்செல்கிறான். நண்பனுக்கு அப்போதுதான் திருமணமாகியிருக்கிறது. இவன் அங்கே செல்லும்போது நண்பன் இல்லை. அவனுடைய இளம் மனைவி மட்டும் தனியாக இருக்கிறாள். பெரிய அழகி அவள். அவள் இவனை வரவேற்று காபி போட்டுக் கொடுக்கிறாள். கணவன் நாளைதான் வருவான் என்கிறாள். இவனுக்கு கும்பகோணத்தில் செல்வதற்கு ஓர் இடமில்லை. என்னசெய்வதென்று தெரியாமல் இருக்கையில், அவளே மாடியில் தங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறாள். அவள் சமைத்துப் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு இவன் மாடியில் ஜமுக்காளத்தைப்போட்டு படுத்துக்கொள்கிறான். அவள் இவனுக்குக் குடிக்க தண்ணீருடன் மாடி ஏறி வருகிறாள். இவனருகே சப்பணமிட்டு அமர்ந்து கருங்கூந்தலை மார்மேல் தூக்கிப்போட்டுக்கொண்டு அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள்.

நல்லவேளையாக இந்தக்கதையை நான் வாசிக்கும்போது தல்ஸ்தோயின் நாவல்களை வாசித்திருந்தேன். கு.ப.ராஜகோபாலனிடம் மனசுக்குள் வே, என்னவே இது? என்று கேட்டுக்கொண்டேன். கும்பகோணத்தில் 1940 வாக்கில் நடக்கும் கதை. என்ன யதார்த்தம் இது? யாருக்காக அவர் இதை எழுதினார்? இன்று ஒரு நுண்ணுணர்வுள்ள இலக்கியவாசகன் கு.ப.ராஜகோபாலனின் கதைகளின் முழுத் தொகுப்பை வாசிக்கநேர்ந்தால் ஐந்தாறு சிறுகதைகளை நல்லகதைகள் என்பான். இன்னும் சிலகதைகளை பரவாயில்லை என்பான். மிச்சகதைகள் ஏன் இலக்கியம் என்று சொல்லப்படுகின்றன, ஏன் கு.ப.ராஜகோபாலன் ஓர் இலக்கிய முன்னோடியாகக் கருதப்படுகிறார் என்று திகைப்பான். முக்கால்வாசிக் கதைகள் அவன் மார்பில் அவள் சாய்ந்தாள் என முடியும் படைப்புகள் கு.ப.ராஜகோபாலனின் அந்தரங்கப்பகற்கனவில் ஊறி மிதந்துகிடக்கக்கூடியவை.

அன்று கு.ப.ராஜகோபாலன் பெரிதும் ரசிக்கப்பட்டமைக்கு இந்தவகையான கதைகளே காரணம். உண்மையான அனல் வீசிய பண்ணைச்செங்கான் போன்ற கதைகள் அல்ல. முக்கால்நூற்றாண்டு தாண்டி இன்று வாசிக்கையில் அவற்றை எழுதி வாசித்த சமூகப்பிரக்ஞையை நுணுக்கமாக ஆராய்வதற்கான மூலப்பொருட்கள் என்றவகையிலேயே இக்கதைகள் கவனத்துக்குரியவை என்று படுகிறது. ஆணும் பெண்ணும் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டாலே ஊரவர் எழும் சூழல். மிகமிக இளமையிலேயே வீட்டுக்காரர்கள் பார்த்து ஏற்பாடு செய்துவைக்கும் திருமணம். அந்த மனைவியுடன் தனியாக அமர்ந்து ஒருமணிநேரம் பேசுவதுகூட ஆபாசம் என வகுத்திருக்கும் குடும்ப மனச்சூழல். இளமையிலேயே தொடர்ந்து பிறக்கும், தொடர்ந்து இறக்கும் குழந்தைகள். பலவகையான நோய்கள். காதலே இல்லாத ஒரு சமூகம். கு.ப.ராஜகோபாலன் வாழ்ந்தது. மிருகங்களுக்குக்கூட இருக்கும் சல்லாபம் முழுக்க மறுக்கப்பட்ட காலம்.

அந்தச் சமூகத்தின் அந்தரங்கமான பகற்கனவென்பது அழகிய இளம்பெண்ணுடன் சல்லாபம் செய்தல் தான். காமம் கூட இல்லை, சல்லாபம் மட்டுமே. 1942இல் எழுதப்பட்டு பலவருடங்களுக்குப் பின்னர் மறுபதிப்பாகியிருக்கும் க.நா.சுவின் 'சர்மாவின் உயில்' என்ற நாவல் இந்த மனநிலையை இன்னும் விரிவாகக் காட்டக்கூடியது. அன்றைய குடும்பச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை, ஏற்பாட்டுத்திருமணம் அளிக்கும் காதலற்ற குடும்ப வாழ்க்கையை, அதனுள் நிரந்தர பகற்கனவாக இருந்துகொண்டிருக்கும் காதலுக்கான தாகத்தை அதில் காணலாம்.

நவீனத் தமிழிலக்கியத்தின் அடித்தளம் என்று சொல்லத்தக்க மணிக்கொடிக் காலகட்டத்தை இன்று பார்க்கையில் அகவாழ்க்கைக்கான இந்த ஏக்கமே அதன் மைய ஓட்டமாக இருந்திருப்பதைக் காணமுடிகிறது. கு.ப.ராஜகோபாலன், மௌனி, ந.சிதம்பரசுப்ரமணியம், க.நா.சுப்ரமணியம் என்று அனைவருமே இதைத்தான் முக்கியமாக எழுதியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. உலகமெங்கும் உருவாகி வந்த புத்திலக்கியம் என்பது ஜனநாயக அரசியல் பிரக்ஞையையும், நவீன ஆன்மீகத்தேடலையும் சாரமாகக் கொண்டது. புத்துலகம் என்று அவை நினைத்த வரும் காலத்தின் அறவியலையும் அழகியலையும் தீர்மானிக்கும் அடித்தளங்கள் அவை. அந்தத் தேடலின் அலைக் கழிப்புகளையும் கொந்தளிப்புகளையும் வெளிப்படுத்தி யவை. அந்தத் தளத்தில் செயல் பட்ட, அதனாலேயே இன்றும் முன்மாதிரியாக நிற்கக்கூடிய தனிக்கலைஞன் புதுமைப்பித்தன் மட்டுமே.

**ஓர் இலக்கிய ஆக்கத்தில் சொல்லப்படும் அனைத்துச் சொல்லுமே முக்கியமானவை. சாரமற்ற உரையாடல்களுக்கு நல்ல இலக்கியத்தில் இடமில்லை. அது முன்வைக்க வேண்டியது உண்மையை அல்ல. செறிவு படுத்தப்பட்ட உண்மையை அல்லது அதி உண்மையை.**

மற்றவர்களுக்கு என்ன ஆயிற்று? ஏன் மீண்டும் மீண்டும் அவர்கள் காதோரம் முடி இறங்கிய வட்டமுகமும் காந்தக்கண்களும் கொண்ட கட்டழகிகளைப்பற்றியே எழுதினார்கள்? ஏன் மனிதவாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நிகழும் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி மட்டும் அவர்களுக்கு மொத்த வாழ்க்கையாகத் தெரிந்தது? இந்திய மெய்ஞான மரபில் காதல் என்பது ஒரு பெரும் குறியீடு. பிரேமை என்பது கடவுளையும் இயற்கையையும் அறிவதற்கான ஒரு அழகிய வழி. ஆனால் இவர்களின் எழுத்தில் அந்த அம்சமே இல்லை.இது உள்ளூர் நீறி எரியும் ஒரு தசைப்பரப்பில் தன் கற்பனையின் குளிர்ந்த தைலத்தை அள்ளி அள்ளிப்பூசிக்கொள்வது மட்டுமே.

மணிக்கொடி உருவாக்கிய இந்த முன்மாதிரி அன்று உருவாகிவந்த வணிக இலக்கியத்தில் அலைகளைக் கிளப்பியது. தமிழகத்தின் இந்த அந்தரங்கத் தேவையைப் பூர்த்திசெய்வது மிகமுக்கியமான ஒரு வணிகச்சேவைச்செயல்பாடாக அடையாளம் காணப்பட்டது. கு.ப.ராஜகோபாலனின் அதே வகை எழுத்தின் பல வடிவங்களை நாம் வணிக எழுத்தில் காணலாம். ஆர்வி, எல்லாவி போன்ற ஆரம்பகால எழுத்தாளர்கள்,பி.வி.ஆர், மகரிஷி போன்ற நடுக்கால எழுத்தாளர்கள், இந்துமதி சிவசங்கரி,பாலகுமாரன் போன்ற சமகால எழுத்தாளர்கள் என வாழையடி வாழையாக இந்த வகை எழுத்தை இன்றுவரை கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள்.

தீவிர இலக்கியத்திலும் இந்த வகை எழுத்தின் தொடர்ச்சி எப்போதும் இருந்தது. கு.ப.ராஜகோபாலனின் சரியான தொடர்ச்சி என்று தி.ஜானகிராமனைச் சொல்லலாம். நுண்தகவல்கள் நிறைந்த அவரது அழகிய நடை, தஞ்சைச்சூழலின் விரிவான சித்தரிப்பு ஆகியவற்றுக்கு அப்பால் அவரது நாவல்களின் பெறுமானம்தான் என்ன? அவை காதலுக்கான தமிழ்மனத்தின் ஏக்கத்தை நுண்ணிய முறையில் தீர்த்துவைக்கும் எழுத்துதானே? தன் மிகச்சிறந்த உரையாடல்கள் மூலம் ஜானகிராமன் திரும்பத்திரும்ப எழுதுவது ஆண் பெண்ணுடன் கொள்ளும் அழகிய நுட்பமான சல்லாபத்தைத் தானே? யோசித்துப்பாருங்கள், ஜானகிராமனின் எழுத்து வழியாக உங்களுக்குள் சில அழகிகளும் அவர்களின் காதலர்களும் மட்டும்தானே நிறுவப்பட்டிருக்கிறார்கள். விவேகமும் ஞானமும் பொருந்திய எத்தனைபேரை அவரால் உருவாக்க முடிந்திருக்கிறது? அடிப்படை இச்சைகளால் அலைக்கழியும் எந்த ஆன்மாவின் தவிப்பை நமக்குக் காட்டமுடிந்திருக்கிறது?

ஜானகிராமனைக் கொண்டாடி எழுதுபவர்களை நான் எப்போதும் கவனிக்கிறேன். அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த தித்திப்பைத்தான் சப்புகொட்டுகிறார்கள். உலகமெங்கும் மகத்தான எழுத்தின் ஆதாரமாக உள்ள அறவுணர்ச்சியும் சரி ஆன்மீக எழுச்சியும் சரி அவரது நாவல்களில் மிகக்குறைவு என்பதை அவர்கள் உணர்வதேயில்லை. ஜானகிராமனை இலக்கியச்சாதனையாளராக ஆக்குபவை அவரது சிறுகதைகள்தான். அவற்றில் அவர் நீதியின் சீற்றமும் மெய்யறிதலும் கொண்ட மகத்தான தருணங்களைப் புனைந்திருக்கிறார். பரதேசி வந்தான் அல்லது கடன் தீர்ந்தது அல்லது பாயசம் அல்லது மாப்பிள்ளைத்தோழன் போன்ற கதைகளை எழுதிய ஜானகிராமனையே நான் நவீன இலக்கியவாதியாக நினைக்கிறேன்.

நீண்ட இடைவேளைக்குப்பின் நான் ஜானகிராமனின் இருநாவல்களை வாசித்தேன். மோகமுள் மற்றும் அன்பே ஆருயிரே. என்ன இது இத்தனை வள வளவென்று போகிறது என்ற எண்ணம் ஏற்பட்டது. இப்போது என் வாசிப்பு மாறிவிட்டதா என்ன? இல்லை, நான் வளர்ந்துவிட்டேன். நான் அவற்றை முதலில் வாசிக்கையில் என் வயது பதினேழு. அன்று அவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக்கவர்ந்தவை ஜிலுஜிலுவென ஓடும் உரையாடல்கள். ஆம், சல்லாபங்கள். சுற்றிச் சுற்றிப் பேசும் பெண்களின் சமத்காரங்கள், ஜாலங்கள். இன்று அவற்றை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. பேசிக்கொண்டே இருக்கிறார்கள் உண்மையிலேயே மக்கள் அப்படித்தான் பேசுகிறார்கள் என்றால்கூட அதற்கு இலக்கியமதிப்பென ஏதுமில்லை. ஓர் இலக்கிய ஆக்கத்தில் சொல்லப்படும் அனைத்துச் சொல்லுமே முக்கியமானவை. சாரமற்ற உரையாடல்களுக்கு நல்ல இலக்கியத்தில் இடமில்லை. அது முன்வைக்கவேண்டியது உண்மையை அல்ல, செறிவுபடுத்தப்பட்ட உண்மையை, அல்லது அதி உண்மையை.

அவற்றை நான் ரசித்திருந்த அந்தக்காலத்தில் இருவர் என்னிடம் அதைச் சொல்லியிருக்கிறார்கள். மிகச்சிறந்த வாசகியான என் அம்மா ஜானகிராமன் முதிரா ஆண்களுக்கான எழுத்தாளர் என்று சொன்னார். பின்னர் சுந்தரராமசாமி அவரோடது ஒரு ஜிலுஜிலுப்பு. காஞ்சிப் பட்டை மூஞ்சிமேல போட்டு இழுக்கிறது மாதிரி.... ஆனா அதுக்கு இலக்கியத்தில மதிப்பில்ல. எப்படிப்பட்ட பாறாங்கல்லா இருந்தாலும் உண்மைக்குத்தான் இங்க மதிப்பு என்றார். ஜானகிராமனின் நாவல்களில் அவை சென்று சேரும் உண்மையின் தருணங்கள் உள்ளன. திரைவிலக்கி வெளிப்படும் மனித மனத்தின் ஆழங்கள் உள்ளன. ஆனால் அவை அந்த பகற்கனவின் ஜீராவால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. இன்று அந்நாவல்களை இருபக்கமும் கையை வைத்து இறுக்கிப்பிழிந்து சாராம்சத்தை மட்டும் எடுக்கமாட்டோமா என்றிருக்கிறது.

லா.ச.ராமாமிருதத்தின் கடைசிக்காலச் சிறுகதை ஒன்றில் ஒரு பெண் கதைசொல்லியான முதியவரை முத்தமிட்டுச்செல்வதாக எழுதியிருந்தார். தினமணிக் கதிரில் அக்கதையை வாசித்த சுந்தர ராமசாமி சிரித்துக் கொண்டே சொன்னார். முன்னாடின்னா இந்த முத்தம் வந்திருக்காது,. அதுக்கான ஏக்கம் மட்டும்தான் இருக்கும். பரவாயில்லை, நாற்பது அம்பது வருசம் எழுதி இந்த இடம் வரை வந்து சேர்ந்துட்டார். மீபொருண்மைத்தளம் சார்ந்த அதீதகற்பனைகளாலும் மன உணர்ச்சிகளை நேரடியாகத் தொட எழும் மொழியாலும் லா.ச.ராமாமிருதத்தின் கதைகளில் பல இலக்கியச்சாதனைகள். ஆனால் அவரது எழுத்திலும் சாராம்சமாக ஓடிக்கொண்டிருப்பது கு.ப.ராவையும் மௌனியையும் ஆட்டிப்படைத்த அந்த ஏக்கம் மட்டும்தானே?

**தமிழில் புதுமைப்பித்தனின் காலகட்டத்தில்தான் பாலியல் எழுத்து அறிமுகமாகிறது. வாசிப்பு தொடங்கும் காலகட்டமும் அதுவே. லண்டனில் அச்சாகும் பாலியல் நூல்களை இறக்குமதி செய்து தபால் வழியாக அனுப்பி விற்கும் தொழில் 20களில் தமிழில் ஆரம்பித்தது. சில ஆண்டுகளிலேயே அது மிகப்பெரிய தொழிலாக மாறியது. எஸ்.எஸ். வாசன் அந்தத் தொழிலில் மிகப்பெரிய வெற்றியை அடைந்த பின்னர்தான் ஆனந்த விகடனைத் தொடங்கினார்**

அடுத்த தலைமுறையில் இந்த பகற்கனவு எழுத்து இன்னும் சல்லிசாக ஆகிவிட்டதோ என்றுதான் ஐயப்படவேண்டியிருக்கிறது. சமீபத்தில் வண்ணநிலவனின் இரு நாவல்களை மீண்டும் வாசித்தேன். கடல்புரத்தில், கம்பாநதி. ஒருவகையான அற்பப்புனைவுகள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அவை ஒருகாலத்தில் இங்கே இலக்கியச்சூழலில் சப்புக் கொட்டி ரசிக்கப்பட்டிருக்கின்றன. நினைக்கையில் ஆச்சரியமே எழுகிறது. முன்னோடிகளின் எழுத்தில் அவர்களின் மொழித்தேர்ச்சியாலும் நுணுக்கமான மானுட அக அவதானிப்புகளாலும் கலையாக ஆன காமம்சார்ந்த பகற்கனவுத்தளன் இவர்களின் சில்லறை அனுபவங்களும் சூம்பிப்போன அழகுணர்வும் கொண்ட எழுத்துலகில் ஒருவகை சிறுமையெழுத்தாக நின்றுவிட்டிருக்கிறது. கள்ள உறவுகளைக் கண்காணிக்கும் ஓரக்கண் பார்வையாக அதை மாற்றிக் கொள்வதன் மூலமே அவர்கள் சுவாரசியத்தை தக்கவைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். உள்ளே செல்லாமல் தெருவில் நின்று பாதி திறந்த சன்னல் வழியாகப்பார்த்துவிட்டு கடந்துசெல்லும் எழுத்துக்கள் இவை.

அதிர்ஷ்டவசமாக இந்த ஜீரா இலக்கியச்சூழலில் எப்போதும் உரிய இடத்தில் வைக்கப்பட்டது. முதல் தலைமுறையில் புதுமைப்பித்தன் மட்டும் இந்தவகை பகற்கனவு எழுத்தைச் சமன் செய்தார். அடுத்த தலைமுறையில் சுந்தரராமசாமியும் அசோகமித்திரனும் ப.சிங்காரமும் கி.ராஜநாராயணனும் கு.அழகிரிசாமியும் ஜி.நாகராஜனும் பலகோணங்களில் இப்பகற்கனவுகளை உடைத்து திறந்து பரிசீலிப்பவர்களாக இருந்தனர்.அடுத்த தலைமுறையில் நீதி உணர்ச்சியுடன் பேசிய நாஞ்சில்நாடனும் அடித்தள மக்களின் குரலாக எழுந்த பூமணியும் அதை முன்னெடுத்தனர். தமிழ் இலக்கியத்தின் மையப்பெருங்குரல் புதுமைப்பித்தனிடமிருந்து மேலெழுந்தது நம் நல்லூழ்தான்.

மிக ஆர்வமூட்டும் ஒரு அவதானிப்பை நான் அடைந்தது புதுமைப்பித்தனின் வாசிப்புப்பழக்கம் பற்றி தொ.மு.சி.ரகுநாதன் சொன்னதைக் கேட்டபோது. புதுமைப்பித்தன் ஆங்கிலப்பாலியல் நூல்களை வாசிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே தமிழில் ஒன்று எழுதவும் செய்தார். அதை நண்பர்களிடம் தனிச்சுற்றுக்கு விட்டார். அதைப்பற்றி அவரது நண்பரான மீ.ப.சோமு சங்கடம் கொண்ட போது தமிழனுக்கும் போர்னோகிராபி வேணுமே ஓய் என்று சொல்லிச் சிரித்தார். புதுமைப்பித்தனின் விபரீத ஆசை போன்ற கதைகளில் கு.ப.ராஜகோபாலனும் வழிவந்தவர்களும் தொடக்கூட அஞ்சும் பாலியல் சித்தரிப்பு உள்ளது. அதாவது புனைவுக்குத்தேவை என்றால் எதையும் சொல்ல புதுமைப்பித்தனால் முடியும். சும்மா தொலைவில் நின்று சப்புக்கொட்டுவது அவருக்கு உடன்பாடல்ல.

தமிழில் புதுமைப்பித்தனின் காலகட்டத்தில்தான் பாலியல் எழுத்து அறிமுகமாகிறது. வாசிப்பு தொடங்கும் காலகட்டமும் அதுவே. லண்டனில் அச்சாகும் பாலியல் நூல்களை இறக்குமதி செய்து தபால் வழியாக அனுப்பி விற்கும் தொழில் இருபதுகளில் தமிழில் ஆரம்பித்தது. சில ஆண்டுகளிலேயே அது மிகப்பெரிய தொழிலாக மாறியது. ஆனந்தவிகடன் இதழின் அதிபர் எஸ்.எஸ்.வாசன் அந்தத் தொழிலில் மிகப்பெரிய வெற்றியை அடைந்தபின்னர்தான் ஆனந்த விகடனைத் தொடங்கினார். அவரே பின்னர் தமிழில் அத்தகைய பல நூல்களை எழுதியுமிருக்கிறார். அவற்றை அன்றைய கணக்கில் மிகப்பெரும் பணம் செலவுசெய்து வாங்கியவர்களை நம்மால் ஊகிக்கமுடியும். மரபின் கட்டுப்பாடுகளுக்கு ஒருபக்கம் ஆட்பட்டு மறுபக்கம் புதிய ஆங்கிலக் கல்வியால் வெளியுலகையும் அறிய நேரிட்டு அந்த இக்கட்டால் கடுமையான பாலியல் வறட்சிக்கு ஆளான படித்த நடுத்தர வர்க்கத்தினர்தான்.

> இன்று தமிழில் ஒரு சிறு சாரார் இணையத் தளங்களில் அவர்கள் பார்க்கும் பாலியல் காட்சிகளை முதிர்ச்சியற்ற சொற்களில் திரும்பப் புனைந்து இலக்கியம் என முன்வைத்து வருகிறார்கள். கொஞ்சமேனும் வாசிப்பு பழக்கமும் அதன் விளைவான முதிர்ச்சியும் கொண்டவர்களுக்கு இவை அசட்டுத் தனமாகவே தெரியும்

பின்னர் தமிழில் பாலியல் எழுத்து எப்போதும் இருந்துள்ளது. பிரபலமான சரோஜாதேவி வரிசை கீழ்மை எழுத்துகளை பள்ளிவாழ்க்கையின் ஒரு கட்டத்தில் அனைவருமே வாசித்து வந்திருப்பார்கள். எண்பதுகள் அந்தத் தளத்தில் பெரிய அலை நிகழ்ந்த காலகட்டம். ஒளிநாடா மூலம் வீட்டிலேயே சினிமா பார்க்கமுடியுமென்ற தொழில்நுட்ப வளர்ச்சி வந்ததும் நீலப்படங்கள் சாதாரணமாக ஆயின. அதன்பின் தொண்ணூறுகளின் இறுதியில் இணையம் நீலப்படங்களை எங்கும் கிடைப்பதாக ஆக்கியது. எல்லாவகையான நீலப்படங்களையும் பார்க்கமுடிந்தது. ஓரளவு கற்பனையும் வாசிப்பும் கொண்டவர்களுக்கு பாலியலெழுத்தும் காட்சிகளும் மிகமிக விரைவிலேயே சலித்துப்போயின.


இன்று தமிழில் ஒரு சிறுசாரார் இணைய தளங்களில் அவர்கள் பார்க்கும் பாலியல்காட்சிகளை முதிர்ச்சியற்ற சொற்களில் திரும்பப்புனைந்து இலக்கியம் என முன்வைத்துவருகிறார்கள். கொஞ்சமேனும் வாசிப்புப்பழக்கமும் அதன் விளைவான முதிர்ச்சியும் கொண்டவர்களுக்கு இவை அசட்டுத்தனமாகவே தெரியும். ஆனால் இன்றும்கூட கு.ப.ராஜகோபாலனின் எழுத்தில் இருந்து இன்பக்கிளுகிளுப்பைப் பெற்றுக் கொண்டவர்களின் வாரிசுகள் அதே மனநிலையின் வளர்ந்தவடிவில் நீடிக்கிறார்கள். பெரும்பாலும் கட்டுப்பாடுகள் நிறைந்த நடுத்தரக்குடும்பங்களில் இருந்து தொழில்கல்விகற்று பொதுவெளிக்கு வந்த ஒருவகை அசட்டு இளைஞர்கள் இவர்கள். பாலியல்மீறல்களை ஏதோ பெரிய சமூகப்புரட்சி என நினைத்து உத்வேகம் கொள்கிறார்கள். தங்கள் வீடுகளில் பேசிக்கொள்ள முடியாத ஒரு விஷயத்தை கதையில் வாசித்தால் மயிர்கூச்செறியும் முதிராமனங்கள். கொஞ்சம் தெருவில் நடந்து நான்கு குடிசைப்பகுதிகளைச் சுற்றிவரக் கூட சுதந்திரமில்லாத எளிய வாழ்க்கை வாழ்பவர்கள்.

இவர்களுக்காக எழுதப்படும் இன்றைய மென்பாலியல் எழுத்துக்களையும் நான் கு.ப.ரா மரபின் வரிசையில்தான் சேர்ப்பேன். எழுபதாண்டுகளுக்கு முன் கு.ப.ராவின் விஸ்வேஸ்வரன் கும்பகோணம் அக்ரஹாரத்தில் அடுத்தவன் மனைவியை ஆறடி தூரத்தில் தனியாகப்பார்த்து அடைந்த கிளர்ச்சியைத்தான் இவர்களின் புனைவுகளில்; விஸ்வா ஹாங்காங்குக்கு போய் சான்ட்விச் மஸாஜை பற்றி கேள்விப்பட்டு அடைகிறான். என்றுமுள நந்தமிழ் ஏக்கம்!

என்னுடைய தலைமுறையின் எல்லா எழுத்தாளர்களும் கு.ப..ராஜகோபாலன் உருவாக்கிய மனச்சிக்கலை முழுமையாகத் தாண்டிவந்தவர்கள் என்பதை ஆச்சரியத்துடன் காண்கிறேன். அந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது? இளமையில் நாங்களெல்லாருமே இந்த பகற்கனவை மாந்திக்களித்தவர்கள்தான். இதல்ல எழுத்து என எங்கோ உணர்ந்தோமா? வரலாறாக விரியாத ஒன்றை, உள்ளும் புறமும் கண்ணிகளாக வளராத ஒன்றை அற்ப எழுத்து என்று அறிந்தது என்னை இவர்களிடமிருந்து விடுதலை செய்தது. நான் அதற்கு தல்ஸ்தோய்க்கும் தஸ்தயேவ்ஸ்கிக்கும் பஷீருக்கும் புதுமைப்பித்தனுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(58ஆம் பக்கம் பார்க்க..)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
சூசை ஆனந்தன்

## வட பகுதிக் கடற்பரப்பில் மீறப்படும்

# கடற் சட்டங்களும் கடற்தொழில் கட்டளைகளும்


**முதற்கண் உள்ளூர் இழுவைப் படகுகளைத் தடை செய்வதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். அதை விடுத்து உள்ளூர் இழுவைப்படகுக் காரர்களை அனுமதித்துவிட்டு இந்திய இழுவைப்படகுகளைத் தடை செய்ய எண்ணுவது தீர்வாக அமையாது. உள்ளூர் மீனவர்களைக் கட்டுப் படுத்துவதன் மூலமே இந்திய இழுவைப் படகுகளைத் தடை செய் வதை உறுதி செய்ய முடியும்.**

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினை எப்போது தொடங்கியதோ அன்றிலிருந்து இந்திய மீனவ விவகாரமும் வட பகுதிக் கடற்பரப்பில் ஆரம்பமாயிற்று. இப்போது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதிலும் மீனவர் விவகாரம் முன் எப்போதுமுள்ளதையும் விட மோசமடைந்து விஸ்வரூபம் எடுத்து வேறு திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. பொதுவாக கடல்களில் மீனவர்கள் எல்லைகளைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிகழ்வுகள் - உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இருந்தபோதிலும், வட பகுதிக் கடற்பரப்பில் நிகழுகின்ற மோசமான அதாவது பலத்த உயிரிழப்புகளையும், சொத்திழப்புகளையும் ஏற்படுத்துகின்ற நிகழ்வுகள் போல வேறு எங்கும் நடைபெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டும் நூற்றுக்கணக்கில் மீனவர்கள் அவர்களது படகுகளுடன் கைது செய்யப்பட்டு சிறையிடப்படும் சம்பவங்களும் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான அரசியற் பிரச்சினையாக இது மாற வழிவகுத்திருக்கின்றது. மூன்று தசாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு மேலாக நீடித்துச் செல்லும் இப்பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்கு இந்திய மத்திய, மாநில அரசுகளினது அலட்சியப் போக்கு காரணம் என பலராலும் சுட்டிக் காட்டப்படுவதை அவதானிக்கலாம்.

ஒரு நாட்டினுடைய இறைமை, சுதந்திரம் மற்றும் கடல் வளங்கள் இவைகளைப் பாதுகாப்பதற்கே சர்வதேச ரீதியில் கடற் சட்டங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐ.நா சபையின் மேற் பார்வையின் கீழ் முக்கிய கருத்து நிலைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு 1982இல் கூடிய மூன்றாவது அமர்வில் புதிய சட்ட விதிகள் உருவாக்கப்பட்டன. இந்த வகையில் ஆள்புல எல்லை (Territorial Water) கரையிலிருந்து 12 மைல்கள் வரையிலும் அணித்தாயுள்ள எல்லை (Contiguous Zone) கரையிலிருந்து 24 மைல்கள் வரையிலும், பிரத்தியேக பொருளாதார வலயமும், சூழல் மாசாக்கல் தடை வலயமும் (Economic Exclusive Zone and Pollution Prevention Zone)கரையிலிருந்து 200 மைல்கள் வரையிலும் பிரகடனப்படுத்தப்பட்டன. இலங்கை அதன் அமைவிடம் மற்றும் அதன் அமைவு காரணமாக மேற் குறித்த எல்லைகளை வாய்ப்பாகக் கொண்டிருக்கின்றது. இலங்கைக்கு உரித்தான கடல்களின் பரப்பு ஏறத்தாழ 517000 km2 (ச.கி.மீ) ஆகவும் பரம்பியுள்ளன. ஆயினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒடுங்கிய பாரம்பரிய நீர்ப் பரப்பு 1974, 1976ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் காரணமாக அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படையில் எல்லைகள் (Indian - Sri Lankan Maritime Boundary) பிரிக்கப்பட்டன. 1976 ஒப்பந்தம் பிரகாரம் ஒரு நாட்டின் படகுகள் மற்றைய நாட்டின் எல்லைக்குள் பிரவேசித்து வளங்களைச் சுரண்டுவது தடுக்கப்பட்டது. ஆயினும் இந்திய மீனவர்கள் இந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றது எனக் கூறிக் கொண்டு இந்த ஒப்பந்தத்தை மீறி செயற்பட்டு வருகின்றனர். இந்திய மத்திய அரசு கச்சதீவு இலங்கைக்கு உரியது எனவும் எல்லைகளைத் தாண்டுவது தவறு எனக் கூறிக் கொண்டாலும் எல்லை தாண்டும் மீனவர்களைத் தடுத்து நிறுத்த எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




மேலும் இலங்கை கடற்றொழில் கட்டளை பிரகாரம் 2010ஆம் ஆண்டு முதல் இழுவை மடித் தொழில் (Bottom Trawl Fishing) முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தனியிழை, தங்கூசி வலைகளும் தடை செய்யப்பட்டன. ஆயினும் இந்திய இழுவைப் படகுகளும், நாட்டுப் படகுகளும் அத்துமீறி நுழைந்து இவ்விரு வகையான வலைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு கடற் சட்டங்களையும் கடற்றொழில் சார் சட்டங்களையும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து மீறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நன்கு தெரியும். அவ்வாறு தெரிந்திருந்தும் இந்திய மீனவர்கள் இந்த அரசுகள் கட்டுப்படுத்தத் தவறியிருக்கின்றன. பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் மேற்குறித்த விடயங்கள் இந்திய மீனவருக்கு இலங்கை வடபகுதி மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு, மாற்றுத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனையும் கூறப்பட்டது. இந்திய மீனவர்கள் இதனைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இழுவை மடிகளைக் குறித்த காலப்பகுதியினுள் நிறுத்துவதாகவும் தெரிவித்திருந்தனர். ஆயினும் இதுவரையில் அவைகள் நிறைவேற்றப்படவில்லை.

மத்திய அரசோ, மாநில அரசோ பாதிப்புறும் இந்திய மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வாய்ப்புகளையோ அல்லது எல்லை மீறாது இருக்கும் படியான எந்தவொரு உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்காது. அப்பாவி மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அனுபவிக்கும் துன்பங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆகவே, இப்போதுள்ள பதற்றமான சூழ்நிலைக்கு மத்திய, மாநில அரசுகளே முழுப்பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்திய தரப்பில் பாதிப்புறும் மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதுடன், கடல் எல்லைகளைத் தாண்டாதவாறு அவர்களைக் கட்டுப்படுத்தி வைப்பதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முடியுமே ஒழிய பாரம்பரிய நிலப் பரப்பு எனக் கூறிக்கொண்டு பாரம்பரிய உரிமைகளை அனுபவிக்க இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடிக்க அனுமதி கோருவதன் மூலம் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

> **வட பகுதி கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகள் மூலம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றியே கவலைப்படுகின்ற நாம் வட பகுதி மீனவர்கள் மீன் பிடிச்சட்டங்களையும் நீதிமன்ற தீர்ப்புக்களையும் உதாசீனம் செய்து வரும் நிகழ்வுகள் அண்மைக்காலமாக வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்து வந்துள்ளமை குறித்து கவலைக்கொள்வதாக தெரியவில்லை.**

### மீன்பிடிச்சட்டங்களையும் நீதிமன்றத் தீர்ப்பினையும் உதாசீனம் செய்யும் வடபகுதி மீனவர்கள்

வடபகுதி கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகள் மூலம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றியே கவலைப்படுகின்ற நாம் வடபகுதி மீனவர்கள் மீன்பிடிச்சட்டங்களையும், நீதிமன்றத் தீர்ப்புகளையும் உதாசீனம் செய்துவரும் நிகழ்வுகள் அண்மைக் காலங்களாக வடபகுதிக்கடற்பரப்பில் அதிகரித்துள்ளமை பற்றி எவரும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையில் சில மீன்பிடி முறைகள் சட்டபூர்வமற்றவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் தங்கூசிவலைகள் (Mono filament Nets), முப்புரிவலைகள், மொக்ஷி வலைகள், டைனமெட் வெடிவைத்துப் பிடித்தல், நஞ்சூட்டுதல், ஈட்டிகள் கொண்டு மீன்பிடித்தல் போன்றனவும் முக்கியம் பெறுகின்றன.

### இழுவை மீன்பிடி (Trawl nets)

2010ஆம் ஆண்டில் இழுவை மீன்பிடித்தொழிலும் (Trawl nets) தடைசெய்யப்பட்டிருந்தது. ஆயினும் வடபகுதியில் பேசாலை, பள்ளி முனை, வல்வெட்டித்துறை, குருநகர் ஆகிய இடங்களில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகள் வடபகுதிக்கடற்பரப்பில் பயன்படுத்தி வருகின்றனர். வாக்கு வேட்டையை இலக்காகக்கொண்டு வடக்கு அமைச்சர்களின் செல்வாக்குடன் கொழுத்த சம்மாட்டிகள் இவ்வலைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். திணைக்கள அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் அவர்களால் இவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது தவிக்கின்றனர். வடக்கிற்கு வருகைதருகின்ற மீன்வளத்துறை அமைச்சரோ மேடையில் ஆறுபோலப் பேசுவார். கீழே இறங்கியதும் சொன்னதெல்லாம் போச்சு என்ற பாணியிலேயே நடந்து கொள்கின்றார். அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காக தங்கூசி வலைகளைப் பயன்படுத்துகின்ற சில பிழைப்பூதிய மீனவர்களின் வலைகளைப் பறித்து அவர்களுக்கு தண்டப்பணம் அறவிடுகின்ற போது கொழுத்த இழுவைப்படகு முதலாளிகள் மட்டும் தப்பித்துக் கொள்வது வியப்பாகவே இருக்கின்றது.

இழுவை மடித்தொழிலை மேற்கொள்வோர் இந்திய இழவைப்படகுகள் வருகை தருகின்ற தினங்களிலேயே தாமும் பயன்படுத்துவதாகவும், இந்தியப் படகுகள் இத்தொழிலை நிறுத்தாதவரை தாமும் நிறுத்தப் போவதில்லை என குதர்க்கம் பேசிவருகின்றனர்.கொழுத்த பணம் சம்பாதிக்கும் இவர்களுக்கு இந்திய இழுவைப்படகுத் தொழிலைத் தடைசெய்ய இஷ்டமில்லை. இத்தகையோரிடம் கடலட்டைகள், சங்கு, மீன் மற்றும் இறால் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளைக் கொண்டே இந்திய இழுவைப் படகுகளைத் தடை செய்யும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவைத்தமை கேலிக்குரிய ஒன்றாகவும் அர்த்தமற்ற ஒன்றாகவும் கொள்ளப்படுகின்றது.

முதற்கண் உள்ளர் இழுவைப்படகுகளைத் தடைசெய்வதற்கான உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான நடவடிக்கைகள் எடுக்கப்படல் அவசியம். அதைவிடுத்து இழுவைப் படகுக்காரர்களை அனுமதித்துவிட்டு இந்திய இழுவைப்படகுகளைத் தடைசெய்ய எண்ணுவது தீர்வாக அமையாது. உள்ளர் மீனவர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமே இந்திய இழுவைப்படகுகளைத் தடைசெய் வதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

## கம்பிப் பொறிவலை (Set nets)

இழுவை மீன்பிடித் தொழில் தவிர 10 மீற்றருக்கும் நீளமான உலோகக் கம்பிகள் (Galvanized iron) அன் ரனா பைப் மற்றும் கூரான மண்டாக் களைக்கொண்டு களப்புக்கள் தவிர்ந்த தூரக்கரையோரப் பகுதிக ளில் அமைக்கப்படும் அகலச்சிறகு வலை எனப்படும் பெரியளவிலான கம்பிப் பொறி வலைகளினால் பெருந்தொகையான சிற்றளவு மீன் பிடியாளர்கள் முக்கியமாக படுப்பு வலை மற்றும் கரைவலைத் தொழி லில் ஈடுபடும் மீனவர்கள் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர். கூரான உலோகக் கம்பிகளினால் கட லில் பயணம் செய்யும் படகுகள் உடைவதுடன், அடித்தள கற்பார் களும் சேதமடைந்து கடலின் அடித் தளமும் பாதிப்புக்குள்ளாகின்றன. இத்தகைய ஆபத்தான மீன்பிடி முறைகளைத் தடைசெய்யக்கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றபோது, அது நீதிமன்றம் வரை சென்று பின்னர் மன்னார் கடற்றொ ழில் பணிப்பாளரின் அறிக்கைப் பிரகாரம் மன்னார் நீதிமன்று 05.04.2013 இல் இத்தகைய மீன்பிடி முறையைக் குறித்த கடற்பரப்பில் மேற்கொள்ளத் தடைவிதித்து தீர்ப்ப ளித்திருந்தது. எனினும் மீனவர்கள் சிலர் நீதிமன்றத் தீர்ப்பினையும் உதா சீனம் செய்து அரசியல்வாதிகளின் துணையுடன் தொடர்ந்தும் இத்த கைய ஆபத்தான முறைகளைக் கடற் பரப்பில் மேற்கொண்டு வருகின்ற னர். இத்துடன் டைனமெட் வெடி வைத்துப் பிடித்தலும் தாராளமாக மன்னார் கடற்பரப்பில் சிலரால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மரக்குற்றிகள், கொங்கி றிற் தூண்கள், கார்ச்சட்டங்கள் போன் றவற்றை கடலில் அமிழ்த்தி அதில் மீன்களை குவியச் செய்து அதில் டைனமெட்டுக்களை வெடிவைத்து மீனைப்பிடிக்கின்ற சம்பவங்களும் தொடர்கின்றன. இதனால் கரையோர கண்டற்தாவரங்கள் முற்றாக அழிவ டைந்து செல்வதுடன் கடலில் போடப்படும் படுப்பு வலைகளுக் கும் கடும் சேதங்களும் உண்டாகின் றன.

வடபகுதியில் இவ்வாறு தடை செய்யப்பட்ட உபகரணங்களையும், இழுவைமடிகளையும் எமது பகுதி மீனவர்கள் சிலர் பயன்படுத்தி வள அழிவிற்கும், சிற்றளவு மீன்பிடி யாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்த லையும் ஏற்படுத்தி வருவதையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். கடற்றொழில் அமைச்சு மத்திய அர சின்கீழேயே வருகிறது. இதனால் வடபகுதியில் நிகழும் இத்தகைய சட்டபூர்வமான மீன்பிடிமுறை களைத் தடுத்துநிறுத்துவதற்கான எந் தப்பொறிமுறைகளும் இல்லை. அமைந்துள்ள வடமாகாண சபையோ மீன்பிடிக்கும் தமக்கும் எது வித சம்பந்தமும் கிடையாது என்ற பாணியிலேயே இயங்கி வருகின்றது. மீன்பிடிக்கென ஒரு அமைச்சர் மாகா ண சபையில் இருந்தபோதும் அவ ரால் எதுவித பயனும் இதுவரை கிட் டியதில்லை என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்க ளையும் வளச்சுரண்டல்களையும் கட் டுப்படுத்தவதற்கு முன்னர் வடபகுதி மீனவர்கள் தமது முறையற்ற செயற் பாடுகளைக் கட்டுப்படுத்துவது அவ சியம். இல்லையெனில் பேச்சுவார்த் தைகளில் அடையப்போவது எதுவு மில்லை.

## மீனவர் பேச்சுவார்த்தை

இலங்கை, இந்திய மீனவர்கள் பேச் சுவார்த்தை ஜனவரி நடுப்பகுதியில் டில்லி மற்றும் சென்னையில் நடை பெற்று முடிவடைந்துள்ளது. பரஸ் பரம் மீனவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இலங்கைச் சிறையிலிருந்து 250க்கும் அதிக மான மீனவர்களையும், அவர்களது படகுகளையும் இலங்கை அரசு விடு வித்திருந்தது. மீனவர்களை விடு வித்த கையுடன் இம்மாத பிற்பகுதி யில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை யில் தன்னைக்காப்பாற்றும்படி இலங்கை இந்தியாவைக் கெஞ்சிக் கேட்டுள்ளது. மீனவர் விடுதலைக் கும், இலங்கையின் கெஞ்சுதலுக்கும் தொடர்பு இல்லாமல் இல்லை. இழு வைமடித் தொழிலைத் தடைசெய்வ தற்கான நடவடிக்கைகள் தொடர்பாக மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் தீர் மானிக்கப்படுமென செய்திகள் தெரி விக்கின்றன. இதற்கு இடையில் பேச் சு வார்த்தையில் கலந்து கொண்டோர் நாடு திரும்பும் முன் 38 மீனவர்க ளும் பின்னர் 49 மீனவர்களுமாக மொத்தம் 87பேர் வடபகுதி கடற் பரப்பில் இலங்கைக் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆயினும் மார்ச்சில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இந்தியா, இலங்கை தொடர்பாக எடுக்கும் முடிவில் தான் பேச்சுவார்த்தை எங்கு போய் முடி யும் என்பது தெரியவரும்.

வழமையாக பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் முன்னரே கலந்து கொண்ட வடபகுதியைச் சேர்ந்த மீனவப்பிரதிநிதிகள் எவரும் இறுதி யாக நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு அழைத்துச்செல்லப்படவில்லை. முக்கியமாகப் பங்குபற்ற வேண்டிய யாழ்.மாவட்ட கடற்றொழில் பணிப் பாளர் கூட அழைத்துச் செல்லப்பட வில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. தமிழ்த்தேசிய ஆதரவாளர்கள் என்ற ஒரே காரணத்திற்காக முன்பு கலந்துகொண்ட மீனவர்களால் தெரி வுசெய்யப்பட்ட சங்கத்தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் புறமொதுக்கப் பட்டு அரசின் ஆதரவாளர்களும், முக்கியமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் (நகரசபை, மாகாண சபை) வெற்றிலைச் சின்னத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட்டு படுதோல்வியடைந்த, மீன் மற்றும் கடலட்டை, சங்கு ஆகிய கடலுணவு வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் மீன் வியாபாரிகள் சிலரும், அரசினால் திட்டமிட்ட ரீதியில் அழைத்துச்செல்லப்பட்டு மூளை சலவை செய்த பின்னர் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைக்கப்பட்டுள்ளனர். இதில் வேடிக்கை என்னவெனில், இழுவை மடிகளின் அடிப்படையே விளங்காத ஒருவரே இலங்கைப் பிரதிநிதிகளுக்கு தலைமை வகித்தார் எனவும் சுங்கன் மீனுக்கும், சுறா மீனுக்கும் வித்தியாசம் தெரியாத கொழும்பு அரசுசார் தமிழர் ஒருவரும் இதில் பங்குபற்றியதாகவும் இறுதிப் பேச்சுவார்த்தையில் பங்குகொண்ட ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. குப்பாடித்தனமான அரசியல் கலந்த இவ்வாறான ஏற்பாடுகள் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வைத் தரப்போவதில்லை. ■

---

**(64ஆம் பக்கத்தொடர்ச்சி..)**

இவரது எழுத்தில் தமிழகத்து எழுத்தாளர்களான லக்ஸ்மி, ரமணிச் சந்திரன் போன்றோரின் சாயல் இருப்பதாகத் தெரிகிறது. இதனை இவரது நூல்களின் தலைப்புகள் உறுதி செய்கின்றன. இவரது படைப்புலகம் காட்டும் பண்பு இரசனைமிக்கது. சாதாரண வாசகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் மயக்க நிலையில் வைத்திருக்கும் பண்பு கொண்டது. இந்தச் சுவையின் வார்ப்புக்காகவே எழுத்து நடை அமைந்துள்ளது. எவரையேதும் சிக்கலுக்கும் சிரமத்திற்கும் உட்படுத்தாமல் வெகுஜன வாசிப்பு சார்ந்த மரபிற்கேற்ப இயங்கியுள்ளார். ஒரே மூச்சில் வாசிக்கும், மேலும் ஆர்வத்தைத் தூண்டும் நுட்பம் தான் இவரது படைப்புகளில் இழையோடுகிறது. வெகுஜன வாசிப்பிற்கான உள்ளீடுகளை வழங்குவதில் ஒருவித சலிப்புத் தன்மையோடு இயங்கியுள்ளார். பாலேஸ்வரி வளர்த்த இந்தச் செல்நெறி காத்திரமான இலக்கிய வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் பண்பு கொண்டதெனலாம். இவரால் முற்றிலும் ஒரு வலுவான வெகுஜன பண்பாட்டினை விரிவாக்க முடிவதில்லை. அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நுட்பங்களையும் அறிந்திருக்கவில்லை.

ஆனால், நமது தமிழ்ச் சூழலில் வெகுஜன வாசிப்பிற்கு இவரது எழுத்துகள் பயன்பட்டுள்ளனவா? இலக்கிய மதிப்பீடுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தியுள்ளதா? இவை குறித்தெல்லாம் இனிமேல் தான் நாம் மீள் மதிப்பீடு செய்ய வேண்டும். குறிப்பாக கல்கி, லக்ஷ்மி போன்ற எழுத்துப் பரம்பலை தமிழகச் சூழலில் உருவாக்கிய வாசிப்புப் பரவலாக்கம் போன்ற நிகழ்வுக்குச் சமாந்தரமாக பாலேஸ்வரியின் எழுத்து முயற்சிகள் ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன என்று கேள்வி எழுப்பினால் நாம் இலகுவாக பதில் கண்டுவிட முடியாது. வெகுஜன எழுத்துகளைப் படைப்போரும் காத்திரமான படைப்பாளிகள் போன்று நடை, உத்தி, அமைப்பு முதலியன பற்றிச் சிந்திப்பதுண்டு. இவ்வாறான சிந்திப்பு பாலேஸ்வரியிடம் தொழிற்பட்டுள்ளதா என நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பொதுமக்கள் ருசியின் ஆக்கிரமிப்பிற்கும் அதன் பணிப்பிற்கும் ஏற்ப பாலேஸ்வரி இயங்கியுள்ளார். இந்த இயக்கம் எவ்வாறு சாத்தியப்பட்டுள்ளது? அதன் கூறுகள் என்ன? நாவல், சிறுகதை முதலான வடிவங்களின் தாற்பரியத்தைப் புரிந்துகொண்டு அதன் சிறப்புக்கு வளம் சேர்க்கும் வகையில் பாலேஸ்வரி கையாண்டுள்ள அல்லது தன்னளவில் கைக்கொண்டுள்ள செய்முறைகள் ஏதாவது உண்டா? தனித்துவமான இனங்காண்பதற்கான சாத்தியப்பாடுகள் உண்டா? இதுபோன்ற கேள்விகளுக்கும் நாம் பதில் காணத் தான் வேண்டும்.

ஈழத்துத் தமிழிலக்கியச் சூழலில் தொடர்ந்து இயங்கிய பெண் எழுத்தாளர்களுள் பாலேஸ்வரி முக்கியமானவர். ஆகவே, இவரது படைப்புலகம் வெளிப்படுத்தும் கலைச் சாத்தியப்பாடுகள் பற்றிய நிதானமான பார்வைகளை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். இவரது இறப்புக்குப் பின்னராவது இவரது படைப்புகள் சார்ந்த உரையாடல்களுக்கான களங்களை திறந்து விடுவது அவசியமாகிறது. ■

---


**(53ஆம் பக்கத்தொடர்ச்சி..)**

இன்றைய எழுத்தில் நேரடியான ஆய்வுநோக்குடன் அல்லது நுணுக்கமான அங்கதத்துடன் அல்லது விரிவான வரலாற்றுப்பார்வையுடன் ஆண்-பெண்ணுறவைப் பார்க்கும் பார்வை நிகழ்ந்திருப்பது ஓர் இலக்கியச் சாதனை என்று ஐயமில்லாமல் சொல்ல முடியும். கோணங்கி, சுரேஷ் குமார இந்திரஜித், யுவன் சந்திரசேகர், எஸ்.ராமகிருஷ்ணன், பெருமாள்முருகன் என ஒவ்வொரு புனைகதையாளரும் ஒவ்வொரு வகையில் அதைக் கையாள்கிறார்கள். ஓரக்கண் பார்வையின் அற்பத்தனம் கொண்ட எழுத்தாளர் என எவருமில்லை.


இன்றைய இளம் எழுத்தாளர்களில் ஆண்-பெண் உறவை எழுதுபவர்களில் முக்கியமானவர்களான வா.மு. கோமு, கீரனூர் ஜாகீர் ராஜா, எஸ். செந்தில்குமார், லட்சுமி சரவணக்குமார், சந்திரா என அனைவரிலும் உள்ளது இந்த விடுதலை அளிக்கும் அழகுகளும் சிக்கல்களும் என்று சொல்லமுடியும். குறிப்பாக வா.மு.கோமு. அப்பட்டமான பாலியலெழுத்தின் உதாரணமாகச் சொல்லப்படக்கூடியவர். ஆனால் அது பாலியல் மீதான ரகசிய அரிப்பாக அல்ல, அதை ஒரு மானுட நிலைமையாகக் கண்டு ஆராயும் கூர்மையாகவே அவரில் வெளிப்படுகிறது. கு.ப.ராஜகோபாலன் முதல் வா.மு.கோமு வரையிலான ஒரு கோடு சென்ற முக்காம் நூற்றாண்டில் நம் அகம் வளர்ந்து வந்ததன் வரைபடமாக அமையும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் பரவல்



மயூரா



# காதல் தோல்வியின் குறியீடு தேவதாஸ் நாகேஷ்வரராவ்

2014 ஜனவரி 22 அன்று தனது 91ஆவது வயதில் நடிகர் நாகேஸ்வரராவ் காலமானார். இவர் தெலுங்கு சினிமாவின் தூண்களில் ஒருவராகக் கருதப்பட்டவர். இன்னொரு தூணாகக் கருதப்பட்டவர் என்.டி.ராமராவ். கடந்த 75 வருடங்களாக சினிமாத்துறையில் அனுபவம் கண்டிருந்த நாகேஸ்வரராவ் பாணியே 'ரொமான்டிக் ஹீரோ' தான். தேவதாஸ் தெலுங்கிலும், தமிழிலும் வெளியாகி மிகப்பெரிய வெற்றியையும் அங்கீகாரத்தையும் பெற்றது. தெலுங்கு சினிமாவின் சோக மன்னனாகவும் நாகேஸ்வர ராவ் பெயர் பெற்றார்.

ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் 1923 இல் பிறந்தவரான நாகேஷ்வரராவ் துளியும் சளைக்காமல் பாடுபட்டு வெற்றியின் விளிம்பை மிக அநாயாசமாகத் தொட்டவர். இவர் அதிகமாகப் படிக்காதவர். இவரது தோற்றமும் அப்படியொன்றும் பார்ப்பவரை அசத்தும் ரகமும் இல்லை. பாடல்களுக்கு ஒரு தேர்ந்த நடனக்காரருக்கு உள்ள நளினமும் சரளமும் இவருக்கு வாய்த்ததில்லை. ஆனால், நடைமுறை சார்ந்த அறிவும் அதனைச்கச்சிதமாக வெளிப்படுத்தும் பாங்கும் உடல் மொழியும் இவரது பலம் என்று கூறலாம். இதுதான் சாமானிய மக்களைப் பெருந்திரளாக தன்னை நோக்கி ஈர்க்க இவருக்கு உதவியது.

அந்தக் காலத்தில் நடிப்பதற்கு பெண்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளால் ஆண்களே ஸ்திரி பார்ட் பாத்திரங்களில் நடித்தனர். ஆரம்பத்தில் சிவாஜியும் பெண் வேடங்கள் மூலம் தான் புகழ்பெற்றவர். நாகேஸ்வரராவும் இத்தகைய நாடகப் பின்புலம் கொண்டவர். ஆரம்பத்தில் இவரும் பெண்வேடங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். இந்த அனுபவப் பயிற்சி ஒரு நடிகருக்கான தகுதியைத் தான் இவரிடம் வளர்த்தது. தனது 17ஆவது வயதில் 'தர்மபத்தினி' (1941) என்ற தெலுங்குப் படத்தில் கதாநாயகனுக்கு நண்பனாக நடித்தார். ரயில்வே நிலையம் ஒன்றில் நாகேஸ்வரராவைப் பார்த்த இயக்குநரும் தயாரிப்பாளருமான கண்டசாலா (இவர் இசையமைப்பாளர் அல்ல. இப்படத்தில் இசையமைப்பாளர் கண்டசாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நடிகராகவும் கோரஸ் பாடக ராகவும் அறிமுகமானார்) தனது 'சீதா ராம ஜனனம்' என்ற படத்தில் ராமர் வேடத்தில் இவரை நடிக்க வைத்தார். இப்படம் 100 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. இதன் பின்னர் இவர் தெலுங்கு, தமிழ் என்று பல படங்க ளில் நடித்துப் புகழ்பெற்றார்.

'என்னை கண்டசாலா பலராமய்யா மட்டும், அன்று விஜயவாடா ரயில் நிலைய பிளாட்பாரத்தில் பார்த்திருக் காவிட்டால், இன்று நான் எங்கே இருந்திருப்பேன் என்பது யாருக்கும், ஏன் எனக்கே கூடத் தெரியாது' என்று நாகேஸ்வர ராவ் அடிக்கடி சலிக்கா மல் சொல்லிக்கொள்வார். இவர் தெலுங்கு, தமிழ் உட்பட பலமொழிக ளில் 250 படங்களுக்கு மேல் நடித்து இரண்டு நந்தி விருதுகள், தாதாசா கேப் பால்கே விருது, திரைத்துறை யின் சாதனைக்காக இந்திய அரசு வழங்கும் கௌரவமிக்க பத்மவிபூ ஷண் விருது முதலான பல்வேறு உயர் அங்கீகாரங்களைப் பெற்றவர்.

தெலுங்கு சினிமா இயக்குநர்க ளான குடவள்ளி ராம பிரம்மம் முதல் தாசரி நாராயணராவ் வரையிலான பல முத்திரை பதித்த சினிமா இயக்கு நர்களின் படங்களில் நடித்தவர். இந்த இயக்குநர்களின் படங்கள் வசூ லில் சாதனை படைக்க இவரும் ஒரு முக்கியமான காரணமாக இருந்துள் ளார். சென்னைவாசியாக பலவரு டங்கள் இருந்த நாகேஷ்வரராவ், தனது உற்ற நண்பரும் ஆந்திரப்பிர தேசத்தின் முன்னாள் முதல்வருமான எம்.சென்னா ரெட்டிக்கு அருகில் வசி க்க வேண்டும் என்ற விருப்பத்திற் காக ஹைதராபாத் சென்று குடியேறி னார். அவரைப் பின்தொடர்ந்து சென் னையை விட்டு ஹைதராபாத்தில் குடியேறிய என்.டி.ஆர், ராமநாயுடு போன்றவர்கள் ராமகிருஷ்ணா சினி ஸ்ரூடியோஸ் மற்றும் ராமநாயுடு ஸ்ரூடியோஸ் போன்றவற்றைத் தொடங்கினர். இதனால் சென் னையை மையம் இட்டு இருந்த தெலுங்கு சினிமா ஹைதராபாத்திற்கு ஒட்டுமொத்தமாகக் குடியேறியது. ஹொலிவுட் போல ரொலிவுட் என்று தெலுங்கு சினிமா அழைக்கப்பட

இவரும் காரணமாக இருந்தார்.

உலக நாடுகளைச் சுற்றிப்பார்ப்ப தில் ஆர்வம் உள்ளவராக இருந்த நாகேஷ்வரராவ் நாகர்ஜுனா என்ற நடிகரையும் அவரது பேரன் நாகர் சைத்தனியா என்ற நடிகரையும் தனது பெருமையைப்பேசும் சின்னங்களாக சினிமாத்துறைக்கு விட்டுச் சென்றுள் ளார். காதல் தோல்வியால் துவண்டு 'உலகே மாயம் வாழ்வே மாயம்' என்று பாடும் தேவதாஸ் காதல் தோல்வியின் குறியீடாக மாற்றங்



கண்டது. தமிழ் சினிமாவின் காதல் என்று தனியாக ஆராயத் தொடங் கும்பொழுது தேவதாஸ் - நாகேஸ் வரராவ் ஏற்படுத்திய தாக்கம் புரியும்.

ஐம்பதுகளில் இருந்து தான் காத லுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்கள் தொடர்ச்சியாக வர ஆரம் பித்தன. அப்போது இந்தியா விடு தலை அடைந்து விட்டது. அந்நிய ஆக்கிரமிப்பு போன்ற கருத்துகளுக்கு இடமிருக்கவில்லை. நாட்டின் பொரு ளாதாரம் மேம்பாடு அடைவது, ஜன நாயக மரபைத் தோற்றுவிப்பது, சுய தேவையை நோக்கி முன்னேறுவது போன்றவற்றின் ஊடாக தனிமனிதன் பற்றிய எண்ணங்கள் மேற்கிளம்பு கின்றன. நாடு, சமூகம், பண்பாடு ஆகியவற்றைப்போலவே தனிமனி தனும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்ற சிந்தனை வேரூன்றத் தொடங் குகின்றது. இதன் தாக்கம் இலக்

கியம், பத்திரிகை, சினிமா ஆகியவற் றின் மீது படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றது. இலக்கியத்தில் தனிமனித னின் குழப்பங்கள் சமூகத்திற்கும் தனிமனிதருக்குமான உறவுகள் அந் நியமாதல்கள் பேசு பொருள்களாக இடம்பெறத் தொடங்கின. பத்திரிகை நாடகம் ஆகியவற்றிலும் இந்தப் போக்குகள் தாக்கம் செலுத்தியது.

இந்நிலையில் வெகுஜனத்தை நோக்கிய ஊடகங்கள் வாசகர்களை, பார்வையாளர்களை கேளிக்கைக்குட் படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின. இதுவரை கதையாடல் கள் காவியத்தின் நிழல் படிந்தவை யாகவே இருந்தன. இவற்றிற்கு வெகுஜன ஈர்ப்பு குறைவாக இருந் தது. எனவே 'மெலோடி ராமா' என் கிற கதைப்பாணி புதிய அவதாரம் - இந்திய அவதாரம் கொள்ளவேண் டிய அவசியம் உணரப்பட்டது. இது இந்தியா முழுவதற்குமே பொருத்த மான நிலையாகும். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நிகழ்வுகள் முன்னோடியாக நிகழ்ந்திருப்பினும் ஒரே தாவலில் இந்திய மெலோடி ராமாவை உருவாக்கிய படைப் பென்று சரத் சந்திர சட்டர்ஜியின் தேவதாஸைக் கூறவேண்டும்.

முதன் முதலாக தனது விருப்பு வெறுப்புகளுக்காகவே ஒரு தனிமனி தன் வாழ்ந்து சாவதை தேவதாஸ் மூலமாகப் பார்த்தது இந்திய சினிமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத் சந்திர சட்டர்ஜி தேவதாஸை 1917இல் நாவலாக எழுதினார். மௌனப்படக் காலத்திலேயே இது திரைப்படமாக வந்தது. ஆனால் பேசும் படமாக 1937 இல் வங்காளத்தில் இது பெரும் வெற்றியைப் பெற்றது. தேவதாஸ் நாடகமாக மேடையேற்றப்பட்டு பின்னர் படமாக வில்லை. இது நேராக நாவலில் இருந்து திரைப்படமாகியது. இதனால் இந்திய மெலோடி ராமாவில் நாவல்த்தன்மை தானாகவே ஏற்பட்டு விட்டது. தமிழிலும் தெலுங்கிலும் தேவதாஸ் ஒரே நேரத்தில் வேதாங்கம் ராகவைய்யா இயக்கத்தில் 1952 இல் வெளியாகி பெரும் வெற்றி பெற்றது. பலமுறைகள் படமாக்கப்பட்ட இந்திய நாவல் என்றால் அது தேவதாஸ் தான்.

தமிழ் சினிமாவிலும் தேவதாஸ் காதல் படங்களுக்கான முன்னோடியாக விளங்குகின்றது. தமிழில் காதல் இலக்கியம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. நமது அகத்திணை இலக்கியங்களை உதாரணமாகக் கொள்ளலாம். சங்க இலக்கிய காதல் கவிதைகளின் சிறப்பை நாம் வெகுவாக உணர முடியும். திரைப்படச் சூழலில் இந்த இலக்கிய உணர்வும் வெளிப்பாடும் எவ்வாறு மடைமாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது என்பதற்கு 'தமிழ் சினிமாவில் காதல்' பற்றி நாம் விரிவாக நோக்கும் பொழுது உணர்ந்துகொள்ளலாம்.

பொதுவாக காதல்களுக்காக பெண்கள் ஏங்குவது, வஞ்சிக்கப்படுவது, காதலில் ஆண்களைவிட மனமாற ஈடுபாடுகள் கொள்வது என்றெல்லாம் இருந்தாலும் திரைப்படக் காதல் ஆண்மயப்பட்டதாகவே உள்ளது. காதலில் வெற்றி, தோல்வி என்பது ஆணுடைய முடிவாக உள்ளது. இந்தப் பின்புலம் தமிழ் சினிமாவிலும் நிலைபேறாக்கம் கண்டது. திரைப் படத்தில் காதல், காதலர்களுக்கிடையே வேரூன்ற ஆரம்பித்த உடனேயே அதற்குத் திருமணம் என்கிற வேலி போட வேண்டியுள்ளது. காதல் ஆட்டம், பாட்டம் என்பதை மூட்டைக்கட்டி விடுகிறது. திருமணத்தை எதிர்நோக்காது காதல் அனுபவத்தை மட்டும் வைத்து இதனாள் வரை ஒரு தமிழ்ப்படம் கூட வெளிவரவில்லை. 'காதல்' திருமணத்தை நோக்கியே நகரத் தொடங்குகின்றது. திரைப்படத்தில் காதல் சிறிது நேரம் பொழுது போக்காகவும் பெருவாரியான நேரம் பிரச்சினையாகவும் வெளிப்படுகிறது. காதலிப்பவனை தனிமனிதனா க்கி சுற்றியுள்ள சமூகம் அவனை முறியடிக்க விளைகிறது. தமிழ்ப்படத்தில் காதலிக்கத் தொடங்கியபிறகு தனிமனிதன் தோன்றத் தொடங்கினான். இது இந்திய சினிமாவிற்கும் பொருந்தும்.

இந்தப் படத்தில் காதல் தோல்வி காரணமாக தேவதாஸ் தன்னையே அழித்துக்கொள்ள விளைகிறான். இவனுடன் நெருக்கமான ஒவ்வொருவரும் பரிதாபமான முடிவை நோக்கிப் போகிறார்கள். ஒரு தனிமனிதனின் அழிவினால் கதையில் வரும் அனைவரது வாழ்வும் வீணாய்ப் போவதை தேவதாஸ் படம் காவிய சோகத்துடன் விபரிக்கிறது. மெலோடி ராமாவை சினிமாவிற்கு அழைத்து வந்த முக்கிய படைப்பாக தேவதாஸ் விளங்குகின்றது. இந்தப் படம் ஏன் மக்களைப் பெருவாரியாக ஈர்த்தது. இதற்கு அழகியல் காரணங்களைவிட உளவியல் காரணம் தான் அதிகம். காதலில் ஈடுபடும் பெருவாரியானவர்கள் தேவதாஸைப் போலவே பெற்றோர் குறுக்கிட்டால் திருமணம் வரை செல்வதில்லை. இந்த அளவில் தேவதாஸின் நிலையுடன் இவர்கள் தங்களைப் பொருத்திப் பார்க்க முடிகிறது. ஆனால் இவர்கள் எச்சரிக்கையாக வாழாமல் இருந்திருந்தால் தேவதாஸுக்கு நிகழ்ந்த அபாயகரமான முடிவிற்கு ஆளாகியிருப்போம் என்று கற்பனையில் தேவதாஸின் வாழ்க்கையை தங்களது வாழ்க்கையாகப் பார்த்து துயரமடைகிறார்கள். கடைசிவரை காதலின் நினைவாகவே வாழ்ந்து தன்னைத் தானே வரித்து மாய்ந்த தேவதாஸ் மீது குற்ற உணர்வுடன் இரக்கமும் அன்பும் கொள்கிறார்கள். தேவதாஸ் படத்தின் கதாப்பாத்திரங்கள் பலவற்றையும் நாம் இவ்வாறு தான் புரிந்துகொள்ள முடிகிறது.

காதலித்தாலும் கலியாணம் செய்யத் தவறிய தேவதாஸ் மீது பார்வதி சற்றும் கோபம் கொள்வதில்லை. அவளுக்குத்தெரியும் திருமணம் சமூகத்தால் நிச்சயிக்கப்படும் ஒன்று என்று. சினிமாக் கதாநாயகிகள் அனைவரும் பார்வதியின் வார்ப்புகள். தம் இஷ்டப்படி வேறொரு பெண்ணை மணப்பவனை இவர்கள் வஞ்சகனாகவே எண்ணுகிறார்கள். மேலும் திருமணமானதுடன் தனிமனிதனின் ஆசாபாசங்களை ஒதுக்கி விட்டு புகுந்தவீட்டின் அங்கமாகிவிடுகின்ற பெண்ணான பார்வதி மட்டுமன்றி, தாஸியாக இருந்து தேவதாஸை மனதார நேசித்து தூய்மையானவளாக மாறிவரும் சந்திரமுகி, தேவதாஸை பிறழ்வான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் தோழன் பகவான் போன்ற பல பாத்திரங்கள் பின்னர் வரவிருந்த படங்களை பெருமளவு பாதித்துள்ளன. இந்தக் கதையாடல்களில் 'முக்கோண காதல்' சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் சினிமாவில் முக்கோண காதல் ஒரு சட்டகமாக மாறுவதற்கு தேவதாஸ் படமே காரணம். காதல் தோல்விக்கு ஆண்கதாப்பாத்திரம் எப்படிச் சித்தரிக்கப்படும் என்பதற்கான மனப்பாங்கும் உணர்வும் விரக்தியும் கச்சிதமாகப் பொருந்தி வருவதை இதற்கான கதையாடல்களை உருவாக்குவதில் தேவதாஸ் முக்கியம் பெற்றுள்ளது. குறிப்பாக நாகேஷ்வர ராவ் ஏற்றுள்ள பாத்திரம் காதல் தோல்விக்கான குறியீடாக மாறியது. இப்படத்தில் இடம்பெற்ற உலகே மாயம் வாழ்வே மாயம்/ நிலையேது நாம் காணும் சுகமே மாயம் என்ற பாடல் விரக்தி உணர்வையும் வாழ்க்கை நிலையின்மையையும் மிக நுட்பமாகவும் அழகாகவும் வெளிப்படுத்துகிறது. 28 வயதிலேயே அமரரான இசைவல்லுநர் சி.எஸ்.சுப்பராமன் இசையமைத்த இந்தப் பாடல் இன்றும் காதல் தோல்வியின் அழகியலைக் காட்டுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

## தமிழ் சினிமாவின் புதிய திசை



இராகவன்

# ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

தமிழ் சினிமாவின் போக்கில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியே தீருவது என்று கங்கணங்கட்டிப் படங்களைச் சளைக்காமல் தொடர்ந்து தந்து கொண்டிருக்கும் இயக்குநர்களில் முக்கியமானவர் மிஷ்கின். 'சித்திரம் பேசுதடி' யில் தொடங்கி அஞ்சாதே; 'யுத்தம் செய்'; 'நந்தலாலா'; 'முகமூடி' என வரிசையாக வித்தியாசமான திரைப்படங்களை இயக்கிய அவரது அண்மைய திரைப்படந்தான் ஓநாயும் ஆட்டுக்குட்டியும். கதாநாயகர்களுக்காக பன்ச் வசனங்களுடன் திரைக்கதையமைக்கும் மரபொன்று பொதுவாக தமிழ் சினிமா இயக்குநர்களிடமுண்டு. அந்த மரபிலிருந்து முற்றிலும் வேறுபட்டுத் திரைக்கதையமைத்த பின் நடிகர்களைத் தேர்வு செய்வதுதான் மிஷ்கினின் தனித்துவம். திரைக்கதைக்கு நடிகர் பொருத்தமில்லாத போது தானே பாத்திரமேற்று நடிக்கவும் செய்வார். நந்தலாலா திரைப்படத்தில் முதலில் இவ்வாறு நடித்தவர் இப்போது ஓநாயும் ஆட்டுக்குட்டியிலும் ஓநாயாக நடித்துள்ளார். நந்தலாலாவில் அவர் ஏற்று நடித்திருந்த மனநோயாளி பாத்திரத்தையும் இத்திரைப்படத்தில் நடித்திருக்கும் ஓநாய் பாத்திரத்தையும் அவரால் மட்டுமே நடித்திருக்க முடியும் எனும் அளவிற்கு தனித்துவங்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றுவரை தமிழ்த்திரைப்படங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபின் கூறுகளை ஓநாயும் ஆட்டுக்குட்டியும் மொத்தமாக உடைத்தெறிந்திருக்கிறது. பாடல்கள் எதுவுமில்லை. கதாநாயகி இல்லை. பன்ச் வசனங்கள் இல்லை. நகைச்சுவையில்லை. பின்னணி இசையில்லை. அதுகூட முன்னணி இசைதான். இசை வழங்கியிருப்பவர் இளையராஜா. அவர் இசைஞானிதான் என்பதைத்திரும்பவும் ஒரு தடவை உறுதிசெய்யும் வகையில் முன்னணி இசைதரும் அனுபவம் உச்சமானது.

தமிழில் இதுவரை நல்லதொரு அக்ஷன் த்ரில்லா படங்கூட வெளிவரவில்லையே என்பவர்களின் மனக்குறையை இப்படம் தீர்த்து வைத்திருக்கிறது. நகரமெனும் கொங்கிறீட் வனத்தில் வசிக்கும் விலங்குகளின் வேட்டை பற்றியது தான் இத்திரைப்படம். இங்கே இரண்டு ஆட்டுக்குட்டிகள் வருகின்றன. ஓர் ஆட்டுக்குட்டி குண்டடிபட்டுக் கிடக்கும் ஓநாயைக் காப்பாற்றுகிறது. ஓர் ஆட்டுக்குட்டி ஓநாயால் அநியாயமாகக் கொல்லப்படுகிறது. நியாயமான காரணங்களுக்காக வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்ட ஓநாய் ஒரு நாள் அநியாயமாக ஓர் ஆட்டுக்குட்டியைக் கொன்று விடுகிறது. அதன்பின் தன்னால் கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியின் குடும்பத்தைக் கரடிகளிடமிருந்து காப்பாற்ற அந்த ஓநாய் மேற்கொள்ளும் போராட்டமே ஓநாயும் ஆட்டுக்குட்டியும். குண்டடிபட்டு வீதியில் கிடக்கும் ஓநாயை (மிஷ்கின்) தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்குப் போகிறது ஆட்டுக்குட்டி(ஸ்ரீ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே பொலிஸ் கேசெனச் சிகிச்சை யளிக்க மறுக்கின்றனர். ஆட்டுக் குட்டி குண்டடிப்பட்ட ஓநாயோடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்போகிறது. அங்கே நிலை யப் பொறுப்பதிகாரி இல்லையெனக் கூறிக்காத்திருக்கச் சொல்கின்றனர். அந்த இடைவெளிக்குள் ஓநாயின் கைக்கடிகாரத்தை பொலிஸ்காரன் திருடிக்கொள்கிறான். அங்கிருந்து ஓநாயுடன் ஆட்டக்குட்டி தப்பிச் செல்கிறது. இதற்கிடையில் ஓநாயின் இதயத்துடிப்பைச் சீரா க்கி மோட்டார் சைக்கிளில் கொண்டுசெல்ல ஒருமன நிலை பிறழ்ந்த பிச் சைக்காரன் ஆட் டுக்குட்டிக்கு உதவுகிறான். இவ்வி தம் சட்டகம் சட்டகமாக தனிமனித நடத்தைப் பாங்குகள் காட்சியாக்கப் பட்டிருப்பது கவனிப்பிற்குரியது.

வேறுவழியின்றி குண்டடிபட்ட ஓநாயைத் தனது வீட்டிற்கு எடுத்து வரும் மருத்துவக் கல்லூரி மாணவ னான ஆட்டுக்குட்டி கைத்தொ லைபேசி வழியே தனது பேராசிரியரு டன் தொடர்புகொண்டு அவரது வழி காட்டலில் இரவோடிரவாக ஓநாய்க்கு அதீத மயக்கமருந்து கொடுத்துச் சத்திரசிகிச்சை செய்து முடிக்கக் காலையில் ஓநாய் தப்பித்துச் சென்று விடுகிறது. ஓநாயைக் காப்பாற்றிய தற்காக ஆட்டுக்குட்டியின் அண்ண னும் மனைவியும் அவனுடன் சேர்த்துக் கைதுசெய்யப்பட்டு காவல்துறையினரால் தீவிர விசாரணைக்குட் படுத்தப்படுகின்றனர். இந்நிலையில் ஆட்டுக்குட்டியின் கைப்பேசிக்கு ஓநாய் அழைப்பெடுத்து அவனைச் சந்திக்கவிருப்பதாகவும் சந்திக்கவி ருக்கும் இடத்தையும் குறிப்பிட அதையொரு சந்தர்ப்பமாகப் பயன் படுத்தி ஓநாயைக் கைதுசெய்யக் காவல்துறை வியூகம் வகுக்க அந்த வியூகத்தை உடைத்துக்கொண்டு ஓநாய் ஆட்டுக்குட்டியையும் தன்னு டன் அழைத்துக் கொண்டு தப்பித்து விடுகிறது. ஓநாயின் உலகத்துள் நுழையும் ஆட்டுக்குட்டி முதலில் ஓநாயை ஒரு வேட்டை மிருகமாக எண்ணிக் கொன்றுவிட்டுத் தப்பித் துக்கொள்ள முனைகிறது. இறுதியில் ஓநாய் எந்தளவுக்கு நியாயமும் தரு மமும் கருணையுங் கொண்ட விலங் கென்பதை ஆட்டுக்குட்டி உணரும் போது ஓநாய் தன்னைத்தானே மாய்த் துக் கொள்கிறது.

அநேகமாக எல்லாக் காட்சிகளுமே இரவில் நடைபெறுவதாகவே வரு கின்றன. ஒளிப்பதிவாளர் பாலாஜி வி.ரங்கா ஓர் ஆந்தை இருளும் ஒளி யும் கலக்கும் இரவினைக் கண்கா ணிப்பதைப் போல சிறப்பாகக் காட்சி களைத் திகிலூட்டும் விதத்தில் ஒளிப் பதிவு செய்துள்ளார். துப்பாக்கி வெடிக்கும் ஒவ்வொரு காட்சியும் பார்வை யாளர்களைத் திடுக்கிட வைக்கிறது. இதெல்லாம் ஏன் நடக்கிறது என்பதற் கான காரணத்தை இறுதியில் அந்தக் கல்லறைத் தோட்டத்தில் மெழுகு வர்த்திகளை ஏற்றிவைத்து மிஷ்கின் ஒரு கதைவடிவில் சொல்லும் காட்சி இதுவரை வேறு தமிழ்த்திரைப் படங் களில் இடம்பெறாததும் புதுமையா னதும் பார்வையாளர்களைக் கசிந்து ருக வைப்பதுமாகும். உச்சக்காட்சியில் ஓநாய் தன்னை தானே மாய்த்துக்கொள்ளும் காட்சி பார்வையாளனுக்கு முகமூடியில் அங்கு சாமி தன்னைத் தானே மாய்த் துக்கொள்ளும் காட்சியில் உணரும் இனம்புரியாத வலியைப் போன்றே இன்னொரு விதமான வலியை உணர்த்துகிறது. அந்த வலி ஓநாய் 14 பேரைக் கொன்றவன் என்பதையெல் லாம் மறக்கடித்து விடுகின்றது. இத்தி ரைப்படத்தில் குறிப்பிட்டாக வேண் டிய மற்றொரு விடயம் மலையாள த்திலும் தமிழிலும் நன்கறியப்பட்ட இசை விமர்சகர் ஷாஜியை ஒரு காவல்துறை அதிகாரியாக மிஷ்கின் இதில் நடிக்க வைத்துள்ளார். இதைத் தவிர இத்திரைப்படத்திற்கான சுவ ரொட்டிகளைப் பல இடங்களிலும் மிஷ்கின் தானே கொண்டு சென்று ஒட்டியிருக்கிறார். இதெல்லாம் மாற்றமுடியாத நியதியன்றே! ■

---

*(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அந்த வழியால்தான் செல்ல வேண் டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருக்கின்றது.

சமீப நாட்களாக அமெரிக்கா காண் பித்துவந்த இறுக்கமான நிலைப்பாட் டில் தளர்வு ஏற்பட்டதற்கு பின்னால், இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் இருப்பதாகவும் ஒரு கருத்துண்டு. இந்தியாவின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியும். ஆனால் ஏன் அவுஸ்திரேலியா இலங்கை விட யத்தில் இந்தளவு தூரம் எதிர்மறை யாக இருக்கின்றது? இத்தனைக்கும் அவுஸ்திரேலியா, அமெரிக்காவின் மூலோபாய பங்காளியாகும். இந்தி யாவைப் பொறுத்தவரையில் இலங் கையின் மீதான ஒரு சர்வதேச விசார ணைக்கு ஆதரவளிப்பதானது அதனளவில், பின்னடைவான ஒன் றாகவே நோக்கப்படும். இலங்கை யின் மீதான இந்தியப் பிடி முற்றிலு மாக தளர்ந்துவிடவும், கொழும்பு முற்றிலுமாக இந்தியாவிலிருந்து விலகிவிடுவதற்குமான சூழலை தோற்றுவித்துவிடலாம். எனவே, அதனைக் கருத்தில் கொண்டு நோக் குமிடத்து சர்வதேச விசாரணையை புறம்தள்ளுவதே இந்தியாவிற்கு உகந்தது. எனவே, இந்தியா முடிந்த வரை இலங்கையின் மீதான அமெ ரிக்காவின் மென் அழுத்தங்களுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை, அதன் ஊடாக இலங்கையை முற்றிலுமாக சீனாவின் பக்கமாக சாய்ந்துவிடாத வாறும் ஒரு பிடியை பேணிக்கொள்ள முற்படும். ஆனால் இலங்கையின் மீதான அழுத்தங்களின் ஊடாக அமெரிக்கா எத்தகைய நலன்களை இலக்கு வைத்துள்ளது என்பது வேறு விடயம். அது பற்றி சில ஊகங்கள் இருந்தபோதும், அது துல்லியமற்ற ஒன்றாகவே இருக்கின்றது. ஒட்டு மொத்தத்தில், அமெரிக்காவின் இலங்கையின் மீதான எதிர்கால அழுத்தங்களில் தமிழர் விவகாரமா னது, ஒரு தனித்துவமான விடயமாக நோக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் சற்று மங்கலாகவும், தெளிவற்றதாக வுமே காணப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் பரவல்



ஆதிசேனன்

# ந.பாலேஸ்வரி (1929 - 2014)

ஈழத்து தமிழ்ச்சூழலில் அதிகமான நாவல்களை எழுதிய பெண் எழுத்தாளர் நா.பாலேஸ்வரி. இவர் கடந்த மாதம் (27.பெப்ரவரி 2014) காலமாகிவிட்டார். பொதுவாக இவர் பற்றிய பேச்சும் உரையாடலும் பலவகையில் இன்னும் விரிவாக்கப்படவில்லை என்றே கூறலாம். இலக்கியத் தகுதியற்ற எழுத்துகளை எழுதியுள்ளார் என்று ஒற்றைப் பரிமாணத்தில் இவரை எளிமையாக மதிப்பீடு செய்யும் மனப்பாங்கு வலுவாக உள்ளது. இவரது இறப்புக்குப் பின்னராவது நாம் இந்தப் பெண் படைப்பாளிகள் பற்றி காய்தல் உவத்தலின்றி பேசவேண்டும்.

நமக்கு நாவலின் தமிழ் மயப்பாடு பற்றிய அடிப்படையான பிரச்சினைகள் நோக்கிய கவனக் குறிப்பு முக்கியம். குறிப்பாக தமிழ் நாவலின் வளர்ச்சியில் அதில் தமிழ் மய ஊடாட்டத்தில் தமிழ்மய சுவறலில் அது எத்தகைய பிரச்சினையை எதிர் நோக்கிற்று என்பதற்கான ஆய்வு நோக்கு விரிவாக்கம் பெற வேண்டும். இங்கு பாலேஸ்வரி போன்றவர்களின் காத்திரமான இலக்கியத்திற்கும் நுகர்ச்சி முறைமைப்பாங்கான இயக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை வற்புறுத்துவதற்கான எத்தகைய தன்மையைக் கொண்டுள்ளன என்பது குறித்து ஆழமான புரிதல் வேண்டும். இவர் காலத்து ஏனைய சக படைப்பாளருடன் இவரை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பாலேஸ்வரியின் எழுத்துச் சார்ந்த மதிப்பீடு என்ன? வெகுஜன வாசிப்பிற்கு பாலேஸ்வரியின் எழுத்துகள் பயன்பட்டனவா? இதுபோன்ற சில அடிப்படையான கேள்விகளை எழுப்பி சிந்திக்கவும் வேண்டும். தற்போது பாலேஸ்வரியின் மறைவு இதற்கான அவசியத்தை உருவாக்கியுள்ளது.

பாலேஸ்வரி திருகோணமலை மாவட்டம் மனையாவழி கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாலசுப்பிரமணியம் - கமலாம்பிகைக்கு மகளாக டிசம்பர் 07. 1929 இல் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை சண்முகா வித்தியாலயத்தில் பெற்றார். தொடர்ந்து யாழ்ப்பாணம் சுன்னாகம் ஸ்ரீஸ் கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருமலை புனித மரியாள் கல்லூரி முதலானவற்றிலும் கல்வி கற்றார். பின்னர் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக வெளிவந்தார். பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றியவர்.

பாலேஸ்வரியின் முதல் கதையான 'வாழ்வளித்த தெய்வம்' தினகரன் பத்திரிகையில் 1957 ஆம் ஆண்டு பிரசுரமானது. அன்றிலிருந்து இவர் தொடர்ந்து எழுத்துலகில் தீவிரமாக இயங்கிவந்துள்ளார். சுமைதாங்கி (1973), தெய்வம் பேசுவதில்லை (2002) முதலான சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். சுடர் விளக்கு (1966) எனும் நாவலை திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது வெளியீடாக வெளியிட்டுள்ளது. பூஜைக்கு வந்த மலர் (1971), உறவுக்கப்பால் (1975), உள்ளக் கோயில் (1983) முதலான நாவல்களை வீரகேசரி பிரசுரம் வெளியிட்டுள்ளது. இதைவிட கோவும் கோயிலும் (1990), உள்ளத் தினுள்ளே (1990), பிராயச்சித்தம் (1984), மாது என்னை மன்னித்து விடு (1993), எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு (1993), அகிலா உனக்காக (1993), தத்தைவிடு தூது (1992), நினைவு நீங்காதது (2003) முதலான பன்னிரண்டு நாவல்களையும் வெளியிட்டுள்ளார். இவர் பாப்பா, ராஜி ஆகிய புனைப்பெயர்களிலும் எழுதி வந்துள்ளார். இவருக்கு பல்வேறு விருதுகளும் உயர் கௌரவங்களும் கிடைத்துள் ளன.

(58ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(66ஆம் பக்கத்தொடர்ச்சி..)

1. NRI - Non Resident Indians - வதிவற்ற இந்தியர்கள் - இவர்கள் தொழில் நிமித்தம் இந்தியாவுக்கு வெளியே வாழ்பவர்கள்.

2. OCI - Overseas Citizens of India - கடல்கடந்து வாழும் இந்தியர்கள் - இவர்கள் இந்தியாவுக்கு வெளியே வேறு நாட்டுப் பிரஜையானாலும் இந்தியர்களாக மதிக்கப்பட்டு நிரந்தர விசா மூலம் இந்தியப் பிரஜை அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள். இந்தியாவில் விவசாய நிலம் வாங்க முடியாது, வாக்களிக்க முடியாது என்பன தவிர்ந்த மற்ற எல்லாத் தகுதியுமுடைய இந்தியர்கள் இவர்கள். இலங்கையில் கொழும்பு, கண்டி உள்ளிட்ட நகரங்களில் வாழும் வர்த்தகச் சமூகத்தினர் இந்த வகுதியில் இடம் பிடித்துக் கொள்கின்றனர்.

3. PIO - Persons of Indian Origin - இந்திய வம்சாவளியினரான ஆள்- இவர்கள் இந்திய வம்சாவளியினராக இந்தியாவுக்கு வெளியே வசிக்கும் வேறு நாட்டுப் பிரஜைகள். உலகளாவிய ரீதியல் இலட்சக்கணக்கான இந்திய வம்சாவளியினர் இந்தத் தகுதியைப் பெறுகின்றனர். GOPIO (Global Organization for Persons of Indian Origin) என்பதே அவர்களின் கூட்டிணைவுதான். இந்தத் தகுதியைப் பெறுபவருக்கு இந்திய வம்சாவளி PIO card எனும் அடையாள அட்டை போன்ற ஒன்றை இந்திய அரசாங்கம் உலகளாவிய ரீதியில் வழங்கிவருகிறது. ஆனால் இலங்கையில் வாழும் 'மலையக மக்களுக்கு' இந்த PIO அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. PIO அந்தஸ்து இல்லாத இலங்கையில் GOPIO இயங்குவதும் பெரும் விந்தைதான்.

இந்த நிலையில் மலையக மக்களைத் தொடர்ச்சியாகவும் இந்திய வம்சாவளியாகப்பதிவு செய்து கொண்டு வருவது கேள்விக்குட்படுத்த வேண்டிய ஒன்றே. மறுபுறம் 'இலங்கைத் தமிழரா'கவும் பதிவு செய்துகொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்கள் 'இந்திய வம்சாவளித் தமிழரா'கவே தம்மைக் குறிப்பிடுவது பரிதாபகரமான நிலைமையாகும்.




எனவே 'மலையக மக்கள்' எனக் குறிப்பிடுவதே பொருத்தமாகும் என வாதிடுவோர் கையிலும் சில முக்கிய பணிகள் காத்திருக்கின்றன. இந்தப் பதத்தை அரச பதிவுகளில் உத்தியோகபூர்வமாகக் கொண்டுவரும் பொறுப்பு அவர்களுடையது. இலங்கையில் வாழும் பல்வகை இஸ்லாமியர்களும் இலங்கைச் சோனகர்கள் (Moors) என அரச பதிவுக்குள் அடக்கும் முன்னெடுப்பை முஸ்லிம் சமூகம் செய்ததைப்போல, இந்திய வம்சாவளித் தமிழரைக் குறிப்பதற்கு 'மலையக மக்கள்' எனும் தொடரை அரச மட்டத்தில், பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையாகக் கொண்டுவருவதன் ஊடாகவே இந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும். மலையக மக்களை இலங்கையில் ஒரு தேசிய இனமாக நிலைத்திருக்கச் செய்யமுடியும்.

இதனை மலையக அரசியல்வாதிகளே செய்யவேண்டும் எனக் கூக்குரலிட்டு அறிக்கைவிடுத்துவிட்டு அமைதிகாக்காது, அதனைச் செய்வதற்கான கலந்துரையாடல்கள் சிவில் சமூக மட்டத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதன் குறைநிறைகள் கலந்துரையாடப்பட்டு ஒரு கருத்தாக்கப்பத்திரம் (Concept Paper) தயாரிக்கப்பட்டு மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ அல்லது அக்கறையுடைய வேறு தரப்பினரிடமோ அதனைக் கையளித்து செயல்வடிவில் சாதிக்கும் முனைப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இங்கு அக்கறையுள்ள தரப்பினர் எனும்போது, 'தமிழ்நாட்டில் இலங்கையர்களுக்கான அகதி முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதற்கு' 2008ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவும் முன்னெடுப்புமே பயன்பட்டது என்பதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அந்தக்கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனே அதற்கான பாராளுமன்றக் குழுத்தலைவராகவும் செயற்பட்டு அந்தச் சட்ட மூலத்தை (2009 5ஆம் இலக்க நாடற்றோருக்கான குடியுரிமை வழங்கும் திருத்தச் சட்டம்) வெற்றிபெறச் செய்தார். அந்தக் குழு முன்மொழிந்த முன் அறிக்கையில் சில மலையகத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிடவேயில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, இது குறித்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் 'தொண்டா-திகா' சண்டையாக மாத்திரம் எழுந்துவிட்டு அடங்காத வண்ணம், பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் மீது அக்கறைகொண்ட அனைத்துக் கட்சிகளிலும் உள்ள நல்லெண்ணம் கொண்டோரைச் சந்தித்து, விளக்கி சாதிக்க வேண்டிய பொறுப்பு மலையக சிவில் சமூகத்துக்கு உரியது. இதுவே மலையகத் தேசியம் குறித்த தற்போதைய உரையாடல்களின் அடுத்த கட்ட நகர்வாக அமைய முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# மலையகத் தேசியம்

மலையகத் தேசியம் குறித்து சமகாலத்தில் இடம்பெறும் கதையாடல்கள், உரையாடல்கள், அதனை நிறுவுவதற்கான முனைப்புகள், முயற்சிகள் பலரதும் கவனத்தைப் பெற்று வருகிறது. அரசியல், சமூக பண்பாட்டு, கலை இலக்கிய அசைவியக்கங்களில் இந்த மலையகத்தேசியம் பற்றிய உரையாடல் இடம்பெற்று வருவதனை அவதானிக்கலாம்.

'மலையகம்' என்ற உணர்வை அரசியல் மயப்படுத்துவதற்கு இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்த சூழ்நிலை பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது எனலாம். 'தொழிலாளர்' என்ற சொல்லாடலுடன் இயங்கிய மலையக அரசியல் (கட்சிகள்) சூழலில், 'மலையக மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியின் தோற்றம் ஒரு பாரிய அதிர்வை ஏற்படுத்தியது. இதனை அறிந்த ஆளும் தரப்பு ஆரம்பத்திலேயே அதனை முடக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. அந்தக் கட்சியும் வடக்கு, கிழக்கு விடுதலை இயக்கங்களுடன் தத்துவார்த்த ரீதியில் அல்லாது பேணிவந்த (ஈரோஸ் மற்றும் புளொட் உடன்) தொடர்புகள் பின்னாளில் விடுதலைப் புலிகளுடனான தொடர்பாகவே மாற்றம்பெற்று சிறைவாசம் அனுபவிப்பது வரை சென்றது மட்டுமல்லாது, மலைய்கத்தில் பண்பாட்டுத் தளத்தில் கூட மலைய்கத் தேசிய முன்னெடுப்பை ஆபத்தான விடயமாக மாற்றிப்போட்டது.



மல்லியப்புசந்தி திலகர்

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவுக்குப்பின்னர் 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு மலையக மக்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து மதிப்பிட, மலையக மக்களின் அடையாளம் பற்றிய கேள்வியைத் தோற்றுவித்துள்ளது. இலங்கை அரச பதிவுகளில் 'இந்திய வம்சாவளித் தமிழர்' என்றும் 'இலங்கைத்தமிழர்' என்றும் வகைப்படுத்தல்கள் இருந்தாலும் 'மலையக மக்கள்' என்ற வகைப்படுத்தல் இல்லை. எனவே தாங்கள் இலங்கையர்கள் என்ற உணர்வுபெற்ற மலையக மக்கள் தங்களை 'இலங்கைத் தமிழர்' என்ற வகுதியினராகப் பதிவு செய்ய எத்தனிக்க அது கணக்கெடுப்பில் பாரிய மாற்றத்தைக் காண்பிப்பதாக அமைந்து விட்டது. இதனால் இவர்கள் மலையக மக்களா? இந்திய வம்சாவளித் தமிழரா? எனும் உரையாடல்கள் பல்வேறு தளத்தில் இடம் பெறச் செய்துள்ளது.

மலையகத்தின் கல்விசார், கலை, இலக்கிய, பண்பாட்டு ஆளுமைகளாகத் திகழும் பல்வேறு தனிப்பட்டவர்களும் அமைப்புகளும் இந்த விடயம் குறித்து பரவலாகப் பேசியும் எழுதியும் வருகின்ற நிலையில், கடந்த 23.02.2014 திகதியன்று ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியில் அதன் விரிவுரையாளர்களில் ஒருவரும் மலையக மக்கள் முன்னணிச் செயலாளர் எ.லோரன்ஸின் சகோதரருமான மெத்யுஸை இணைப்பாளராக்கி, இங்கிலாந்தில் வசிக்கும் மலையகத்தவரான ரட்ணம் நடராஜ் என்பவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் கவனத்தைப்பெற்றுள்ளது. முகநூல் வழியிலும் எஸ்.எம்.எஸ் எனும் குறுஞ்செய்திகள் ஊடாகவும் உத்தியோகபூர்வமற்றவகையில் மலையக அக்கறையுடையோரை அழைத்து 'மலையகம்' குறித்து கலந்துரையாட எத்தனிப்புச் செய்யப்பட்டது. பெரும்பாலான மலையக ஆளுமைகள் கலந்துகொள்வதில் ஆர்வம் காட்டாத அதேவேளை கலந்துரையாடலின் இறுதித் தருணத்தில் இலங்கைக்கான இந்திய உதவித் தூதுவர் (கண்டி) நடராஜன் வருகை தந்துள்ளமை தற்செயல் நிகழ்வாகக் கருத முடியாததாகவும் உள்ளது. கலந்துரையாடலின் இறுதியில் ஏற்பாட்டாளருக்கும் இணைப்பாளருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியதாகவும் அறியமுடிகின்றது. இந்திய நிலையில் கடல்கடந்து வாழும் இந்தியர்கள் அல்லது அதன் வம்சாவளியினர் பின்வரும் வகையில் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

**(65ஆம் பக்கம் பார்க்க..)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான வீரகேசரி பத்திரிகை இப்பொழுது
புதுமெருகுடன் இ-பேப்பர் வடிவில்....


VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

முழுத் தெற்காசியாவிற்கே அமெரிக்கா அச்சுறுத்தல்

இலங்கைக்கான தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ள ஆப்கான் ஜனாதிபதி

ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டம் குறித்த நடவடிக்கைக்கு உயர் மட்ட குழு

ஜெனிவா பிரேரணைக்கும் கொட்டகலையில் நடத்தப்பட்ட யாக பூஜைக்கும் தொடர்பில்லை

பொருளாதார ஒத்துழைப்பு குறித்து ...னா – இலங்கை பேச்சுவார்த்தை


படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு பாமாவில் ஆத்மா சாந்தி பிரார்த்தனை

'நவநீதம்பிள்ளைக்கு அதிகாரமில்லை'

Subscribe now!

Go to epaper.virakesari.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org